Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

# மதுரைவீரன் அம்மானை
## (பதிப்பாசிரியர்: ம. சீராளன்)

**maturai vIran ammAnai**
**edited by M. cIrALan**
**In Tamil script, unicode/utf-8 format**

**Acknowledgements:**

Our Sincere thanks go to Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.

This e-text has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2023.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of Tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website
https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

**மதுரைவீரன் அம்மானை**

**(பதிப்பாசிரியர்: *சீராளன்* )**

**Source: நூல் பற்றிய விவரங்கள்**

மதுரைவீரன் அம்மானை

பதிப்பாசிரியர் : ம. சீராளன், பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.

நூலகர் (ஓய்வு), சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

1999

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 401

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

விலை ரூ.24-00

-------------

**நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு**

நூற்பெயர் : மதுரைவீரன் அம்மானை
பதிப்பாசிரியர் : திரும. சீராளன்
வெளியிடுபவர் : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்: 401
மொழி : தமிழ்; விலை : ரூ. 24; பக்கங்கள் : 122
பதிப்பு : முதல்பதிப்பு
வெளியீட்டு நாள்: மார்ச் 1999 .
அச்சிட்டோர் : மகாலிங்கம் அச்சகம், தஞ்சாவூர்
பொருள் : இலக்கியம்

------------------

**மதுரைவீரன் அம்மானை**

சரசுவதி மகால் நூலகம் பன்மொழிச் சுவடிக் கருவூலமாகத் திகழ்ந்துவருகின்றது. இந்நூலகத்தை அணிசெய்கின்ற அரிய சுவடிகளை நூல்களாகப் பதிப்பித்து வெளியிடுகின்ற அரும்பணியையும் தொடர்ந்து இந்நூலகம் ஆற்றிவருகின்றது.

இலக்கணம், இலக்கியம், சோதிடம், மருத்- துவம் முதலிய துறைகளைச் சார்ந்த பல நூல்கள், இந்நூலக வெளியீடுகளாக மலர்ந்துள்ளன, இலக்கிய வகையுள் ஒன்றாக ஒளிரும் 'அம்மானை' இலக்கிய வகை நூல்கள் பலவற்றையும் இந் நூலகம் ஏற்கெனவே

வெளியிட்டுள்ளது. அவ்வரிசையில் தற்பொழுது ‘மதுரைவீரன் அம்மானை' எனும் இந்நூல் சுவடியிலிருந்து பதிப்பித்து வெளியிடப்படுகின்றது.

புகழ்வாய்ந்த சமூகக்கதைப்பாடல் இலக்கியமாக இம் 'மதுரைவீரன் அம்மானை' நூல் விளங்குகின்றது.

இலக்கியநயம் வாய்ந்த இந்நூல், இந்நூ லகத் தமிழ்த்துறையின் 1692 ஆம் எண்ணிட்ட ஓலைச்சுவடியை அடிப்படையாகக்கொண்டு, இந்- நூலகத்தின் முன்னாள் நூலகர் திரு ம. சீராளன் அவர்கள் பதிப்பித்து அளித்துள்ளார். பதிப்பாசிரிய ருக்கு எனது பாராட்டுகள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி- யை நல்கியுள்ள மையஅரசு பண்பாட்டுத் துறைக்கு எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன். நூலகத்திற்குப் பராமரிப்பு நிதியினை வழங்கிவரும் தமிழக அரசுக்கும் எனது மனமார்ந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள இந்நூலக நிருவாக அலுவலர் திரு நா. தியாகராஜன் எம். ஏ., பி. எல். அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு அ. பஞ்சநாதன் எம். ஏ., எம். எல். ஐ. எஸ். அவர்களுக்கும், இந்நூலினை நன்கு அச்சிட்டளித்த தஞ்சாவூர் மகாலிங்கம் அச்சகத்தாருக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நூல், தமிழிலக்கிய அன்பர்களின், குறிப்பாக நாட்டுப்புறக் கதைப்பாடல் இலக்கிய அன்பர்கள் மற்றும் ஆய்வாளர்களின் நல்வரவேற் பைப் பெறுமென நம்புகின்றேன்.

தஞ்சாவூர் முனைவர் மூ. இராசாராம், இ ஆ ப.
30-3-99 மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

------------------

**ஆய்வுரை**

மதுரை வீரன் அம்மானை' என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல், தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் வாயிலாக வெளிவருகிறது. தமிழகத்தில் ஐயனார், அம்மன் கோயில்களில் சிறு தெய்வமாக இடம்பெற்று வணங்கப்படும் வீரன் மதுரை வீரன்'. மதுரை வீரன் கதையைத் தமிழக மக்கள் நன்கு அறிவர்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகம் இதுவரை 15 அம்மானை நூல்களைப் பதிப்பித்து வெளியிட் டுள்ளது. அவையாவன :-

1. அதிரியர் அம்மானை
2. அரிச்சந்திரன் அம்மானை
3. இராமய்யன் அம்மானை
4. (ஸ்ரீ) இராமர் அம்மானை
5. கஞ்சனம்மானை
6. காஞ்சி மன்னன் அம்மானை
7, 7. சித்திர புத்திரர் அம்மானை
8. சீவக சிந்தாமணி அம்மானை
9. சுந்தரி அம்மானை
10. ஞானவம்மானை
11. துரோபதை அம்மானை
12. (ஸ்ரீ) பார்சுவநாதர் அம்மானை
13. பாரத அம்மானை
14. மார்க்கண்டேயன் அம்மானை
15. வீரையன் அம்மானை

-----------------

## கதைச்சுருக்கம்

மதுரைவீரன் காசிமன்னன் மகனாகப் பிறந்தான் எனினும் மாலையொடு பிறந்ததால் காட்டில் விடப் பட்டான். சக்கிலியர் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் இவனை எடுத்து வளர்த்தான். இவ்வீரன் சித்திகள் பெற்றுப் பொம்மண நாயக்கன் மகள் பொம்மியைக் காந்தர்வத்தால் மணந்தான். பின்னர்த் திருச்சிராப் பள்ளியில் அரசு செலுத்தும் விசயரங்க சொக்கலிங்க வேந்தரிடம் மாதமொன்றுக்கு ஆயிரம்பொன் பெற்றுக் கொண்டு நற்சேவக பதவியில் அமர்ந்தான். அங்குத் தனி வீரனாயிருக்கையில்,

திருமலைநாயக்கர் மதுரையில் இருந்து கள்ளர்பயம் அதிகமாயிருத்தலின், தாங்கள் வந்து அவர்களை யடக்க வேண்டுமெனக் கேட்டுகொண்டார். இதனை விசயரங்க சொக்கலிங்கருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். அவர் இவ்வீரையனை மதுரைக்குச் சென்று அக்கொடிய கள்ளர்களையடக்கி வருவாயாக என்று ஆணையிட்டார். மதுரைவீரன் அவ்வண்ணமே தென்மதுரையிற் சென்று அக்கள்ளர்களை ஒழித்துக் கள்ளர்பயம் நீக்கினான் அடுத்துத் திருமலைநாயக்கர் அரண்மனையிலே அமர்ந்திருந்து விதிவசத்தால் அந் நாயக்கருக்கு ஆலத்தி எடுக்கும் தாதிப்பெண் வெள்ளச்சி என்பவளை மணந்தான். அவளை அழைத்துச் செல்லும் போது காவலர்களால் கை கால் வாங்கப் பெற்றான். இறுதியில் அத்திருமலைநாயக்கர் மீனாட்சியம்மையை வேண்டிகொள்ள

முன்போல வேகைகால்களைப்பெற்றுக் கடைசியில் பொம்மியம்மாள், வெள்ளை-யம்மாள் இவர் களுடன் தீக்குழியில் குதித்துத் உயிரைப் போக்கிக் கொண்டு தெய்வமானான். மீனாட்சியம்மன் சந்நிதியிலே கம்பத்தடியில் பூசைகொண்டிருக்கிறார், மேலும் இவரை வீரனாக மக்கள் இன்றும் வணங்குகின்றனர் என்ற செய்தியை விரிவர்க உணர்த்துகிறது இந்நூல்.

கதைபற்றி மாறுபட்ட கருத்துக்கள்

இந்தவீரன் கதையைப் பற்றி மாறுபட்ட கருத் துக்கள் நிலவுகின்றன. மதுரை வீரனின் வரலாற்றை அறிவதற்கு 'மதுரை வீரன் சாமி கதை' என்னும் நூலும் மக்கள் கூறும் கதைகளும் சான்றுகளாக உள்ளன. காசி மன்னனுக்கு மகனாகப் பிறந்து சக்கிலியன் ஒருவனால் வளர்க்கப்பட்டவன் வீரையன் என்று சொல்கிறது, மதுரைவீரன் சாமி கதை. அவன் பிறவியிலேயே சக்கிலி என்னும் கருத்தும், பாண்டியர் களுக்குக் கப்பங்கட்டிக் கொண்டிருந்த சிற்றரசன் என்னும் கருத்தும் உள்ளன.

பொம்மி என்னும் அரசகுமாரியைத் தூக்கிச்சென்று மணந்தவீரன். பின்னர் வேறு ஓர் அரண்மனை யிலிருந்த வெள்ளையம்மாள் என்ற பெண்ணை விரும் பிய காரணத்தால் தண்டிக்கப்பட்டான். ஆனால் பொம்மியின் தந்தை வீரனைச்சிறைப்பிடித்துத் தண்டித்ததாகக் கூறுவாரும் உளர். மக்கள் அவனைச் சிறு தெய்வமாக வணங்கு-கின்றனர் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை.

மதுரை நாயக்கர்களின் காலத்தில் தான் மதுரை வீரன் வழிபாடு தோன்றியது. அக்காலத்தில் மதுரையில் கொலை, கொள்ளை முதலிய தொல்லை கொடுத்து வந்த கள்வாகளைக் கருவறுத்து நன்மை செய்த காரணத்தால் மக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இவன் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. மதுரை வீரனைக் கருப்புசாமி என்று அழைப்பதும் உண்டு. ஐயனார், அம்மன் கோயில்களில் சிறுதெய்வமாக வணங் கப்படும் வீரனுக்குத் தனிக்கோயில் இல்லை. சில இடங்களில் மதுரைவீரன் பதினெட்டாம்படிக்கருப்பன் என்று அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் பல ஊர்களில் உள்ள ஐயனார் கோயில்களில் வீரனுக்குத் தனிக்கோயில்கள் உள்ளன. தலையில் கொண்டை, கனத்த மீசை, கட்டான உடல் கொண்ட வீரனின் வலக்கையில் வாள், இடக் கையில் கதை, அவனுக்கு முன்பாக ஒரு வேட்டை நாய், எதிரில் ஒன்று அல்லது பல மண்குதிரைகள், இந்த நிலையில் சிலைகள் காட்சி அளிக்கின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள சில வீரன் கோயில்களில் பெரிய

குதிரைகளின் மேலும் குதிரைகளுக்குப் பக்கத்திலும் வாளும் கதையும் வைத்துள்ள பெரிய வீரன் சிலைகளைக் காணமுடியும்.

பிற சுவடிகள் மற்றும் அச்சுநூல்கள்

மதுரை வீரன் அம்மானை என்னும் இந்நூலைப் பதிப்பிக்கும் நிலையில் சுவடிகளிலும், அச்சு நூல்களி லும் வேறுநூலகங்களில் காணப்படுவனவற்றின் பட்டியல் ஒன்று தயார் செய்தேன். ஆய்வாளர்களுக்கு உதவியாக இருக்குமென அதன் விவரங்களைக் கீழே குறித்துள்ளேன்.

**'மதுரைவீரன் அம்மானை' என்ற தலைப்பிலுள்ள ஓலைச்சுவடிகளின் விவரப்பட்டியல்**

மதுரைக் காமராசர் பல்கலைக கழகம், கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்

| ஓலைச்சுவடி எண் | எடுகளின் எண்ணிக்கை | பதிவேட்டு எண் |
|---|---|---|
| 10554 | -- | 94 |
| 10555 | 110 | 2179 |
| 10556 | 112 | 2180 |
| 10557 | 108 | 2181 |
| 10558 | 97 | 1932 |
| 10559 | 70 | 4267 |
| 10560 | 36 | 4269 |
| 10561 | 28 | 11551 |
| 10562 | -- | 8669 |
| 10563 | 124 | 8420 |
| 10564 | -- | 374 |
| 10565 | 68 | 1576 |

**அச்சுப்படிகளின் குறிப்பு**

'மதுரை வீர சுவாமி கதை' என்ற தலைப்பில் சிதம்பரம் கந்தசாமி முதலியார் அவர்களால் சித்தாந்த சைவப் பிரகாச இயந்திர சாலையில் ஸ்ரீமுக வருடம் புரட்டாசி

மீ" ஒரு நூல் அச்சாகியுள்ளது. சிறிய அளவில் உள்ள இந்நூலின் முதல் பக்கத்தில் சரித்திராலங்காரம் மிகச் சுருக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

மேலும் ஒரு நூல் 'மதுரைவீரசுவாமி கதை' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. அது சிதம்பரம் (ரெகு)நாத சுவாமிகளால் பார்வையிடப்பட்டு நுங்கம்பாக்கம் அருணகிரி முதலியார் அச்சேந்திர சாலையிற் கி.பி. 1896 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இதுவும் முற்பிரதி போன்றது.

இந்நூல்களில் சரித்திராலங்காரம் பின்வருமாறு அச்சிடப்பட்டுள்ளது. "இம் மதுரைவீரன் அம்மானையைப் படித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும். சுக்கிர வாரந்தோறும் பூசை செய்பவர்களுக்கும் கல் யாணங் கூடிவரும் உத்தியோகம் வரும். வியாதியால் மெலிகின்றவர்களுக்கு வியாதி நீங்கிவிடும் மனோகவலை நீங்கிவிடும். சகல பாக்கியமும் சந்தான சம்பத்தும் அஷ்டஐஸ்வரியமும் தன, கனக வஸ்துவும், தீர்க்கா யுசும், புத்திர புத்திர சம்பத்தும் மாடுகள் கன்றுகள் தழைத்துப் பயிர்களெல்லாம் நீட்சியை யோங்கி எப்பொழுதும் மறுவில்லாப் பெருமை யுண்டாகும். இந்தபடிக்கு காசி காண்டத்தில் வியாசரால் சொல்லிய கவிகளிலிருந்ததை இக்கதைக்காக மொழிபெயர்த் தருளியது

'மதுரை வீர சுவாமி கதை' என்று மற்றொரு நூல் சென்னை ஸ்ரீமகள் கம்பெனியாரால் புகழேந்திப் புலவர் இயற்றிய பெரிய எழுத்து மதுரை வீரன்கதை ( படங்களுடன் ) அச்சாகி வெளிவந்துள்ளது.

தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தின் வாயிலாக 'வீரையன் அம்மானை என்ற பெயரில் ஒரு நூல் 1978 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலாசிரியர் அம்மானை என்னும் நெடும்பாடல் வகையில் மட்டும் இந்நூலை அமைக்காது வெண்பா, விருத்தம், கலித்துறை. கொச்சகம், தாலாட்டிசைக்கும் தனிநடைப் பாடல் முதலியவற்றால் படைத்துள்ளார்.

**சுவடிக்குறிப்பு:**

இந்தநூலைச் செய்தவர் இன்னாரென்று தெரிய வில்லை நூலாசிரியர் கணபதி, முருகன், சரசுவதி, பரமேசுவரி முதலான தெய்வங்கள்மீது துதிப்பாடல் களும், அவையடக்கமும் பாடியுள்ளார். சுவடியின் முற்பகுதியில் நான்கு ஏடுகள் அப்பகுதியின் கருத்தினைச் சென்னை அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தின் ' மதுரை வீரன் கதை அம்மானை' என்ற சுவடி எண். 2179ல் அமைந்துள்ள 25 அடிகளைக் கொண்டு

நிறைவு செய்துள்ளேன். சுவடியின் ஈற்றுக் குறிப்பில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன.

"சர்வதாரி வருடம் மாசி மீ 2 s திங்கட்கிழமை காளியப்ப கவுண்டரூரிலே யிருக்கும் கொத்துக்கார கருப்ப கவுண்டன் மகன் ஸ்ரீ புண்ணிய குமாரன் எட்டியர் கவுண்டன் மதுரைவீரன் அம்மானை எழுதி முடிந்தது முற்றும். சம்பூரணம் - வாலைஞான சரசுபதி எட்டிக்கார கிருபாகடாச்சம் திருச்சிற்றம் துணை பலம்."

இப்பொழுது வெளிவரும் 'மதுரை வீரன் அம்- மானை' என்னும் இந்நூல் சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்ப்பிரிவிற்கு வளையல் காரன்புதூர் திரு. ஆர். இராதாகிருட்டிணன் அவர்களால் 15-6-1987ல் வழங்கப் பட்ட ஓலைச் சுவடியை (த.எண். 2416/6/6001. 1692) ஆதாரமாகக் கொண்டு பதிப்பித்து வெளியிடப் படுகிறது.

**நூற்சிறப்பு**

இந்நூல் தமிழ்க் கதைப்பாடல்களில் சமூகக் கதைப் பாடல் என்னும் பிரிவைச் சார்ந்துள்ளது. நாட்டுப்புறக் கதைப் பாடலில் நாடோடிப் பாடல் இயல்புகள் அம்மானைப் பாடல்களில் இடம் பெற்று உள்ளன. கொச்சை மொழிகள் அனைவருக்கும் விளங்கும் உவமைகள், உலக வழக்குச் சொற்கள், ஒரு குறிப்பிட்ட சொல்லையே மீண்டும் மீண்டும் சொல்லுதல், சில வகையான அமைப்புகள் போல்வன இப்பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. அம்மானைப் பாடல்கள் பொழுது போக்குக்காக எழுந்தவை யெனினும் அவற்றின் வளர்ச்சி பக்தியையும் தமிழ்ப் பண்பாட்டையும் எடுத்து விளக்குவதாக அமைந்து உள்ளது

இந்நூற் செய்திகள் மதுரை வீரன் கதை, மதுரை வீரன் கெடிகாரம், மதுரை வீரன் சிந்து, மதுரை வீரன் நாடகம் போன்ற நூல்களில் காணக்கிடைக்கின்றன.

வீரர்கள் இறந்த பின்னர் இறைவனிடம் வரம் பெற்றுத் தெய்வமாகின்றனர் என்பது கதைப்பாடல்கள் கூறும் செய்தியாகும். மதுரைவீரன் திருமலை நாயக் கருக்கு உறவான வெள்ளை யம்மாளைக் காமவேகத்தில் கலந்துவிடுகிறான். அதன்காரணமாகக் கொல்லப் படுகிறான்.

"பெண்ணாலே நம்முயிரு பொன்னுலகம் சேருதய்யா" என்று கதறி இறைவனை வேண்டுகிறான். அவனுடைய அழுகுரலுக்கு இறங்கிய இறைவன் 'கம்பத்தடியில்

காத்திருந்து பூசை கொள்வாய்' என்று வரம் கொடுக்கிறார். அவனை அனைவரும் தெய்வ மாக்கி வழிபடுகின்றனர்.

கதை மாந்தர்களின் சிறப்பை மிகைப்படுத்திக் காட்டுவதற்காகச் சில இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை ணைத்துக் கதைகளைப் பின்னுவது வழக்கம். மதுரை வீரன் மாலை சுற்றிப் பிறந்ததும் அவன் இருப்பது நாட்டுக்கு ஆகாது என நிமித்திகர் கூறுகின்றன உடனே அவனுடைய தந்தை காசிராஜன் அவனைக் கானகத்தில் கொண்டு விட்டு விடுகிறான். அக்குழந்தை யை நாகமொன்று காத்து வளர்ப்பதாகக்கதை கூறுகிறது தீயசகுனங்கள், நல்லசகுனங்கள் காணப்படுவதையும் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இக்கதையில் சக்கிலிச்சி ஒருத்திக்குப் பிள்ளை இல்லை. அவள் பிள்ளை வேண்டித் தவமிருக்கிறாள். அப்போது மதுரைவீரன் காட்டில் குழந்தையாக அவள் கையில் கிடைக்கிறான். சக்கிலிச்சி இன்பமாக அக்குழந்தையை எடுத்து வளர்க்கிறாள். பிள்ளை இல்லாவருத்தத்துடன் அவள் காட்டுக்குள் வரும் போது பல நல்ல சகுனங் களைக் காண்பதாகக் கதைப் பாடல் கூறுகிறது.

பலவிதமான கறிவகைகளுடன் விருந்து பரிமாறு வது மதுரைவீரன் கதை, புலந்திரன் களவு மாலை, பவளக்கொடி மாலை முதலிய கதைப் பாடல்களில் ஒரே மாதிரி விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அத்தகைய உணவு வகைகளை உண்ணமுடியாத பாமர மக்களுக்கு இத்தகைய விளக்கப்பகுதிகள் கற்பனையாகச் சுவை விருந்தூட்டி மகிழ்விக்கும்.

**நன்றியுரை**

இந்நூல் வெளிவருவதற்கு அனுமதி வழங்கி, வெளியீட்டு முகவுரை தந்துள்ள மதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர் உயர்திரு முனைவர் மூ. இராசாராம்,இ ஆ.ப. அவர்கட்கும் இந்நூலின்படியினை அச்சேறுவதற்கு முன்நுண்ணாய்வு செய்து கொடுத்த மூதறிஞர் முனைவர் அ. மா. பரிமணம், எம். ஏ. எம் லிட்., பிஎச்.டி., அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பு நன்முறையில் வெளிவர ஆர்வமூட்டி ஆவன செய்துள்ள துணை ஆட்சியர் மற்றும் நிர்வாக அலுவலர் திரு நா. தியாகராஜன், எம். ஏ., பி. எல்., அவர்கட்கும் நூலகரும் பதிப்பு மேலாளருமான திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், ஒப்பீடுசெய்ய அச்சுப்படி பெற்றுத்தந்த இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் களுள் ஒருவரான திரு. ய. மணிகண்டன் அவர்கட்கும் என் நன்றியினையும் மகிழ்வையும் உரித்தாக்குகின்றேன்.

இந்நூலினை நன் முறையில் அச்சிட்டுத் தந்த மகாலிங்கம் அச்சகத்தார்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ம. சீராளன்
பதிப்பாசிரியர்

-----------------

**நன்றி**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம் சார்ந்த வளையல்காரன் புதூர் சோதிடர் திரு. ஆர். இராதாகிருஷ்ணன் அவர்கள் 15-6-1987இல் தஞ்சை சரசுவதி மகால் நூலகத் திற்கு அன்பளிப்பாகக் கொடுத்த சுவடி பதிட்பிக்கப் பெற்று நூல்வடிவாக வெளியிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சிகலந்த நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

---------------

**வேண்டுகோள்**

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடி களாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ள ளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, “நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம், 30-3-99

---------------

## மதுரைவீரன் அம்மானை

**காப்பு**

முந்தி முந்தி விநாயகனே முருகா சரசோதி
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்நடவாய்
ஆலடிப் பிள்ளையீரே அகமயில் விநாயகனே
வேலடி பிள்ளையீரே வேறுவினை வாராமல்
த (ள) (ழ)ஞ்சாலுங் கீழிருந்து கண்ணி மதம் பொழியும்

இருண்டாலுங் கீழிருந்து எண்ணை மதம் பொழியும்
நாகமலை தோகைமலை நடுவிருக்கும் வெள்ளிமலை
வெள்ளிமலைக் குள்ளிருக்கும் விநாயகனே முன்நடவாய்
கணபதியை நோக்கிக் கைதொழுவேன் அம்மானை
கணபதி யென்றவர்க்குக் கருமங்களுந் தாந்தொலையும்

வினாயகனைத் தொழுதால் விக்கினங்கள் வாராது
அய்யனே கண்மணியே ஆதிசிவன் புத்திரனே
துய்ய கணபதியே தோகைநல்லாள் புத்திரனே
காமாட்சி பெற்றெடுத்த கண்ணே நவமணியே
மீனாட்சி பெற்றெடுத்த மேகவண்ணப் பிள்ளையீரே

அத்தனையுங் கொண்டுவந்து அடைவுடனே
வாரியமுது செய்யும் வைகைநதிப் பிள்ளையீரே நான்படைப்பேன்
கூட்டியமுது செய்யும் குளக்கரையிற் பிள்ளையீரே
நம்பினேன் உன்பாதம் நன்றாகக் காருமய்யா
மதுரை துரைபேரில் உந்தன் குழந்தையிப்போ

அம்மானை பாடுகிறேன் [1]அவதிகளுந் தீரவேணும்
குற்றங்கள் வாராமற் குடிகாக்க வேணுமய்யா
முப்பது முக்கோடி தேவர்களுந் தாமறிய
நாற்பத் தெண்ணாயிரம் ருஷிகளுந் தாமறிய
அம்மானைப் பாடுகிறேன் அன்பாகக் காருமையா

மாதேவி ஈசுபரியே மாதாவே என்தாயே
தட்சனுட யாகத்தில் தான்பிறந்த ஈசுபரியே

சுட்ட பிணம்தின்னி சுடலைவனங் காத்தவளே
வாயிலே அஞ்சுபிணம் வலதுகையி லேழுபிணம்
மிஞ்சின பிணத்தை மிதியடியாய்த் தொட்டவளே

ஏந்திய [2] கபாலம் யெடுத்தாய் திருசூலம்
எக்கிய வயிறும் தேகமெல்லாம் வெண்ணீறும்
சடையால் பெருத்தவளே தாயே ஈசுபரியே
நம்பினேன் உன்பாதம் நாடினேன் சீர்பாதம்
வீரையன்மேல் பாடுதற்கு விதமுடனே வரந்தருவாய்

மாதேவர் வேர்வையிலே வந்துதித்த வீரபத்திரன்
பதினெட்டு ஆயுதமும் பாங்குடனே வந்துதய்யா
அங்கையற் கண்ணிவாசல் அன்புடனே காத்ததுரை
உந்தனை நம்பியொரு அம்மானை பாடுகிறேன்
வந்தென்னைக் காத்து வரந்தர வேணுமய்யா

நாவு தவறாமல் நல்லகுரல் மங்காமல்
ஏடு தவறாமல் எழுத்தாணி சாயாமல்
நாவில் சரசுபதியே நலம்பெறவே எழுதிவைப்பாய்
வேணுமடி தாயே வேதாந்த நாயகியே
ஆறுகுற்றம் நூறுபிழை அடியேன்நான் செய்தாலும்

கொண்டு பொறுத்தொரு குற்றங்கள் வாராமல்
காக்கக் கடனய்யா கர்த்தாவே தென்மதுரை

**நாட்டுச்சிறப்பு**

வடக்கே வடதேசம் வைகுந்த பதவியைப்போல்
காசியெனும் பட்டணமாம் கைலாச மொப்பாக
கங்கை நதியும் கயிலாசப் பொய்கைகளும்

விசுவநாத சன்னதியில் வெண்முத்தால் கோபுரமாம்
விசாலட்சி அம்மன் விளங்கியதோர் மண்டபமாம்
ஆலயமும் திருமதிலும் அபரஞ்சிக் கோபுமாம்
பார [3] அபரஞ்சி பளிங்குமா மண்டபமாம்

மாணிக்கம் பதித்த வச்சிரமணிக் கோபுரமாம்

தூண்டா விளக்கெரியும் சொக்கருட சன்னதியும்
அசையா விளக்கெரியும் அம்மனுட சன்னதியாம்
வெஞ்சா மரைவீச வேதியர்கள் பாடிவர
நெட்டுப் [4] பதின்காதம் [5] நெருக்கமுள்ள பட்டணமாம்
[6] அஞ்சுநல்ல காதவழி அகலமுள்ள பட்டணமாம்

வெள்ளாளர் வீதிகளும் வெகுதூர மாயிருக்கும்
பிராமணர்கள் வீதி பதினா யிரந்தெருவாம்
கடையுங் கடைத்தெருவும் கன்னடியர் வீதிகளும்
அடிக்கடி சத்திரமும் அன்னமிடும் வீதிகளும்
காசியில் தலைமூழ்கிக் கருமங்கள் தீர்ப்பாரும்

தீர்த்தங்க ளாடித் திதிகள் கொடுப்பாரும்
ஆறு குளமும் அசையாத் திருமதிலும்
பட்டணத்தைச் சுற்றிப் பாங்காக நெல்விதைத்து
நெல்லறுத்துக் கட்டி நிரைபிடித்து வருவாரும்
ஆனை அடிமறையும் அடிராசி நெற்காணும்

கட்டுக் கலங்காணும் கதிர்உழக்கு நெல்காணும்
அஞ்சுக்கு ரெண்டு அரண்மனைக்கே ஈவாரும்
வாரமிடுவாரும் வயல்கணக்குப் பார்பாரும்
காசி நதிமூழ்கிக் காவடிகள் கட்டுவாரும்
மாதா பிதாவுக்கு வந்துதிதி கொடுப்பாரும்

அப்படிக்குத் தானும் ஆனதொரு பட்டணமாம்
பட்டணத்தை ஆளும் பாரரசர் வம்மிஷமாம்
சூரிய குலத்துத் தோற்றமுள்ள ராசாவாம்
வச்சிர மணிபதித்த வகையான கிரீடமாம்
ரத்தின மணிபதித்த நல்லதொரு கிரீடமாம்

ஒன்பது ரத்தினம் ஒளிவாகத் தான்பதித்துத்
தொல்லுலகை யாளும் துளசிமகா ராசாவும்
மகுடந் தரித்ததொரு மகராசர் வேந்தனுந்தான்
இப்படி உலகை இருந்தர சாளுகையில்

**பிள்ளைப்பேறு வேண்டி அறம்பல செய்தல்**

மைந்தனு மில்லாமல் மனக்கவலை யாயிருந்து
புத்திரனு மில்லாமல் போத மனஞ்சலித்து
பட்டத்துக் குப்பிள்ளை வேணுமென்று பார்வேந்தன்
மெத்த மனநொந்து வேந்தனு மப்போது
ஆயிரங் கோடிபசு அந்தணர்க்குத் தான்கொடுத்து
ஆயிரம் பிராமணருக் ஆகமுடித்து வைத்து

ஆயிரம் அந்தணர்க்கு அநேகதர்மம் உண்டுபண்ணி
ஆயிரம் தெப்பக்குளம் அடவாக உண்டுபண்ணி
ஆயிரம் நந்தவனம் அடவாக உண்டுபண்ணி
விசுவநாத சுவாமிக்கு வெள்ளியால் வாகனங்கள்
புதிதாக உண்டுபண்ணிப் [7]பொன்முலாம் பூசிவைத்து

தெப்பக் குளத்தருகே திருந்தவனம் உண்டுபண்ணி
புஷ்ப மலரெடுத்துப் பூலோக தேவதைக்கு
சிந்தை மகிழ்ந்து சிவபூஜை பண்ணுவார்கள்
இந்தவிதத் தருமங்கள் இதமாகச் செய்த பின்பும்

**பிள்ளைவரம் கொடுத்தல்**

மெத்தத் தரிசித்து வேந்தமகா ராசனுக்குப்

பரமசிவன் பார்வதியும் பரிந்து தயவாகிச்
[8] சந்தான மயக்கந் தான் தீர்க்க வேணுமென்று
காசிநகர் வேந்தனுக்குக் கண்மணியுந் தான்கொடுத்தார்
ஆன்மபுத்தி ரந்தானும் அடவாகத் தான்கொடுத்தார்
புத்திரனு முன்டானாள் பொற்கொடியாள் தானுமப்போ

**மதுரைவீரன் பிறப்பு**

பத்துமா தம்சுமந்து பாலகனைப் பெற்றெடுத்தாள்
ஆயிரங்கோடி அழகுள்ள சூரியன் போல்
பாலகனும் தான்பிறந்தான் பார்மீதி லிப்போது
மதுரா புரித்துரையும் வந்து பிறந்தான் காண்

வந்து பிறந்தவனும் [9]மலரிட்டுத் தான்பிறந்தான்

கொடி சுற்றித் தானும் குடிகெடவே தான்பிறந்தான்
சத்திராதி முண்டன் [10] தனஞ்சியனும் தான்பிறந்தான்
பெண்கள் மயங்கவந்த புண்ணியனு மேபிறந்தான்
தேசத்தா ரெல்லோரும் தென்மதுரை யென்றுசொல்லிக்
கொண்டாடிப் பூசைகொள்ளப் பிறந்தான் குழந்தையுமே

------

[1]. அவிதி என்றுள்ளது (அவதி - துன்பம்)

[2]. மண்டையோடு

[3]. அபரஞ்சி - புடமிட்ட பொன் [4]. நூறுனாமல் தூரம் (பத்துக்காதம்

[5]. நெடுகமுள்ள என்றுள்ளது [6]. அன்பதின் ஏன்றுள்ளது

[7]. முலாம்- பொன் வெள்ளிப் பூச்சு [8].சந்தானம்-மரபு, சந்ததி

[9].மலரிட்டு மாலை சுற்றி [10]. அர்ச்சுனன் போல். சிறந்தவன்

---------

பிறந்தவுடன் பூரித்தான் வேந்தனுந்தா னப்போது
அப்போது ராசன் அழையுமென்றார் வேதியரை
மந்திரியு மப்போ வரவழைத்தார் சோசியரை
சோசியரும் ஓடிவந்து துரைராசர் வேந்தனைத்தான்
ஆசீர் வாதமென்று அச்சதையுந் தான்கொடுத்தார்

கூடவே கைதொழுதார் குணமுள்ள ராசாவும்
இருமய்யா வென்று யிட்டாரே ஆசனமும்
அப்போது சோசியரும் ஆசனத்தில் வந்திருந்து
அழைத்துவரச் சொன்னதென்ன ஆதிமக ராசாவே
வாருமய்யா சோசியரே மைந்தன் பிறந்தான்காண்

உலகமெல்லாம் ஆளுதற்கு ஒருவர் பிறந்தான்காண்
வெள்ளிக் கிழமை விடிந்து பத்து நாழிகைக்கு
பலாபலன்கள் பார்த்துப் பிரபலமாய்ச் சொல்லுமய்யா
என்றுசொல்லத் தானும் இன்பமுடன் சொன்னபின்பு

பஞ்சாங்கந் தானவிழ்த்துப் பார்த்தாரே சோசியரும்

காசி பதியாளும் கர்த்தாவே சொல்லுகிறேன்
மைந்தனுங் குழந்தை மாலையிட்டுத் தான்பிறந்தான்
பாருமய்யா பாலகனைப் பதறாமல் காட்டச்சொல்லி
என்றுசொல்லிச் சோசியரும் இதமாகத் தானுரைத்தார்

ராசாவும் அப்போது நல்லதென்று தான்கேட்டுச்
சிங்களத்துத் தாதி செங்கமலத் தோழியரே!
பாலகனைத் தானெடுத்துப் பதறாமல் காட்டு மென்றார்
அப்படியே தாதி அழகான பாலகனை
எடுத்துவந்து காட்டினாள் இளங்கொடியாளப்போது

காசி பதிவேந்தன் கண்குளிரத் தான்பார்த்து
மைந்தன் கழுத்தில் மாலை யிருக்குதய்யா
இந்த விதிப்பயனோ ஈசுபரனார் தன்செயலோ
நம்மாலே யாவதென்ன நாரணரே யென்றுசொல்லிப்
பட்டரை நெல்லிலேதான் பதரைக் கலந்தேனோ

பிச்சைக்கு வந்தவரைப் பின்புவரச் சொன்னேனோ
பிள்ளைப்பால் வார்க்காப் பெரும்பாவி யானேனோ
என்னென்ன பாவங்கள் செய்தேனோ ஈசுபரனே
நம்மாலே யாவதென்ன நாரணரே யென்றுசொல்லி
இந்த நல்ல பாலகனை யென்னதான் செய்வமய்யா

கொன்றுயிரைப் பிரித்தால் கொலைகள்வந்து சுற்றுமய்யா
இந்தநல்ல பாவத்துக்கு என்னதான் செய்வமய்யா
சோசியருங் கேட்டுச் சொல்கிறார் அப்போது
அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் ஆதிமக ராசாவே
தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் தெய்வச் சிகாமணியே

ஆயிரங் கோடிப்பொன் அடவா விலை மதிச்சு
தங்கத்தால் தாம்பாளம் தயவாக உண்டுபண்ணி
விலைமதிக்க வொண்ணாத விசித்திர தாம்பாளம்
தங்கத் தாம்பாளம் தயவுடனே கொண்டுவந்து
தாம்பாளந் தன்னில் தனஞ்சியனைத் தூக்கிவைத்து

ஆரணிய மானதொரு அருங்கான கந்தனிலே

தட்டோடே பாலகனைத் தானெடுத்துக் கொண்டுச்சென்று
வைத்துவர வேண்டுமென்று மாதவரும் சொல்லலுற்றார்
என்றுமே சோசியரும் எதமாகத் தான்உரைத்தார்
காசிநகர் வேந்தன் காதாலே தான்கேட்டு

ஐயோசிவ னேயென்று அடித்தான் வயிற்றிலேதான்
இதுக்கோ தவசிருந்தேன் யென்றுசொல்லி ராசாவும்
கன்னத்தில் அறைந்துகொண்டு கதறினார் இராசமன்னன்
அச்சத்தம் தான்கேட்டு அவனைப்பெற்ற மாதாவும்
ஐயோ சிவனே ஆதிநா ராயணரே

இந்த விதிக்கோ என்வயிற்றில் தானடைத்தீர்
அஞ்சு சிரசுள்ள ஆதிவிர்ம தேவர்நீ
பத்துமாதஞ் சுமந்துபெற்ற பாலகனைப் பறிகொடுக்க
எழுதினியோ பிர்மாவே என்தலையில் நீர்தானும்
நல்லதய்யா வென்று நளினமுள்ள எம்பெருமாள்

உயிரோடு பாலகனை ஒப்புக் கொடுப்பேனோ
என்றுசொல்லித் தோகையளும் ஏற்றமுடன் தானழுதாள்
பட்டத்துப் பிள்ளை பயணமே போகுதென்று
பட்டணத்துச் ஜனங்களெல்லாம் பதறி யழுகலுற்றார்
தட்டோட பாலகனைத் தான்கொடுத்தாள் தாதிகையில்

கோவென்ற சத்தம் கூக்குரலுந் தானாச்சு
எல்லோருங் கூடி அழுதார்கள் பட்டணத்தில்
பட்டணத்தி லுள்ள[11] பரிசனங்க ளெல்லோரும்
வேந்தன் குறையாத்தி விசாரந் தனைமாற்றிக்
காரியப்பே ரெல்லோரும் [12] கைமுகிஞ்சு நின்றார்கள்

வேந்தன் மகராசன் வேதியரைத் தானழைத்துக்
கொண்டுபோ வென்றுசொல்லிக் கோதையர்க்கு விடைகொடுத்தார்.
ஆமென்று சொன்னார்கள் அய்யமார் சோசியரும்
செங்கமலத் தாதியைத்தான் சீக்கிரமாய் வரவழைத்துப்
பாலகனைத் தானெடுத்துப் பயணம்வரச் சொன்னாரே

**மதுரைவீரனை காட்டில் கொண்டுவிடுதல்**

தட்டோடப் பாலகனைத் தானெடுத்துத் தாதியவள்
எடுத்துவந்து பாலகனை எதிராக நின்றாளாம்
பார்வேந்தன் அப்போது பல்லக்கு வரவழைத்துத்
தட்டோட பாலகனைத் தான்வாங்கி அப்போது
பல்லக்கு மேல்வைத்துப் பரிசனங்க ளத்தனையும்

ஆனைமேல் பேரிகை அதிர முழங்கிவர
குதிரை மேல் டங்கா கூடமுழங்கிவர
தம்பட்ட மேளம் தவில்முரசு தான்முழங்க
புல்லாங் குழலூத, பேரிகை கொட்டிவர
நாட்டியங்க ளாடிவர நகரிசின்ன மூதிவர

ஆடலும் பாடலும் அதிசயமாய்க் கூத்துக்களும்
கூட்டத் துடனே கொண்டுபோய்க் கானகத்தில்
வைத்துவரச் சொன்னார் மகராசர் வேந்தனுந்தான்
ஆட்டமும் பாட்டமும் அதிர்வேட்டுச் சத்தமுமாய்க்
கொண்டுபோய்க் கானகத்தில் குழந்தையை வைத்துவந்தார்

அந்தமட் டோடே அமர்ந்தார்கள் பட்டணத்தில்
பாலகனும் போய்ப் பார வனந்தனிலே
மாமரத்தின் கீழிருந்து மைந்தன் குழந்தையது
ஆங்காரச் சத்தமிட்டு அழுதான்கா ணம்மானை

**மதுரைவீரனை நாகம் காப்பாற்றுதல்**

கானகத்தில் குடியிருக்கும் கயிலங்கிரி நாகமது
ஆயிரம் சூரியன்போல் அழகுள்ள நாகமது
பாலகன் கிட்டவந்து பரிவான நாகமது
ஈரம் துடைத்து இளவெயில் தான்மறைத்து
அழுகை தனைநிறுத்தி அழகுள்ள நாகமது
ஐந்துதலை நாகம் அருகிருந்து குடைபிடிக்க

முகத்தில் வெயில் மறைத்து மூர்க்கமுள்ள நாகமது
இப்படி வைத்து இருக்குமந்த வேளையிலே
மாதிகச் சின்னான் வகையான சக்கிலியன்

பாளையப் பட்டான் பரிவான தொட்டியனாம்
பொம்மண னாயக்கன்னென்று புகழ்பெரிய தொட்டியனாம்

பாதரட்சை கட்டும் [13]பரிவான மாதியனாம்
மாதிகன் கொண்டதொரு மயிலிணையாள் சக்கிலிச்சி
வாருகள் சென்மங்கள் வகையாக [14] ஊறக்கட்ட
ஆவாரம் பட்டைவெட்ட அவள்தானும் சக்கிலிச்சி
வனத்துக்கு வந்து வகையாகப் பட்டைவெட்டிப்

பட்டை யெடுத்துப் பயணம் வருகையிலே
பாலகன் தானிருக்கும் பாரவனம் தான்நோக்கி
வருகிறபோது [15] மஞ்சன் அழுத சத்தம்
காதினால் கேட்டுக் கன்னியரு மப்போது
காதிலே ஓலையிட்டுக் கழுத்திலே சரமணிந்து

ஒருபடி பணம்பெற்ற ஒசத்தியுள்ள சேலைகட்டி
அசைந்து நடந்து அந்தவனத்தில் வந்தாள்

**சக்கிலிச்சி குழந்தையைக் காணுதல்**

மாமரத்தின் கீழிருந்த மைந்தன் அழுகலுற்றான்
ஆயிரம் சூரியன்போல் அழகுள்ள பாலகனைக்
கண்டு மனமகிழ்ந்து காரிழையு மப்போது
பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமாளே யென்றுசொல்லி

வாரி எடுத்து மார்போடே தானணைத்துப்
பைங்கிளியாள் தன்னுடம்பு பச்சைநிற மானதுவே
பாரத் தனங்கள்ரெண்டும் பாலாய்ச் சொரிந்தனவே
பாலகனு முலைகுடித்து பசியாறி ஏப்பமிட்டு

கோதை மயிலாளும் குளிர்ந்து முகமலர்ந்து
பாலகனை மடியில்கட்டிப் பட்டையுந் தானெடுத்து
வேர்த்து விறுவிறுத்து வீட்டுக்கு வந்தாளாம்
சக்கிலியன் தானும் தடியெடுத்துக் கோபங்கொண்டு
இந்நேரம் கானகத்தில் யென்செய்தாய் என்றுசொல்லி

என்றுசொல்லி சக்கிலியன் எடுத்தான் பெருந்தடியைப்
பைங்கிளியு மப்போது பதறாதே என்கணவா
கோபத்தை நீயடக்கு குணமுள்ள பர்த்தாவே
மைந்தனு மில்லாமல் மனக்கவலை பட்டோமே
ஆண்பிள்ளை யில்லாமல் அருந்தவசு தாமிருந்தோம்

மைந்தன் கவலை மனக்கவலை தீர்ந்ததிப்போ
பிள்ளைக் கவலை பெருங்கவலை தீர்ந்ததிப்போ

**மதுரைவீரன் சக்கிலிச்சி வீட்டில் வளருதல்**

இந்தாரும் பிள்ளையென்று ஏந்தியுழையுந் தான்கொடுத்தாள்
தட்டோடே பாலகனைச் சக்கிலியன் கைகொடுத்தாள்
ஏந்தி யிருக்கையிலே எடுத்தானே சின்னானும்

இன்பங் குளிர்ந்தே இருபுசமும் பூரித்து
மனமுங் குளிர்ந்து மாதிகச் சின்னானும்
மாணிக்கத் தொட்டி வச்சிர மணிபதித்து
பச்சைவை டூரியத்தால் பாங்கா வளைபோட்டுத்
தங்கக் கயிறுபின்னி சங்கிலிக ளுண்டுபண்ணி

நாலுபக்கம் சங்கிலியில் நலமா மிகப்பூட்டித்
தொட்டிலும் சேர்த்துப் துயிலாடை மேல்போட்டுத்
பாலகனைத் தானெடுத்து பதிவான தொட்டிலிட்டாள்
கண்மணியைத் தானெடுத்துக் காரிழையாள் சக்கிலிச்சி
தாலாட்டி முலைகொடுத்துத் தனஞ்சயனுக் கப்போது

எண்ணெய் தலையிலிட்டு இளவெந்நீர் தான்வார்த்து
தீர்க்கமுள்ள நெற்றியிலே திருநீறு தானுமிட்டு
நேரான நெற்றியிலே நிலக்காப்புப் பொட்டுமிட்டு
நீலவிழிக் கண்களுக்கு நீதியுடன் மையெழுதி
சாதிலே [16]மத்திக்காய்கனமாகத் தொங்கவிட்டாள்

பச்சைமணி யக்குமணி பவளத்தால் [17] தாவடங்கள்
காலில் சிலம்பணிந்து கையில் வெள்ளிக் காப்புமிட்டு

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய்
சக்கிலியன் வீட்டில் தனஞ்செயனும் தான்வளர்ந்தான்
வீரப்பன் என்றுசொல்லி விதமாகப் பேருமிட்டுப்

பெற்ற தகப்பனைப்போல் பிரபலமாய்த் தான்வார்த்தான்
பத்துவய தாகிப் பதினோராம் தன்வயதில்
[18]கன்னப் பரிசாகக் கழுத்தடியில் தேமலுமாய்
பேரான தன்சிரசில் புன்னைக்காய் நெத்துபோல்
ஆடும் புருவம்ரெண்டும் அம்மானை கண்மலர்போல்

கூடும் புருவம் ரெண்டும் கொன்னைக்காய் நெத்ததுபோல்
மூன்றாம் பிறைபோலே மூக்குத் திருவழகும்
நாலாம் பிறைபோலே நாக்குத் திருவழகும்
வஞ்சிக் கொடிபோலே மகராசன் தன்னிடையும்
ஆலிலை போலே அமர்ந்த திருவயிறும்

கடஞ்சமரக் காலதுபோல் கணுக்கால் திருவழகும்
பச்சைவை டூரியம்போல் பல்லுத் திருவழகும்
சந்திர [19] காவிப்பாகை தானணிந்தா ரப்போது
பச்சைக்கல் ஒண்டிமுத்து பாங்காய்க் கடுக்கனிட்டு
ஒண்டிமுத்துக் கடுக்கன் உலகேழுஞ் சோதிமின்ன

பச்சைக்கல் வச்சிரம் பதித்த முருகணிந்து
மோகன மாலை முத்தா பரணமின்ன
வச்சிரத்தால் பதக்கம் மார்பில் நிழலாடக்
கண்டசுரம் பொன்னுருட்டுக் கனத்த சரமணிந்து
மார்பில் பதக்கம் வகையுடனே தானணிந்து

முன்னங்கை மூதாறி முருக்குவளை பொன்னேனாலை
பச்சைக் கடகம் பத்துலட்சம் பொன்பெறுமாம்
கல்பதித்த மோதிரமுங் கணையாழி தானணிந்து
எட்டு விரலுக்கும் இழைத்தகல் கணையாழி
பத்து விரலுக்கும் பசும்பொன் கணையாழி

எண்ணெய்க் கம்பிச்சோமன் இடுப்பில் வரிந்துகட்டிப்
பட்டுக்கம்பிச் சோமன் பாங்காய் வரிந்துகட்டிப்

பாங்கான இடுப்பில் பட்டுக்கச்சை தொங்கலிட்டுப்

பட்டை [20]அரனா பாங்குடனே தானணிந்து
இடதுபுறத் தொங்கலிலே ஏமனுட அட்சரமாம்

வலதுபுறத் தொங்கலிலே வடமலையான் அச்சரமாம்
பார்வதியாள் கடாச்சம் பரிவாக யுண்டாகிக்
காலில் மிஞ்சி கனமான வீரதண்டை
பாத சிலம்பு பரிவான பொற்சதங்கை
பஞ்சவர்ணப் பாவாடை பாங்கான சாலுவையும்

பட்டுக் கரைச்சோமன் பாங்கான [21] வல்லவட்டம்
முன்கையில் சந்தனமாம் முறுக்கிவிட்ட மீசைகளாம்
தொட்ட மிதியடியும் சுண்டு வில்லுங் கைப்பிடித்து
சொல்லுகளும் கேளான் துள்ளுகுட்டி வீரையனும்

---------

[11]. பரிசனம் - உறவு, ஏவல்செய்வோர். சூழ்வோர்

[12]. கைம் முகிழ்த்தல் - வணக்கம் தெரிவிக்கும் வகையில் கையைக் கூப்புதல்

[13]. பதிவான என்றுள்ளது

[14]. தோலைப்பதனிட ஊறவைத்தல் [15]. மஞ்சன் மனிதன்

[16].மத்திக்காய் - ஒரு காதணி [17].
தாவடம் கழுத்தணிமாலை

[18]. கண்ணப் பருசையின் மா என்றுள்ளது.

[19]. காந்திப்பாகு' என்றுள்ளது

[20]. அரைஞா (நா)ண் - இடுப்பில் கட்டும் கயிறு, வெள்ளிக்கயிறு

[21]. வில்லவட்டம்

-------------

**மதுரைவீரன் பராக்கிரமம்**

யாரையு மெண்ணான் அடங்காத வீரையனும்
எதிர்த்தவரை வீரையனும் இருபிளவு செய்திடுவார்
கண்டமுனி ராச்சதர்கள் கைகட்டி யஞ்சிநிற்கும்
காளி கதவடைக்கும் கண்டமுனி தெண்டனிடும்
மாதிகன் சொல் கேளாமல் வனங்களிலே போயிவன்

வேட்டைக ளாடுறதும் வேங்கைபுலி குத்துறதும்

கரடி புலிசிங்கம் காட்டானை குத்துறதும்
வேஷங்கள் மாறி வீட்டுக்கு வாரதுவும்
சாப்பிட் டிளைப்பாறித் தான்படுத்துத் தூங்குறதும்
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
வேட்டைக ளாடவென்று விளையாடி வீதிவந்து

காட்டைக் கலைத்து கடிநாய் முன்னேவிட்டு
வேட்டைக ளாடுறதும் வேங்கைபுலி குத்துறதும்
கரடி புலிசிங்கம் காட்டானை யுள்ளதெல்லாம்
கடவாய் தனைப்பிடித்துச் சிலுவாயைக் கிழிக்கிறதும்
[22]அண்டரண்டப்பட்சிகளை அதட்டிப் பிடிக்கிறதும்

வேட்டைக ளாடி விருதுபெற்று வாரதுவும்
பன்றிகளைக் குத்திப் பதையாமல் வருகிறதும்
வீட்டுக்கு வந்து விளையாடித் திரிகிறதும்
இப்படிக்குத் தானும் இருக்குமந்த வேளையிலே

**பொம்மியம்மாள் ருதுவானவிடத்தில் மதுரைவீரன் காவலிருத்தல்**

பட்டணத்தை யாளும் பரிவான தொட்டியன்தான்
பொம்மண்ணா யக்கன்மகள் பொம்மியருந் தானுமப்போது
பத்து வயதாகிப் பனிரெண்டாந தன்வயதில்
[23] புத்தி யறிந்தவுடன் பொம்மணுந்தா னப்போது
ஊருக்கு மேற்கே [24] ஒருநாழி வழிதனிலே
பச்சைக் குடிசைகட்டிப் பாங்கா யலங்கரித்து

பொம்மியம் மாளைப் பொங்கமுடன் கூட்டிவந்து
மாதிகச் சின்னானை வரவழைத்து அந்நேரம்
பைங்கிளியைத் தானும் பத்திரமாய்க் காருமென்றார்
அல்லும் பகலும் அறுபது நாழிகையும்
பட்சிப் பறவாமல் பகல்மோசம் வாராமல்

காகம் பறவாமல் கருங்குருவி நாடாமல்
முப்பது நாளும் முழிப்பாகத் தானிருந்து

காருமடா வென்று கட்டளையு மிட்டாராம்
நல்லதய்யா வென்று நளினமுள்ள மாதியனும்
மாதிகச் சின்னானும் மாளிகைக்கு தான்வந்து

குச்சுவுரு மாலைகட்டிக் கூசாமல் மாதியனும்
கச்சை வரிந்துகட்டிக் கருங்கச்சைச் சுங்குவிட்டு
தொட்ட மிதியடியும் சுண்டுவில்லும் கைப்பிடித்து
அம்புவில்லுங் கைப்பிடித்து ஆயுதமுந் தானெடுத்து
வாணாத் தடியும் வளைதடியும் சக்கரமும்

பொம்மியம்மாள் காவலுக்குப் போறானே மாதியனும்
தொட்டியப்பெண் காவலுக்குத் துருசாகப் போறானாம்
மாதியனும் தானும் வந்தனம்மா காவலுக்கு
பத்திரமாய்க் காருமென்று பைங்கிளியும் போய்ப் படுத்தாள்
இப்படிக்குத் தானும் ஏந்திழையைக் காக்கயிலே

ஒருநாள் பொழுதில் உலகமெல்லாம் இடியிடித்து
வருண பகவானும் வந்து கவிஞ்சானாம்
ஈரேழ் உலகமெங்கும் இருட்டுவந்து தான்கவிய
வயதுசென்ற மாதியனும் மனதுநொந்து மெய்கலங்கி
இந்த இருட்டில் என்னமாய்ப் போவமென்று

மனதிலே எண்ணி மகனோடே சொல்லலுற்றான்
அப்போது வீரையனும் அடவாக யேதுசொல்வான்
பெற்றபிள்ளை நானிருக்கப் பெரியவர்தான் போகலாமோ
இந்தமழைக் காலிருட்டில் எப்படி நீ போவீரய்யா
மங்கையுட காவலுக்கு மைந்தன்நான் போய்வாறேன்

என்றுசொல்லி வீரையனும் இன்பங்குளிர்ந்தன் னேரம்
வீராதிவீரன் வேகமுடன் தானெழுந்து
சத்தோசப் பட்டுச் சாமிதுரை வீரையனும்
மங்கையுட காவலுக்கு மாதியனே போய்வாறேன்.
[25]சலக்கப் புரையில் தான்வந்து நின்றுகொண்டு

சம்பங்கி எண்ணெய்கொண்டு தலைமுழுகி
மயிராத்தி கோதி மயிரைக் குளிரச் சினுக்கறுத்து

செங்கமலக் கையாலே சீக்கிரமாய்த் தான்முடித்துச்
சீரான நெத்தியிலே சிவசிவா வென்றுசொல்லி
அணிந்தான்காண் வெண்ணீறும் ஆணிமுத்து வீரையனும்

சந்தனமுங் கஸ்தூரி தானணிந்தான் வீரையனும்
ஒசத்தியுள்ள புனுகெடுத்து உல்லாசமாய்த் தானணிந்து
அல்லித் துறைக்கதம்பம் ஆண்டியப்பன் கெந்தப்பொடி
கெந்தப்பொடி கஸ்தூரி கீறினான் தன்மார்பில்
திருணவல்லிச் சோமன் திட்டமுடன் தானுடுத்தி

பஞ்சவர்ணப் பாவாடை பாங்காய்த் தலையில் கட்டிக்
காதில் கடுக்கனிட்டுக் கழுத்தில் சரமணிந்து
பச்சைக்கல் மேல்முருகு பாங்காகத் தானணிந்து
மாணிக்கப் பதக்கம் மார்பிலே தானணிந்து
கல்கட்டு மோதிரம் கணையாழி தானணிந்து

பட்டுக்கச்சை ஒட்டியாணம் பாங்காக வரிந்துகட்டி
வீரதண்டை ஓலமிட வெள்ளிச் சதங்கைமின்ன
ஆஸ்தான போசன் அதிவீர தென்மதுரை
மாயாவு தாரனைப்போல் மதுரையும்வேசங் கொண்டு
பொக்கிஷ மாளிகையில் [26]பூசணங்களுள்ளதெல்லாம்

எடுத்து மிகப்பூட்டி இன்பமுள்ள வீரையனும்
போசன மாளிகையில் போய்ப்புகுந்து வீரையனும்
கைக்கு நீர்வாங்கிக் கனிவாயுங் கொப்பளித்து
சாமிமுது வீரையர்க்குத் தங்கத்தாம் பாளம்வைத்து
மல்லிகைப்பூச் சம்பா வடித்ததொரு போசனமாம்

கொண்டுவந்து படைத்தாள் கோதையரு மப்போது
பொன்போல் பருப்புமிட்டுப் புத்துருக்கு நெய்வார்த்தாள்
வாழைக்காய்ப் பொறியல் [27] வழுதலங்காய் தான்பொறியல்
பச்சடி நூறுவகை [28] பால்குழம்பு தான்படைத்தாள்
கூட்டுக்கறியும் குழம்புவகை தான்படைத்தாள்

பால்வடைகள் தோசை பணியாரம் தான்படைத்தாள்
அந்தப் படியாக அமுதுண்ட பிற்பாடு

பால்சிண்ணி வைத்துப் பாங்கான தாயாரும்
அன்னம் படைத்து ஆவின்பால் தான்சொரிந்து
மாம்பழம் பலாச்சுளையும் மதுரைக்குத் தான்படைத்து

உண்டு பசியாறி உத்தமனார் பாலகனும்
தின்று பசியாறித் தென்மதுரை யேப்பமிட்டு
பன்னீர் முகந்து பைங்கிளியும் தான்கொடுத்தாள்
வாங்கியே தென்மதுரை வாய்கை சுத்திபண்ணி
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாகத் தான்வாங்கி

வாயிலே பாக்கு வலதுகையில் சுருள்பிடித்து
மாடறுக்குஞ் சூரி வலதுபக்கம் தான்சொருகிக்
கன்னறுக்குஞ் சூரி கையிலே தான்பிடித்துக்
[29]ட்டாரி நேருஷமு கையம்பு [30]சமுதாடு
வாணாத் தடியும் வளைதடியும் சக்கரமும்

---------

[22]. பெரும்பறவை, கழுகு

[23]. பருவமடைந்தான் (முதுக்குறைதல் என இதனை இவ்வாக்கியம் இயம்பும்)

[24]. நாழிகை வழிதனிலே என்றுள்ளது

[25]. சலக்கப்புரை - குளிக்கும் அறை (சலக்கொப்பரை என்றுள்ளது)

[26].பூசணம் - அணிகலன் [27]. விழுதலங்காய் - கத்திரிக்காய்

[28]. பால்கறி போலும்

[29]. கட்டாரி - குறுவாள் அல்லது குத்துவாள் [30].சமுதாடு-ஓராயுதம்

---------

கையிலே வில்லும் கனத்த மிதியடியும்
வாகுதார் பெரியகத்தி வலதுபுறம் தோள்போட்டுக்
சுண்டு வில்லுந் தான்பிடித்துத் துருசாய் எழுந்திருந்து
எழுந்திருந்தான் தென்மதுரை எமலோகந் தத்தளிக்க
மாதிகச் சின்னான் வருகின்றா னன்னேரம்

பொம்மியம்மாள் காவலுக்குப் போய்வாறேன் எந்தனப்பா
என்று சொல்லிப்புறப்பட்டான் ஏத்தமுள்ள தென்மதுரை
மழைக்கால் இருட்டில் மதுரைக்கு வழி தெரியவில்லை
குறுக்கே மிதிச்சானாம் கொள்ளைகொண்ட வீரையனும்

மதுரை நடக்க மகாமலைகள் தத்தளிக்க

மானம் திறந்து மழைமாரி பொழியு தப்போ
மின்னல் வெளிச்சத்தில் மிதிச்சேறி போறானாம்
[அலங்காரத் தோப்பில் அச்ச]மாய் போய்ச்சேர்ந்தான்
பைங்கிளியாள் தன்குடிசு பக்கமே போய்ச்சேர்ந்தான்
மழையோ பொழியுது மாதியனைக் காணமென்று

என்றுசொல்லித் தானும் ஏந்திழையும் மனங்கலங்கிக்
குடிசு விட்டு வெளியில்வந்து கோதையருஞ் சொல்லலுற்றான்
தென்மதுரை நிற்கிறதைக் கண்டாளே தேன்மொழியாள்
நிற்கிறதைக் கண்டு நெடுநேரம் தான்பார்த்து
மாதியனு மல்ல மாத்தானாய்க் காண்கிறது

யாரடா நிற்கிறவன் அஞ்சாமல் சொல்லுமடா
ஆரென்று சொல்லி அஞ்சாதே மங்கையரே
சக்கிலியன் பெற்றெடுத்த தனஞ்சயனும் நான்தாண்டி
இருட்டென்று சொல்லி என்னை அனுப்பிவைத்தார்
மங்கையரே உன்காவலுக்கு வந்தனடி நான் தானும்

என்றுசொல்லித் தானும் எடுத்துரைத்தான் ஆண்டவனும்
நல்லதென்று சொல்லி நளினமுள்ள என்பெருமாள்
பையுங்கிளியும் தானும் படலெடுத்துச் சாத்தினளாம்
கட்டிலின் மேலிருந்து கன்னியரும் ஏதுசொல்வாள்
பத்திரமாய்த் தானும் படுத்திருடா வென்று சொன்னாள்

**மதுரைவீரன் பொம்மியம்மாளைச் சேருதல்**

பேடை மயிலேநீ! போய்படுத்தா யிப்போது
ஒண்டி ஒருவனுமாய் உட்காந் திருப்பேனோ
மங்கையரே நானும் மழையில் நனையிறது
ஆண்பாவம் பொல்லாது ஆரணங்கே இப்பஎன்னை
குடிசில் வரவழைத்தால் கோடிக் குற்றமுண்டு

மதுரையுட சொல்கேட்டு மங்கையரு மேதுசொல்வாள்
சக்கிலியப் பயலுக்கு தலைப்புழுவு ஆட்டுதோடா

பயலென்ற போதை பத்துதடி யென்தேகம்
எகத்தாளம் பேசி எடுத்துரைக்க வந்தாயோ
காவலுக்கு வந்தாயோ களவுசெய்ய வந்தாயோ

ஏதுக்குப் பீத்துகிறாய் எழுந்திருந்து போடாநீ
கூவென்று சத்தமிடக் கோடிப்படை வந்துவிடும்
உந்தனையும் வெட்டி உயிர்த்தூண்டி போட்டிடுவார்
தலையைவெட்டிப் போட்டாலும் சக்கிலியன் விடுவதில்லை
உந்தனையும் விட்டு என்னுயிரும் போவதில்லை

ஈரத்தில் நின்றால் எந்தனுக்குப் பொறுக்காது
தண்ணியிலே நின்றால் சன்னிவந்து மூடுமடி
எந்தனுடன் கூடினால் ஏற்ற பதமுண்டு
சந்தனமுங் கஸ்தூரி தான்பூசி வாழ்ந்திருப்பாய்
ஏதேது கேட்டாலும் எடுத்துவந்து நான்தருவேன்

பேடை மயிலன்னம் பொம்மியம்மாள் கேட்டிருந்து
எண்ணாது எண்ணி ஏங்கி முகம்வாடி
ஈசுபரனே என்தலையில் என்னமா எழுதிவிட்டீர்
கன்னி யழியாமல் கலியாணம் செய்யாமல்
சக்கிலியன் தானழிக்கத் தலையி லெழுதினியோ

என்றுசொல்லிக் கன்னியரும் ஏங்கி முகம்வாடி
முத்துப்போல் கண்ணீரை முகத்தோடே சோரவிட்டாள்
பவளம்போல் கண்ணீரைப் பக்கமே சோரவிட்டாள்
மாரளவு கண்ணீரைத் தாரைவிட்டு தானழுதாள்
அழுது முகம்வாடி அவளிருக்குந் தன்குடிசில்

மதுரை மகாமுனியும் மண்டியிட்டுத் தான்நுழைந்தான்
உள்ளே நூழைந்து உட்கார்ந்தான் அவள்மடியில்
மங்கையரைத் தானும் மாரோடு தானணைத்து
ஏந்திழையே யுந்தனுக்கு என்ன விசனமடி
என்று சொல்லித் தானும் ஏற்றமுள்ள ராசாவும்

துப்பட்டித் தோகையால் துடைத்தானே கண்ணீரை
மங்கையரு மப்போது மனங்குளிர்ந்து அந்நேரம்

தெளிந்து முகம்பார்த்துக் தேன்மொழியு மேது சொல்வாள்
ஏறிட்டுப் பார்த்தாளே எண்ணமற்ற காளையைத்தான்
கண்குளிரப்பார்த்துக் கன்னியரு மேதுசொல்வாள்

சக்கிலிய னென்று தட்டிமிக வார்த்தை சொன்னேன்
சக்கிலியன் தானுமல்ல தனஞ்சயனாய்க் காண்கிறது
முன்னழகும் பின்னழகும் மூவுலகில் கண்டதில்லை
மார்பழகைக் கண்டால் மங்கையர்கள் சேர்ந்திடுவார்
தோளழகைக் கண்டால் தொடருவாள் கோடிபெண்கள்

ஆபரணந் தன்னை யார்மதிக்கப் போறார்கள்
உருமாலைக் கட்டழகும் ருத்திராச்ச மார்பழகும்
கண்குளிரப் பார்த்துக் கன்னியரும் மெய்சோர்ந்து
மன்னவரும் அப்போது மங்கையரைத் தானெடுத்துச்
சந்தனமுங் கஸ்தூரி தானணிந்தான் மங்கையர்க்கு

மல்லிகைப்பூ செண்பகப்பூ வகைவகையாய்த் தான்முடித்து
புனுகு சவ்வாது பொங்கமுடன் தானணிந்தான்
தோளிலே தானிருக்கும் துப்பட்டி தனையெடுத்துத்
தோகையர்க்குத் தானுடுத்தித் துயிலாடை தான்களைந்து
எடுத்து உடுத்தினார் ஏந்திழைக்குத் தானுமப்போ

மங்கையருந் தானுமப்போ மணிமெத்தை மேல்சாய்ந்து
என்னை வலதழிக்க எத்தனைநாள் தவசிருந்தீர்
மாதேவர் என்னை மண்பிடித்துப் போடயிலே
மன்னாநீ எந்தனுக்கு வளர்ந்தீரோ பூமியிலே
இந்தப் பிழைப்புஉம்மை எவர்பிழைக்கச் சொன்னார்காண்

என்றுசொல்லித் தான்நகைத்தாள் ஏற்றமுள்ள மங்கையரும்
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாகத் தான்கொடுத்துப்
பாக்கிலைகள் தின்று பறந்துவிளை யாடியப்போ
மதுரைக்கு மோகம் வந்துவிளைந்த தப்போ
மங்கையரும் வீரையனும் மாணிக்கக் கட்டிலின்மேல்

கட்டி யணைத்துக் கனிவாய் முத்தமிட்டு
முகத்தோடு முகம்வைத்து முத்தமிட்டார் தென்மதுரை

சிரித்து விளையாடித் தேன்மொழியை முத்தமிட்டார்
அணைந்து விளையாடி ஆண்டவனு முத்தமிட்டார்
கந்தனுடன் வள்ளியம்மை கைகலந்த பாவனைபோல்

பார்வதியாள் தன்னுடனே பரமசிவன் சேர்ந்தாற்போல்
மதுரை மகாமுனியும் மங்கையுடன் தான்சேர்ந்து
அப்போது பொம்மியம்மாள் ஆரணங்கு மப்போது
கட்டிலையும் விட்டிறங்கிக் கன்னியரு மேதுசெய்வாள்
தென்மதுரை யைத்தானும் தெண்டனிட்டாள் மங்கையரும்

மாணிக்கக் கையாலே மங்கையரைத் தானெடுத்துக்
கட்டி யணைத்துக் காரணனாந் தென்மதுரை
ஏந்திழையைத் தானும் ஏறிட்டுத் தான்பார்த்துக்
கன்னியரே நீதான் காலில் விழுந்ததென்ன
என்று சொல்லிக் கேட்டான் ஏற்றமுள்ள தென்மதுரை

வாருங்கள் ராசாவே ஒரு வார்த்தை சொல்லக் கேளும்நீர்
மானிடவர் தானே மகாதேவர் நீர்தானா
இந்துலகில் ராசாவே இந்திரனார் தன்மகனோ
ஆருபெற்ற கண்மணியோ ஆண்டவரே சேதிசொல்லும்
மாதியன் வீட்டில் வந்தவகை சொல்லுமென்றாள்
தாய்தகப் பன்பேர் தனஞ்சயனே சொல்லுமென்றாள்

**பொம்மியிடம் மதுரைவீரன் தன்வரலாறு கூறுதல்**

அப்போது தென்மதுரை அன்பாய் எடுத்துரைப்பார்
கேளுமடி பெண்ணே கிருபையுடன் சொல்லுகிறேன்
கயிலாச நாதருட கடாச்சத்தி னாலே
காசிநதி ராசனுக்குக் கண்மணியாய் நான்பிறந்தேன்

மாலையிட்டுப் பிறந்தேன்னு வனத்திலே போட்டு விட்டார்
கானகத்தில் குடியிருக்கும் கயிலங்கிரி நாகமது
கண்காட்சி தந்து கனவெயிலைத் தான்மறைத்து
வனத்தில் குடியிருந்து மாதியன் வீட்டில்வந்தேன்
சக்கிலியன் வீட்டில் வளர்ந்தேன்டி தார்குழலே

வளந்தனடி நானும் மங்கையரே யுந்தனுக்கு
இந்தமட்டுஞ் சேதி இனியொன்றும் நானறியேன்
என்றுசொல்லித் தானும் எடுத்துரைத்தான் வீரையனும்
மங்கையருந் தானும் மகிழ்ச்சியுடன் தான்கேட்டுக்
கட்டிலின் மேலிருந்து கன்னியரு மேதுசொல்வாள்

பொழுது விடியுதுகாண் போய்ப்பிழையு மன்னவனே
நாளைக்குத் தானும் நாகரிகம் பேசிடலாம்
இந்தப் படியாக இருக்குமந்த வேளையிலே
கங்குல் விடிந்து கதிரோனும் வந்துதித்தார்
அப்போது வீரையனும் அன்பாய் எழுந்திருந்து
தேன்மொழியாள் குடிசைவிட்டுச் சீக்கிரமாய் வெளியில்வந்து

தெப்பக் குளத்தருகே சீக்கிரமாய் வந்துநின்று
பாளைகொண்டு பல்துலக்கி ஓலைகொண்டு நாவழித்து
கால்முகம் சுத்திபண்ணிக் கனிவாயைக் கொப்பளித்து
சிவசிவா வென்று திருநீறு தான்சாற்றி

அரகரா வென்று அயன்பூசை தான்முடித்து
உல்லாச நடைநடந்து உத்தமியாள் பாலகனும்
மாதியன் வீட்டுக்கு வாரானே தென்மதுரை
ஏகாந்த மாக ஈசுபரன்போல் வாரானே
மாதிய னோடிவந்து மைந்தனை எடுத்தணைத்துக்

கண்ணான கண்மணியே கற்பகமே வீரையனே
இந்நேரந் தானும் என்செய்தாய் கண்மணியே
மழையில் நனைந்து வெகுநேரந் தூங்கிவிட்டேன்
என்றுசொல்லி வீரையனும் எடுத்துரைத்தான் அப்போது
நல்லதென்று சொல்லி நளினமுள்ள மாதியனும்

மங்கையரே பெண்ணணங்கே மைந்தனுக்கு அன்னமிடு
அன்னடுமிடு வென்றுசொல்லி மாதியனும் ஏற்றமுள்ள
கன்னியர்க்கு வடித்ததொரு சாதம் பரிமாறி
உத்தமனார் வீரையருக்கு உறியில் தயிர்வார்த்து
வத்தல் வடகம் வகையுடனே தான்படைத்தாள்

உண்டு பசியாறி உத்தமனும் வீற்றிருந்தான்
கங்கு லிருண்டு கதிரோனும் போய்மறைந்தான்
இன்றைக்குக் காவலுக்கு ஏற்றமுள்ள வீரையனே
போய்வா மகனேயென்று போற்றி விடைகொடுத்தான்
நல்லதென்று சொல்லி நடந்தாரே அப்போது

மங்கைநல்லாள் பொம்மி மனையிலே போய்ப்புகுந்தார்
ஆதிசிவன் கர்த்தாவும் ஆனசபை தானறிய
மங்கிலியந் தான்தரிக்க மச்சினரே வாருமென்றாள்
வந்தனென்று தானகைத்து மங்கையரைத் தழுவலுற்றான்
சிரித்து விளையாடித் தேன்மொழியைத் தானணைந்தான்

தீராத ஆவலெல்லாம் தீர்ந்து தெளிந்தபின்பு
மதுரை மகாமுனிமேல் மங்கையரும் ஆசைகொண்டாள்
வாருங்கள் மைத்துனரே! வார்த்தைசொல்லக் கேளும்நீர்
முப்பது நாளும் முடிந்தது நாளையென்றாள்
நாளை குடிசு நலமாகத் தான் பிடுங்கி

மாளிகைக்குத் தானழைக்க வருவார்கள் எங்கய்யர்
உன்னைவிட்டு நான்பிரிய உத்தமனே யுருகுதுகாண்
இருவருங் கூடி இருந்து விளையாட
என்று விடியுமோ எத்தனைநாள் செல்லுமென்றாள்
நாளைக் கிழமைக்கு நலமுடனே சாத்திரங்கள்

சாத்திரத்து வேளைக்குச் சக்கிலியர் வாருமென்றாள்
வாறேன்டி சக்கிலிச்சி மத்தியான வேளைக்கு
மாதியனும் நானும் வருகிறோம் பெண்ணணங்கே
சாதம் படைக்கச் சதிராக வந்தாயேல்
மங்கையரே உன்முகத்தை மதுரையும் பார்ப்பனடி

என்னைப்போல் பெண் எவளொருத்தி யாகாதோ
நாளைப் பொழுதில் நலமாகப் பார்ப்பீர்காள்!
அதன்பிறகு என்னை யார்பார்க்கப் போறார்கள்
கோட்டைக் குறிக்காரர் கொத்தளத்துச் சேவுகரும்
பத்துதலை வாசலுக்கும் பத்துலட்சங் கோடிமன்னர்

தொட்டியற் காவல் துருசாயிருக்கு மென்றாள் உத்தமரே
உன்னை உள்ளேவிடப் போராறோ
என்று சொல்லிப் பொம்மி ஏங்கி முகம்வாடி
என்னைவிட்டு நீர்தானும் இருப்பீரோ பூமியிலே
மன்னவரே யும்மைவிட்டு மறந்தும் இருப்பேனோ

கண்ணிலே காணாமல் கலங்கியே தானழுதாள்
கண்ணீர் தனைத்துடைத்துக் காவலனு மேதுசொல்வாள்
உன்னையுங் கொண்டு ஊர்வெளி போவேண்டி
இருவரும் போய்ப்பிழைப்போம் எண்ணாதே மங்கையரே
தேறுதலைச் சொல்லித் தென்னனு தான்நடந்தான்

என்செய்வோ மென்று ஏங்கி முகம்வாடி
வீட்டுக்குப்போய் வீற்றிருந்தான் தென்மதுரை;
பொழுது விடிந்து பொம்மன ணாயக்கனும்
கொம்பு தாளத்துடனே குடுசுக்கு வந்தார்கள்
குடுசு பிடுங்கிக் கொள்ளிவைத் தப்போது

பொம்மியம்மாள் தன்னைப் பொங்கமுடன் நீராட்டி
நீராட்டி மயிர்கோதி நெத்திக்குப் பொட்டுமிட்டு
[31]கூறையுடுத்திக் கோலப் பணிபூண்டு
வாகு சுட்டிக்கட்டி மயிரால் பிறைமுடித்து
கொப்பிட்டு வாளியிட்டுக் கொந்தளப்பொன் னோலையிட்டு

நெத்திக்குத் திலகமிட்டு நீலவிழி மையெழுதிக்
கருங்குருவி வாலதுபோல் கடைக்கண் மையெழுதி
உள்கழுத்துக் காரை உசத்தியுள்ள கல்லழுத்தி
கட்டுவடம் பொன்னுருட்டு கழுத்தில் சரமணிந்து
மோகன மாலை முத்தா பரணமின்ன

மார்பில் பதக்கம் வகையுடனே தானணிந்து
முன்கை மூதாரி முருக்குவளை பொன்னோலை
கடகம் பவளமிட்டு கைவளையல் தானணிந்து
பத்து விரலுக்கும் பசும்பொன் கணையாழி
மேகவர்ணப் பட்டு விதமாகத் தானுடுத்தி

இடுப்பிலே ஒட்டியாணம் இதமாகத் தானணிந்து
காலாழி பீலி கனத்த சிலம்பணிந்து
[32] பாடகந் தண்டையிட்டுப் பாதச் சிலம்பணிந்து
மேகவர்ணப் பட்டை முக்காடு தான்போட்டு
மங்கையர்க்குத் தானும் மதுரையுந் தானப்போது

விலைமதிக்கப் போகாத மிதியடியுங் கட்டியப்போ
கொண்டுவந்து முன்போட்டான் குணமுள்ள மாதியனும்
மிதியடியைத் தொட்டாளே வேல்பொருதுங் கண்ணாளும்
மதுரையுட வேலையென்று மனங்குளிர்ந்தாள் பொம்மியரும்

**பொம்மியம்மாள் பொம்மண்ன நாயக்கன் மாளிகை அடைதல்**

தொட்டியச்சக்கிலியன் [33] துருசா உறுமிகொட்ட
தம்பட்ட மேளம் தவில்முரசு தான் முழங்க
எருததுமேல் தம்பட்டம் எட்டுத் திசையதிரப்
புல்லாங் குழலூதப் பேரிகையுந் தான்முழங்க
[34] நாக சுரமேளம் நாட்டியங்க ளாடிவர
மங்கையரும் பொம்மியம்மாள் வந்துவிட்டாள் மாளிகைக்கு

தொட்டியப் படைகளெல்லாம் தொடர்ந்து மிகநடக்கப்
பதினெட்டு மேளம் பாங்குடனே தான்முழங்க
அதிர்வேட்டு இடிவாணம் அதிர்ந்து முழங்கிவர
வாராளே பொம்மியம்மாள் வர்ணமணி மாளிகைக்கு
ஆலாத்தி சோடித்தார் அஞ்சுலட்சம் தாதியர்கள்

தாரைச் சின்னமூத தவிலோசை தான்முழங்க
மங்கையரும் பொம்மியம்மாள் வந்துவிட்டா ளரமனைக்குப்
பொம்மியரைக் கூட்டிவந்து பொறுமையுடன் தாதியர்கள்
முத்தினால் ஆலாத்தி முன்பாகச் சுற்றிவந்தார்
பவளத்தால் ஆலாத்தி பக்கமே சுற்றிவந்தார்

மாணிக்க ஆலாத்தி வகையுடனே சுற்றிவந்தார்
பட்டுச் சுழற்றிப் பாங்குடனே விட்டெறிந்தார்
கட்டியங்கள் கூற கவரி பரிமாற
மங்கைநல்லாள் தானும் மாளிகையி னுட்புகுந்து

அந்த சணமே ஆனதொரு பொம்மணனும்

தையல்நல்லாள் பொம்மிக்குச் சாத்திரங்கள் செய்யவென்று
சந்தனக்கால் வெட்டிச் சதிரமுகக் கால்நாட்டிப்
பத்திரை மாத்துப் பசும்பொன்னால் வளைபரப்பி
வச்சிரத்தூண் வகையுடனே தான்சேர்த்துச்
செண்பகப் பூவரும்பால் திறமாகத் தான்மேய்ந்து

மெல்லியலாள் தானிருக்க மேற்கட்டுத் தூக்கமிட்டு
மல்லிகையும் செண்பகமும் வகையாகப் பந்தலிட்டுப்
பச்சைக்கிளியும் பசுங்கிளியும் தானெழுதித்
தூணுக்குத் தூண் தூண்டா விளக்கெரிய
குத்து விளக்கெரிய கோதையர்கள் பாடிவர

தூணுக்குத்தூண் தூங்கா விளக்கெரிய
அகலமுள்ள பந்தலிலே அசையா விளக்கெரிய
நாத சுரமேளம் நாட்டியங்க ளாடிவரத்
தம்பட்ட மேளம் தவில்முரசு தான்முழங்க
எக்காள மூத இடிவர்ணம் கைவிருது

பட்டண மெல்லாம் பாரிமுழக்க மிட்டார்
ஊரிலுள்ள தொட்டியரும் உறமுறையா ரெல்லோரும்
பாளையப் பட்டிலுள்ள பரிசனங்க ளத்தினையும்
துரைகள் துரைமக்கள் துரைராச மன்னர்களும்
மாணிக்கப் பந்தலிலே வந்து நிறைந்தார்கள்

மங்கைநல்லாள் பொம்மியையும் வகையுடனே அலங்கரித்து
மாணிக்க மணவறையில் மங்கையரைக் கூட்டிவந்து
வச்சிரத்தால் நாற்காலி வகையுடனே தான்போட்டுப்
பொம்மியரைக் கொண்டுவந்து பொங்கமுடன் தானிறுத்தி
சாத்திரங்களெல்லாம் சதிராக வேமுடித்து

வேதங்க ளெல்லாம் முடிந்தது காணம்மானை
அன்னக் கிளியாளும் அரண்மனையிலுட்புகுந்தாள்
சந்தனமுங் கஸ்தூரி தானணிந்தா ரெல்லோரும்
பரிசனங்க ளெல்லோர்க்கும் பாக்கிலைகள் தான் கொடுத்தார்

**விருந்திடல்**

விருந்து சமைத்தார்கள் விதமான தொட்டியர்க்கு
ஆயிரக் கலச்சம்பா அரிசி வடித்தார்கள்
பதின் கலப்பருப்பு பாங்காய்ச் சமைத்தார்கள்
வாழைக்காய்ப் பொரியல் [35]வழுதலங்காய் பச்சடியும்
பச்சடியும் நூறுவகை பால்குழம்பு தான்சமைத்தார்
ஆட்டுக் கிடாயில் ஐநூறு தான்சமைத்தார்

கூவு நல்ல சாவல் கோழிசமைத்தார்கள்
வகையாய்ச் சமைத்தார்கள் மன்ன னுறமுறைக்கு
ஊள்ளூரில் தொட்டியனும் ஊர்சனங்க ளுக்கெல்லாம்
அகலமுள்ள பந்தலிலே ஆயிரம் பந்திவைத்து
பந்தி யமர்த்திப் பரிவாரம் தொட்டியரும்

உறமுறையா ரெல்லோரும் உண்டு பசியாறித்
தின்று பசியாறிச் சீக்கிரமா யெல்லாரும்
சந்தனமும் பாக்கும் தயவாக வேகொடுத்தார்.
சாப்பிட் டிளைப்பாறித் தானிருக்கும் வேளையிலே
மாதாரிச் சின்னானும் வண்டத்துரை வீரையனும்

சாதங்கள் வாங்கவென்று தான்வந்தா ரப்போது
மாதாரி முன்போக வண்டத்துரை பின்நடக்க
மாதியனும் வீரையனும் வந்தா ரரமனைக்குப்
பானையும் கொண்டுவந்து பதிவான சக்கிலியன்
இவரிரெண்டு பேரும் இதமாக நிற்கிறதைப்

பொம்மண நாயக்கன் பொறுமையுடன் தான்பார்த்து
யாரடி தாதி அன்னம் படையுமென்றார்
படையுமென்ற சத்தம் பைங்கிளியும் தான்கேட்டு
யாரென்று சொல்லி அலறி எழுந்திருந்தாள்
தாதி எழுந்து சக்கிலியன் என்று சொன்னாள்

சாதமுங் கறியும் தட்டில் பரிமாறி
தாதியர் முன்நடக்கத் தையலும் கூடவந்தாள்

மாதியர்க்கு பொம்மியம்மாள் வாரியமு திட்டாளாம்.
மதுரை நல்ல வீரையனை மங்கையரும் தான்பார்த்துக்
கண்ணாலே பார்த்துக் கலங்கினாள் பொம்மியரும்

ஏறிட்டுப் பார்த்து எண்ணமற்ற காளையரும்
கடைக்கண்ணால் மிரட்டி கார்மேகச் சாடைபண்ணி
மங்கையரும் நல்லதென்று மாளிகையி னுட்புகுந்தான்
அந்தச் சணமே அரண்மனையை விட்டவளும்
மாதியனும் வீரையனும் வந்துவிட்டார் மாளிகைக்கு

சாப்பிட் டிளைப்பாறிச் சாமிமுத்து வீரையனும்
பாக்கி லகள் தின்று பசியாறி யிருக்கையிலே
கன்னியரெல் லாங்களிக்கக் கர்ளைமுத்து வீரையனும்
மட்டற்ற காளை மதுரை மகரமுனியும்
ஏந்திழையைக் கொண்டுசெல்ல எண்ணி நினைத்தான்காண்

நினைந்துமங்கே வீரையனும் நேசமுடன் எழுந்திருந்து
மைந்தனென்று தான்வளர்த்த மாதியர்க்குச் சொல்லாமல்
பிள்ளையென்று தான்வளர்த்த பேதையர்க்குச் சொல்லாமல்
மன்னர்துரை வீரையனாம் மதுரை மகர்முனியும்
பதினைந்து நாழிகையில் பள்ளியறை விட்டுமெல்ல

சருவர் பரணமெல்லாந் தானெடுத்து மேல்பூட்டி
வண்டத் துலுக்கனைப்போல் வடிவுள்ள பாகைகட்டி
மாதளம்பூச் [36] சல்லடம் வகையுடனே தொட்டான்காண்
குத்து [37] நிசாரு தொட்டுக் குலுங்கப் பணிபூண்டு
துத்திப்பூ அங்கிதொட்டு துருசாக வீரையனும்

---------

[31]. கூறை -புதுப்புடவை [32]. பாடகம் - காலணியிலொன்று

[33]. துகுசு விரைவு [34]. நாகசறமேளம் என்றுள்ளது

[35]. வழுதலை - கத்தரி [36]. சல்லடம் - குறுங்காற்சட்டை

[37]. நிசார் - நீண்ட காற்சட்டை

-------

நடுக்கட்டுக் கச்சை நலமாகத் தான்கட்டி

இடையில் சமுதாடு ஏற்றமுடன் தான்சொருகிப்
பீரங்கிக் கத்தி பெரியகத்தி தோள்போட்டு
மாடறுக்குஞ் சூரி வலதுபுறந் தான்சொருகி
கன்னறுக்குஞ் சூரி கையிலே தானெடுத்துக்

கையம்பு நெஞ்சமுங் கட்டிகனந் தானெடுத்து
காலிலே வில்லை கனக்க மிதியடியும்
மாளிகையை விட்டு வாரான்காண் தென்மதுரை
வாரானே ஆண்டவனும் மாமலைகள் தத்தளிக்க
பூமி யதிரப் பூலோகம் தான்நடுங்க

பொம்மிமே லாசைகொண்டு புறப்பட்டான் தென்மதுரை
கொல்லைகொண்ட வீரையனும் கோட்டையை வந்துகண்டான்
கோட்டையைத் தான்பார்த்துக் குரும்பாட்டுப் பட்டிஎன்றான்
ஏறிக் குதித்தான்காண் யெண்ணமத்த காளையுந்தான்
பத்துலட்சங் கோடி பாங்கான் காளையுந்தான்

பத்துதலை வாசலையும் பாங்காகத் தான்கடந்து
பார்க்கு மளவிலே பைங்கிளியாள் வாசல்முன்னே
பொம்மிக் காவலால் பொம்மணனுந் தானுமப்போ.
தலைவாசல் முன்னே சபரமஞ்சக் கட்டிலின்மேல்
உருவின கத்தியுடன் உறங்குகின்ற வேளையிலே

பஞ்ச கல்யாணி பக்கமே கட்டிநிற்க
உள்ளறையில் பொம்மியம்மாள் உறங்குகிற வேளையிலே
இத்தனை கட்டுமெட்டாய் இருந்து நம்மை என்னசெய்வான்
என்றுசொல்லித் தான்சிரித்து ஏற்றமுள்ள தென்மதுரை
என்ன உபாயம் எடுத்தான்காண் தென்மதுரை

**மதுரைவீரன் பொம்மியின் மாளிகை அடைதல்**

ஈயென்று வேஷம் எடுத்தான்காண் ஆண்டவனும்
எடுத்தான் வடிவு எண்ணமற்ற காளையுந்தான்
கதவிடுக்கில் தான்நுழைந்து கன்னியிடம் தான்வந்து
மெல்ல உட்காந்து மெல்லியரைத் தானெழுப்பத்
தேன்மொழியாள் பொம்மி திடுக்கிட் டெழுந்தவளும்

கட்டி அணைத்துக் கனிவாய் முத்தமிட்டு
மங்கையரும் பொம்மியம்மாள் மதுரையைப்பார்த் தேதுரைப்பாள்
வாருங்காள் மைத்துனரே ஒருவார்த்தை சொலக்கேண்மின்!
பொக்கிஷ மாளிகையில் பொட்டனவே தான்புகுந்து
செலவுக்கு ஆயிரம்பொன் சீக்கிரமாய்த் தானெடுத்து
பட்டுப் பட்டாவளிகள் பாங்குடனே தானெடுத்து
அத்தனையும் கட்டி அடவா யிருவருந்தான்

**மதுரைவீரன் பொம்மியைக் கடத்திச்செல்லல்**

மாளிகையை விட்டு வாசலிலே வந்துநின்று
மட்டடங்காக் காளை மதுரா புரித்துரையும்
போம்அந் நேரம் புரவிதனை அவிழ்த்துக்

கால்கயிறுந் தான்வைத்தான் கள்ளவண்ட
தங்கக் கடிவாளம் தயவாக மேல்பூட்டி வீரையனும்
மாணிக்க முகமிட்டு வகையுடனே தான்பூட்டிக்
கழுத்துக்குப் பொற்சதங்கை கனமாக மேல்பூட்டிப்
நாலுகால் வீர தண்டை நடையனுக்கு மேல்பூட்டி

அங்கவடி பொன்னோலை அமடுபடா நடையனுக்குப்
பத்தரை மாத்துப் பசும்பொன்னால் சீனிவைத்துப்
பட்டத்துக் கத்தி பாங்குடனே தானெடுத்துப்
பொன்புரவி மேலே பொம்மியரைத் தூக்கி வைத்து
அங்கவடி கால்போட்டு ஆண்டவனு மேறினான்

ஏறினார் குதிரை எமலோகந் தத்தளிக்க
மூட்டினார் குதிரை மேகம்போல் பாய்ந்ததுவே
கோட்டை கடந்தார் கொள்ளை கொண்ட வீரையனும்
பொம்மியரை முன்னேவைத்து போகிறான் வேகமுடன்
ஆரணியந் தான்கடந்து அசையா நகரிவிட்டுக்

கோதா வரிகடந்து கோனேரி தான்கடந்து
கொல்லிமலை விட்டு குமரிமலை தான்கடந்து
கருங்கல் வழியாக காளைமுத்து வீரையனும்

தொட்டிய முசிறிவிட்டு துள்ளுகுட்டி தான் நடந்தான்
மதுரை மகாமுனியும் வல்லாளன் தென்மதுரை

வல்லமை யாக வாரானே தென்மதுரை
ஆமூர் வழியாக ஆற்றிலே வந்திறங்கி
நாட்டினார் கூடாரம் நடுமணலில் வீரையனும்
ஒத்தை நல்ல கூடாரம் ஊன்றினான் தென்மதுரை
குளிர்ந்த மணலிலே கூடாரம் தான்போட்டார்

கூடாரம் தன்னில் கொம்பனையும் வீரையனும்
பலகாரஞ் சாப்பிட்டு பள்ளிகொண் டிருவருமாய்
ஏகாந்த மாக இருக்குமந்த வேளையிலே
பொழுது விடிந்து பொம்மணனுந் தானுமப்போ
பட்டத்துக் குதிரை பஞ்சகல் யாணியாம்

பார்த்தாரே அப்போது பாங்கான பொம்மணனும்
காணா மென்றுசொல்லிக் கண்கலங்கி யந்நேரம்
பொம்மியம் மாளைப் பொங்கமுடன் கூப்பிட்டார்
நாலுசத்தம் மூன்றுசத்தம் நன்றாகக் கூப்பிட்டார்
பேசவில்லை யென்றுசொல்லிப் பெயர்த்தான் காண் பொற்கதவைப்

பார்த்துமகள் காணாமல் பதறி விழுந்தார்காண்
பொம்மியரைக் காணாமல் புலம்பி வெளியில்வந்து
வாசலெங்கும் தான்பார்த்தான் வண்ணக் கிளியாளை
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளத்தினையும்
திக்குக்குத் திக்குத் தேடித் திரிகையிலே

மாதியச் சின்னானும் மகனையுங் காணமென்று
எதிர்கொண்டு தேடிவந்தான் எண்ணமற்ற சக்கிலியன்
எல்லோரும் பார்த்து எடுத்துரைத்தார் அப்போது

**பொம்மியைத் தேடிப் பொம்மணன் படை புறப்படுதல்**

தலையாரியைத் தானழைத்து தார்வேந்தன் அப்போது
தாரை பற்றிமுன்னே தாண்டி நடவுமென்றார்

தலையாரி முன்பாகத் தளங்களெல்லாம் பின்தொடரச
சேனைவருகிறது செந்தூள் பறக்குது காண்
தென்திசையை நோக்கிச் சீக்கிரமாய்ப் போனார்கள்
வருகிற போது வழியிலே கண்டவரை
ஒத்தைக் குதிரையும் ஒருபெண்ணு மாப்பிள்ளையும்

கண்மணியே தம்பியரே கண்டீரோ இந்தவழி
என்றுசொல்லிக் கேட்டார்கள் ஏற்றமுள்ள மன்னவரும்
வாருமய்யா சுவாமி வந்தவகை சொல்லுகிறேன்
கருங்கல் வழியாகக் காரிக் குதிரையொன்று
குதிரையின் மேலொரு கோதையரும் ஆண்பிளையும்

இவரிரெண்டு பேரும் இதுதடமாய்ப் போனார்கள்
அந்தமட்டுஞ் சேதி ஆட்டிடையன் தானுரைக்க
அந்த நல்ல சேதி அடவாகத் தான்கேட்டு
பொம்மண நாயக்கன் போட்டானங் குதிரையப்போ
கருங்கல் வழியாகக் கருந்தூளும் செந்தூளும்

தொட்டிய முசிறிவிட்டுத் துருசாக வாரார்கள்
காவேரி யாற்றில் கண்டார்கள் கூடாரம்
ஆற்றி லிறங்கி அலைகொட்டி வருகுதப்பா
அப்போது பொம்மியம்மாள் அந்தசத்தம் தான்கேட்டுக்
கூடாரம் தன்னைவிட்டுக் கோதையரும் வெளியில்வந்து

வடக்குமுகம் பார்த்தாளே மங்கையரும் அப்போது
அலறியே போய்விழுந்தாள் ஆணிமுத்து வீரையன்மேல்
என்னவென்று சொல்லி எழுந்திருந்து வெளியில் வந்தார்
ஆற்று மணலெல்லாம் ஆகாசம் பறக்குதப்போ
கூடா ரத்துமேலே கொள்ளைகொள்ளை யென்றுசொல்லி

வந்து நிறைந்துகொண்டார் மகாகோடி சேனையெல்லாம்
பதினாயிரம்பேர் பாங்குடனே அம்பு தொட்டார்
கூடாரத் தைநோக்கிக் கோடியம்பு தொட்டார்கள்
துப்பாக்கி கொண்டு சுட்டார்கள் துலுக்கரெல்லாம்
பட்டா உருவி பார்த்துத் துலுக்கரெல்லாம்

வெட்டுவோ மென்று வீரமுடன் வந்தார்கள்

**மதுரைவீரன் சண்டைக்குப் போகுதல்**

கண்டுமந்த வீரையருக்குக் கடுங்கோபந் தானாகிக்
கண்கள் சிவக்குதப்போ கடுங்கோப மாகுதப்போ
கட்டழகன் மேனியெல்லாம் கலங்கித் துடிக்குதப்போ
மீசை துடிக்குதப்போ வெகுகோப மாகுதங்கே

மட்டற்ற கோபத்தை மனதி லடக்காமல்
ஏறினார் குதிரை எடுத்தார் பெரியகத்தி
குதிரையின் மேலேறிக் கொள்ளைகொண்ட வீரை யனும்
அப்போது பொம்மி ஆண்டவன் முன்னேவந்து
மன்னவனைப் பார்த்து மங்கையரு மேது சொல்வாள்

மன்னவரே உங்கள் மாமன் ஒருத்தனையும்
வேண்டாம் விட்டுவிடு வேந்தன்துரை ராசாவே
பைங்கிளியே! பெண் மயிலே ! படுகளத்தி லொப்பாரி
உண்டடியோ ஒப்பாரி உண்மைசொல்ல வந்தாயோ
என்றுசொல்லி வீரையனும் எதிராளி தன்மேலே

கொக்குத் திரளிலே ராசாளி பாய்ந்தாற்போல்
போட்டார் குதிரை பொம்மணன் சேனையின்மேல்
பரலோகந் தத்தளிக்கப் பாறிக் குதிரைவிட்டார்
வீசினார் தென்மதுரை வெள்ளரிக் காயதுபோல்
உருளுது தலைகள் ஒன்பது நூறாயிரமாம்

முன்வீச்சுக் காயிரம்பேர் பின்வீச்சுக் காயிரம்பேர்
இறந்து மடியுதப்போ எண்ணற்ற சேனையெல்லாம்
பொம்மியால் நம்முயிர் போகுதே யென்பாரும்
என்று புலம்பி இறந்து மடியுதப்போ
பட்டாணி துலுக்க ரெல்லாம் பாரம்பு தானெடுத்துக்

கொக்கரித்துச் சேனையைப்போய் கோடிசரம் அம்பு தொட்டார்
தொட்டம்பு வாளியெல்லாம் மதுரை துரை வீரையருக்கு
புஷ்பமாய் வந்து பொழியுது ஆண்டவர்மேல்

தொடர்ந்துபோய் வீரையனும் துலுக்கர் படைகளெல்லாம்
துண்டதுண்ட மாகத் துணித்தாரே அப்போது

சாயிபு சலாமென்று தான்விழுவார் கோடிபடை
பாயிபு சலாமென்று பதறி விழுவானாம்
வீரையன் படைபொருத மேலோகந் தத்தளிக்க
ஆறு குளங்கள்வற்றி அண்டமெல்லாங் கிடுகிடென
திருச்சினாப் பள்ளித் தேசத்தை யாளுகின்ற

விசையலிங்க சொக்கலிங்க வேந்தன்துரை ராணுவங்கள்
கோட்டைக் கதவடைத்துக் கொத்தளத்து மேலிருந்து
வேடிக்கை பார்க்கிறார்கள் வேந்தன்துரை ராணுவங்கள்
இப்படிப் பார்க்க இறக்கடித்தார் தென்மதுரை
பொம்மணனும் பட்டான் போய்மடிந்தார் சேனையெல்லாம்

தொட்டியப் படைகளெல்லாம் துணித்துக் கருவறுத்தான்
கத்தி பரிசை யெல்லாம் காவேரியில் தானலம்பிக்
கொள்ளைக்கொண்ட ராசாவும் கூடாரம் தான்பார்த்து
வாராராம் தென்மதுரை வண்டநல்ல தேசியின் மேல்
குலுங்க நடைநடந்து குறுஞ்சிரிப்புத் தான்சிரித்து

அடுத்தாரைக் காக்கும் ஆணிமுத்து வீரையனும்
வர்ணமணிக் கூடாரம் வந்திறங்கும் வேளையிலே
எந்தனுட ராசாவே எந்தகப்பன் எங்கென்றாள்
உன்தகப்பன் தானும் ஒக்க மடிந்தாண்டி
என்று சொல்லத் தான்கேட்டு ஏற்றமுள்ள பொம்மியரும்

அலறியே போய்விழுந்தான் அய்யன் படுகளத்தில்
பொம்மணன் மேல்விழுந்து புலம்பி யழுகலுற்றாள்
என்னாலே உங்களுயிர் எமலோகஞ் சேர்ந்ததோ
பாவிகளே எம்பொருட்டால் பட்டு மடிந்தீரோ
ஆற்றில் சுடுகாடு ஆச்சுதோ உங்களுக்கு

ஐயாவே என் தகப்பா ஆற்றில் மடிந்தீரோ
தரையிலே என்னைவிட்டால் தண்டைக்கால் நோகுமென்பீர்
பூமியிலே விட்டால் பொற்பாதம் நோகுமென்பீர்

மடியி லரிசிகட்டி மார்மேல் நடைபழக்கி
தோளிலே தொட்டில்கட்டித் தொடைமேல் நடைபழக்கி

அருமையா யெனைவளர்த்த அய்யாவே மாண்டீரோ
என்று புலம்பி யிருக்குமந்த வேளையிலே
பொம்மியருந் தானழுகப் பொறுமையுள்ள வீரையனும்
மங்கையரைத் தானெடுத்து மார்போடே தானணைத்து
அழுகை தனைநிறுத்தி அந்நேரம் வீரையனும்

திருச்சினாப் பள்ளிசென்று சீக்கிரமாய்க் கட்டைகொண்டு
சந்தனக் கட்டைகொண்டு தயவா யெடுத்தடக்கி
நீர்க்கடனும் தீக்கடனும் நீதிக்கேட்ட மாமனுக்கு
வகையுடனே காடாத்தி [38]வனமயிலும் வீரையனும்

-------

[38]. வாள்மயில் என்றுள்ளது

--------------

காவேரி தீர்த்தம் கனமாக நீராடி
மங்கையரும் வீரையனும் வந்தார்கள் கூடாரம்
கூடாரம் வந்து கோதைமயில் பொம்மியரும்
சாதமுடன் கறிவகைகள் சமைத்தாளாம் அந்நேரம்
சாமிமுத்து வீரையருக்குத் தங்கத்தாம் பாளம்வைத்து
ஆணிமுத்து வீரையருக்கு அன்பாகத் தான்படைத்தாள்

உண்டு பசியாறி உத்தமியாள் பாலகனும்
பைங்கிளியைத் தான்பாத்துப் பசியாறும் பெண்ணே யென்றார்
ஏந்திழையாள் பொம்மி எடுத்துரைத்தா ளப்போது
மன்னவனே ராசாவே மகிழ்ச்சியாய்ப் பேசுகிறாய்
தரையிலே என்னைவிட்டால் தண்டைக்கால் நோகுமென்பார்

பூமியிலே என்னைவிட்டால் பொற்பாதம் நோகுமென்று
மடியில் குழந்தைகட்டி வகையுடனே தான்வளர்த்த
போற்றி வளர்த்தெடுத்த பொம்மணனுந் தானுமிப்போ
கட்டையின் மேலிருந்து கனலா எரியயிலே
பசியாறும் பெண்ணேயென்று பதறாமல் சொன்னீரே

பாரமுடி யென்தகப்பன் பற்றி எரியயிலே
பால்பழமுஞ் சாதம் பசியாறி ஏப்பமிட்டால்
உம்முடைய சாதம் உசத்தியோ மன்னவரே
என்றுசொல்லிப் பொம்மி ஏங்கி யழுகலுற்றாள்
அஞ்சனக் காரன் அடங்காத முத்தயனும்

கண்ணீர் துடைத்துக் காரிழையாள் பொம்மியர்க்கு
வட்டில் விளக்கிவைத்து வகையுடனே அன்னமிட்டு
உண்ணுமுண்னு மென்று சொல்லி உபசரித்தார் அப்போது
உண்டுபசியாறி உத்தமியாள் பொம்மியரும்
இவரிரெண்டு பேரும் ஏகாந்த மாயிருந்து

பாக்கிலைகள் தின்று பரிந்து விளையாடி
என்னடி பொம்மி இங்கிருக்கக் காரியமேன்
கூடாரம் தான் பிடுங்கி கோட்டைக்குப் போவோமென்றார்
என்று சொல்லி வீரையனும் எழுந்திருந்தார் அப்போது
கொள்ளைகொண்ட வீரையனும் கூடாரந் தான்பிடுங்கி

**மதுரைவீரனும் பொம்மியும் திருச்சினுப்பள்ளிக்குப் புறப்படல்**

பொம்மியரும் வீரையனும் புரவி தனியேறி
திருச்சினாப் பள்ளிக்குச் சீக்கிரமாய் போகையிலே
கோட்டைக் குறிக்காரர் கொத்தளத்துச் சேவுகரும்
எந்தஊர் என்று இதமாகத் தான்கேட்டார்
மதுரை மகாமுனியும் வாய்திறந் தேதுசொல்வார்

வடக்கே யிருந்து வருகிறோ மென்றுரைத்தார்
சேவுக மில்லாமல் சிதிலமா யிங்குவந்தோம்
நல்லதென்று சொல்லி நாயக்கருக் கறிக்கையிட
விசையரெங்க சொக்கலிங்க வேந்தன்துரை தான்கேட்டு
வந்ததொரு சேவுகனை வாசல்தடை யில்லாமல்

கூட்டியிங்கே வாருமென்று கொல்லரை அனுப்பி வைத்தார்
அப்போது வந்துசொல்லி அழைத்துவரச் சொன்னார்கள்
மட்டற்ற காளை மதுரை மகாமுனியும்

வீரையன் தான்கேட்டு விருப்பமுடன் அந்நேரம்
விடுதியிலே பெண்ணைவைத்து வேந்தரிடம் தான்போனார்

வாருங்க ளென்று சொல்லி வரிசை யிடங்கொடுத்தார்
எங்கேவந் தீரென்று ஏற்றமுடன் தான்கேட்க
வடதேசம் தானிருந்து வந்தமய்யா உங்களிடம்
ஆனதொரு சேவுகமும் அடவுடனே தான்கொடுத்தால்
அரண்மனை வாசலிலே அடவாகக் காத்திருப்பேன்

என்று சொன்னார் வீரையனும் ஏற்றமுள்ள ராசர்முன்னே
என்னகாண் சம்பளம் ஏற்றமுள்ள சேவுகனே
மாசமொன்றுக் காயிரம்பொன் வகையுடனே தான் கொடுத்தால்
இருந்து சமாளிப்பேன் என்று சொன்னான் வீரையனும்
நல்லதென்று சொல்லி நாயக்கரும் தான்கேட்டு

ஆயிரம் பேருக்கு மேலான சேவுகமாம்
கட்டளையு மிட்டுக் கனத்த உடுப்பளித்து
வீரையர்க்குத் தானும் விடுதியும் தானமத்தி
வெகுமதியுந் தாள்வாங்கி விடுதிக்கே வாராராம்
குலுங்க நடைநடந்து குறுஞ்சிரிப்புத் தான்சிரித்துக்

கட்டாத காளை காரணனாம் தென்மதுரை
வந்தாரே அப்போது மாளிகைக்குத் தென்மதுரை
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
காலமே எழுந்திருந்து காலுமுகஞ் சுத்தம்பண்ணி
யானையின் மேலேறி அலங்கரித்து வாரதுவும்

குதிரையின் மேலேறிக் கோட்டைசுற்றி வாரதுவும்
பாதி பதினஞ்சில் பாங்கான முத்தயனும்
கோட்டைக்கு வெளியே குதிச்சேறி வாரதுவும்
வேஷங்கள் மாறி வீதிசுற்றி வாரதுவும்
ஆரு மறியாமல் அரண்மனைக்குள் இருக்கிறதும்

பத்தினிப் பெண்கள் பதுவைக் குலைக்கிறதும்
கன்னி யழியாத பெண்கற்பைக் குலைக்கிறதும்
இப்படித் தானும் ஏற்றமுள்ள வீரையனும்

உல்லாசக்காரன் ஒயிலழகன் வடிவுகண்டு
கன்னியர்க ளப்போது கண்கலங்கி நிற்பாரும்

தண்ணியென்று வாறாறே தாங்கி மெள்ளப் போகாறே
என்று சொல்லித் தானும் ஏங்கி விழுவாரும்
நடையுடையுங் கைவீச்சும் நாட்டிலே கண்டதில்லை
மதுரை யணிந்திருக்கும் வாசனைகள் மெத்தவுண்டு
மருந்து பொடிவாசம் மயங்குவார் கோடிபெண்கள்

கைசோர்ந்து மெய்சோர்ந்து கண்கலங்கி நிற்பாரும்
தென்ன மரம்போலே திடுக்கிட்டு விழுவாரும்
என்னை அழையாரோ என்னைமுகம் பாராரோ
ஸ்தன்யத்தைக் காட்டி விழித்து நகைத்திடுவாள்
மன்னவன்மார் பில்களப வாசனைகள் வீசிடுமே

இத்தனைக் கூத்து ஏற்றமுள்ள தென்மதுரை
கடைக்கண்ணால் பார்த்துக் கட்டழகன் தென்மதுரை
உல்லாசக் காரன் ஒயிலழகன் தென்மதுரை
அவ்வீதி விட்டு மறுவீதி வருகையிலே
தேசக் குறிகாரர் கிருஷ்ணப்ப நாயக்கருஞ்

தவசிருந்து பெற்றதொரு தங்கப்பூ மேனியரும்
மருந்துப்பொடி வாசம் வகையுடனே வீசுதென்று
ஆரென்று சொல்லி அவளெட்டித் தான்பார்த்தாள்
அப்போது தென்மதுரை ஆணிமுத்து வீரையனும்
கன்னி யிளமயிலை கண்டுமந்த வீரையனும்

வாள்மயிலை மனதிலெண்ணி வண்டத்துரை வீரையனும்
ஆகட்டு மென்றுசொல்லி அதட்டியே தான்நடந்தான்
இருங்காணும் பெண்ணேநீர் என்றேதான் வீரையனும்
பொம்மியள் மனைக்குப் போய்புகுந்தான் தென்மதுரை
சாப்பிட் டிளைப்பாறித் தங்கமுத்து வீரையனும்

நஞ்சுதின்று நஞ்சறுக்கும் நடுசாம வேளையிலே
பள்ளியறை விட்டுப் பைங்கிளியா ளரண்மனைக்கு
போகவென்று சொல்லிப் புறப்பட்டான் தென்மதுரை

ஆசார வாசல் அரண்மனையுந் தான்கடந்து
சிங்காரத் தோப்பு தெப்பக்குளங் கடந்து

வடுகத்தெரு வீதியிலே வந்துமெல்ல வீரையனும்
சுத்தாலே யேறி துருசாக் குதித்திறங்கி
ஏத்தமுள்ள தென்மதுரை யிதமாக நிற்கையிலே
நாயக்கர்மகள் தானும் ரத்தினமணி மாளிகையில்
சப்ரமஞ்சத் தங்கத்திரு கட்டி லின்மேல்

மல்லிகைப்பூ மெத்தையின்மேல் மயிலணையாள் பள்ளிகொண்டு
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
மதுரை யணிந்திருக்கும் மருந்துபொடி வாசனைகள்
மல்லிகைப்பூ செண்பகப்பூ வாய்த்தஇரு வாட்சிமுல்லை
வல்லத்துப் புனுகு வடமதுரைச் சவ்வாது

மதுரை அணிந்திருக்கும் மருந்துப் பொடிவாசம்
மங்கை படுத்திருக்கும் மாளிகையே சுற்றுதுகாண்
பள்ளிகொண்டு தானிருக்கும் பைங்கிளியா எப்போது
சுற்றி வளைந்ததுகாண் சூறா வளிப்போலே
மருந்துப் பொடிவாசம் மங்கையரைத் தானெழுப்ப

இந்தப் பொடிவாசம் ஏதுகாண் என்றுசொல்லி
காலமே கண்ட கட்டழகன் வந்தானோ
மத்தியானம் கண்ட மன்னவனும் வந்தானோ
பார்த்து மிகப்போன பாதகனும் வந்தானோ
ஆரென்று சொல்லி அறிந்துவர வேண்டுமென்று

பஞ்சணை மெத்தைவிட்டுப் பைங்கிளியு மப்போது
மாணிக்கப் பொற்கதவை வகையுடனே தாழ்திறந்து
மாளிகையை விட்டு மங்கையரும் வெளியில்வந்து
பார்க்கு மளவில் பாதகனுந் தென்மதுரை
உல்லாச மாக ஒயிலழகன் நிற்கையிலே

கண்டுமந்த மங்கையரும் கால்கள் தடுமாறி
மன்னவனைத் தான்பார்த்து மங்கையரும் போய்விழுந்தாள்
துள்ளுகுட்டி வீரையனும் துரைசாமி அப்போது

மாணிக்கக் கையாலே மங்கையரைத் தானெடுத்து
மாளிகையு னுட்புகுந்து மாணிக்க மெத்தையின்மேல்

வைத்துமந்தப் பைங்கிளியை வாய்த்ததொரு வீரையனும்
கற்பூர மையெடுத்துக் கன்னியர்க்குத் தானுமிட்டு
அந்தச் சணமே ஆனதொரு பெண்மயிலாள்
மயக்கந் தெளிந்து வாரி யெழுந்திருந்து
மன்னர் முகம்பார்த்து மங்கையரு மேதுசொல்வாள்

வாருங்காள் ராசாவே ஒருவார்த்தை சொலக்கேண்மின்
ஆரென்று சொல்லி அன்பாகத் தான்பார்த்தேன்
கடைக்கண்ணால் பார்த்துக் கதித்து நடந்தீரே
கண்காட்டி நீர்நடக்கக் காயம்பட்ட மானதுபோல்
ஊணின்றித் தவித்து உலாவியே நானிருந்தேன்

அன்னமு முண்ணாமல் அடைக்கா யருந்தாமல்
மையல் கொண்டுநான் மணிமெத்தை மேல்படுத்தேன்
இப்படி நானிருக்க ஏற்றதொரு வாசனைகள்
கலந்துதான் தூங்கையிலே கண்மயக்கந் தானாகி
எப்பவரு வீரென்று ஏங்கி யிருந்தேன்நான்

என்றுசொல்லி மங்கையரும் ஏற்றமுள்ள வீரையர்க்கு
மன்மதப் பாணம் மார்புருகிப் போகுதங்கே
கட்டி யணைத்துக் கனிவாய் முத்தமிட்டு
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாகத் தான்கொடுத்துச்
சிரித்து விளையாடித் தேன்மொழியைத் தான்சேர்ந்தார்

தீராத ஆவலெல்லாம் தீர்ந்து தெளிந்தபின்பு
மங்கையரு மப்போது மகிழ்ச்சியுட னெழுந்திருந்து
வீரையர்க்குத் தானும் வேண்டுமென்ற பலகாரம்
[39]உக்கிராணம் தான்திறந்து ஓடைமலர்க் கண்ணாளும்
அதிரசமுந் தேன்குழலும் ஆன [40] சுகிவடையும்

முருக்குப் பணியாரம் மோதகமுந் தானெடுத்துப்
பொரிகடலை சிறுபயறு போதவே தானெடுத்துச்
[41]கச்சாயம் தோசை கடலைப்பொரி யெள்ளுருண்டை

தீவுச் சரக்கு தேசத்துச் சாராயம்
ஐநூறு சீசா அடவுடனே தானெடுத்து

அத்தனையுங் கொடுத்து ஆண்டவர்க்கு அப்போது
இத்தனை நேரம் இளைப்புடனே தானிருந்தீர்
பசியாறு மென்றுசொல்லிப் பைங்கிளியுந் தான்கொடுத்தாள்
தென்மதுரை தானும் தின்று பசியாறி
ஐநூறு சீசா ஆனதொரு சாராயம்

அண்ணாக்க விட்டான்காண் ஆணிமுத்து வீரையனும்
புகைச்சுருட்டுப் பற்றவைத்துப் பொன்னணங்குத் தான்கொடுத்தாள்
புகைச்சுருட்டுத் தான்வாங்கி பொறுமையுடன் தான்குடித்தான்
அடைக்காயும் [42] வெள்ளிலையும் அன்புடன் தான்வாங்கி
வாங்கியே தென்மதுரை வகையாகத் தானருந்தி

----------

[39]. உக்கிராணம் - களஞ்சியம் பண்டகசாலை [40]. சுகி - இனிப்புப்

[41]. கச்சாயம் ஒரு வகைப் பணிகாரம் - பணிகாரவகை

[42]. வெள்ளிலை வெற்றிலை

------------

மங்கையர்மே லாசைகொண்டு மணிமெத்தை மேல்படுத்து
இவரிரெண்டு பேரும் யிதமாகத் தான்படுத்து
மன்னவருந் தேன்மொழியும் மகிழ்ச்சியுடன் தானிணைந்து
ஆசையெல்லாம் தீர அணைந்து விளையாடி
வீரையனு மப்போது மெல்ல எழுந்திருந்து

வாருமடி பெண்மயிலே வார்த்தைசொல்லக் கேளுமடி
சொல்லென்று தானும் துயிலாடை யெடுத்துடுத்திக்
கேட்டாளே அப்போது கிளிமொழியாள் எம்பெருமாள்
அப்போது சொல்லுகிறார் ஆண்டவனும் தென்மதுரை
பெண்ணமுதே நானும் போறேன்டி அரண்மனைக்கு

என்று சொல்லி வீரையனும் ஏந்திழையைக் கேட்கலுற்றார்.
மங்கையரும் தானும் மன்னன் முகம்பார்த்து
என்று வருவீர்கள் எத்தனை நாள் செல்லுமென்றாள்

மாத மொருக்க வருவனடி தப்பாமல்
என்று சொல்லி வீரையனும் இதமாகத் தானுரைத்தார்

மங்கையர்க்குத் திடஞ் சொல்லி மதுரை மகாமுனியும்
[43] சுத்தாந்தச் சுவரேறி துருசாய்க் குதிச்சாராம்
உல்லாசக் காரன் ஒயிலழகன் தென்மதுரை
ஆணிமுத்து வீரையனும் அசைந்து நடைநடந்து
வாரான்காண் பொம்மி வர்ணமணி மாளிகைக்கு

வீரையனு மப்போ விடுதிவந்து சேர்ந்தானாம்
கட்டாத காளையைத்தான் கண்டாளே பொம்மியரும்
பொம்மியருங் கண்டு பொங்கியே கோபங்கொண்டு
அழுதசத்தம் தான்கேட்டு ஆரணங்கு பொம்மியரும்
ஆரென்று சொல்லி அன்னம்போ லோடிவந்து

வீரையன் தான்பார்த்து வேல்பொருதுங் கண்ணாளும்
கல்லான மேனிக்குக் கலக்கமில்லை யென்றிருந்தேன்
தங்கத்திரு மேனிக்குத் தாழ்வில்லை என்றிருந்தேன்
பூலோக முள்ளமட்டும் பொங்கமுடன் வாழ்வமென்று
எழுத்தை யறியாமல் எண்ணினனே கோடிசிந்தை

தகப்பனை நானிழந்து தாயரைத் தான்பிரிந்து
மனுசரையும் விட்டு மகிழ்ச்சியுடன் உன்பிறகே
நம்பிவந்தே னுன்பிறகே நட்டாற்றில் விட்டாயே
என்றுசொல்லி கோதையரும் ஏங்கியே தானழுதாள்.
ஆண்டவனே சுவாமி அசடுவந்த வகையேது

தங்கத்திரு மேனியிலே தழும்புவந்த வாறேது
மன்னவனே உன்னை வழிமறிப்பார் தானுமுண்டோ
மட்டற்ற கோபத்தை மனதி லடைக்கின்றீர்
ஆண்மையும் புசபலமும் அடக்கினீர் நெஞ்சகத்தில்
கல்லான தூணைக் கரையான் அரித்ததோ

இரும்பான தூணை ஈவந்து மொய்த்ததேன்
எங்கேயோ வானம் இடிக்குது என்றிருந்தேன்
காலடியில் செம்மான் கதறி விழுந்ததிங்கே

[44] சத்துராதி யென்று சற்று மறியேனே
வஞ்சனைக் காரனென்று வகையொன்று நானறியேன்

என்றுசொல்லித் தானும் எண்ணி யழுகலுற்றாள்
தண்ணி வெறிக்காரன் தனஞ்சயனு மப்போது
இத்தனைக்கு நீசலித்தாய் ஏந்திழையே பொம்மியென்று
வாரி எடுத்து மார்போட தானணைத்துத்
தெருவீதி போனதில்லை தேன்மொழியைக் கண்டதில்லை

உன்னைவிட்டு நானும் ஒருத்தர்முகம் பார்த்ததில்லை
என்மேலே சந்தேகம் எண்ணி நினைக்காதே
பைங்கிளியே நானும் பரவசமாய்ச் சொன்னேண்டி
என்றுசொல்லி வீரையனும் ஏந்திழையை மனந்தேற்றி
உண்டு பசியாறி உத்தமனார் வீரையனும்

அந்தநாள் சென்று மத்தநாள் வீரையனும்
ஆசார வாசல்விட்டு அரண்மனைக்குத் தானடந்தார்
விசையரெங்க சொக்கலிங்கம் வேந்தன்துரை ராசாவும்
தரிசனங் கொடுத்துத் திகைத்திருக்கும் வேளையிலே
மன்னர்துரை ராசருக்கு மதுரையிலே தானிருந்து

வெள்ளித் தடிக்காரர் விருசாக ஓலைகொண்டு
துருசாக ஓலைக்கொண்டு தூதுவர்கள் ஓடிவந்தார்
ஆசார வாசல்வந்து அடவுடனே கைதொழுது
கச்சித் திருமலையன் காரணமா யெழுதிவிட்ட
[45] உத்தரமுங் கொண்டுவந்து ஒப்பமுடன் முன்வைத்து

வைத்ததொரு உத்தரத்தை வாகுடனே தானெடுத்து
விசையரெங்க சொக்கலிங்கம் வேந்தன்துரை ராசாவும்
வாசித்துப் பாருமென்று வகையுடனே சொன்னாராம்
காரியக் காரர் கணக்கெழுதும் பிள்ளைகளே
கோட்டைக் குறிக்கார கொத்தளத்துச் சேவுகரே

[46]கெஷ்த்திக் குறிக்கார கிருஷ்ணப்ப நாயக்கரே
ஆயிரம்பொன் சேர்வை ஆணிமுத்து வீரையனே
எல்லோரும் கேளுங்கள் அடவாகத் தானிருந்து

விசையரங்க சொக்கலிங்க வேந்தன்துரை ராசாவும்
மதுரையிலே தானிருந்து வந்ததொரு சேதிதன்னைச்

சேர்வை தானிருந்து சேர்ந்த சபை நடுவே

**மதுரைச்சிறப்பு**

மதுரை இருகாதம் வாழ்மதுரை முக்காதம்
வைகை நதியும் வற்றாத பொய்கைகளாம்
சொக்கருட சன்னதியாம் சொர்ணமணிக் கோபுரமாம்
அங்கையற்கண் சன்னதியாம் அசையாத் திருமதிலாம்

மீனாட்சி சன்னதியும் வெண்முத்தால் கோபுரமாம்
சுற்று மதிலும் சூழ்ந்தநிலைக் கோபுரமும்
புஷ்ப வனமும் பொற்றா மரைக்குளமும்
வண்டியூர்த் தெப்பக்குளம் வற்றாத ஊருணியும்
இப்படித் தானிருக்கும் எண்ணமற்ற ராச்சியத்தில்

-------

[43]. சுத்தாந்தம் - அரசன்தேவியில்லம்

[44]. சத்துராதி-பகைவன்

[45]. உத்தரம் -மறுமொழி,எதிர்மொழி

[46]. ?

----------

**கள்வர் தொல்லை**

தன்னரசு நாட்டும் தனிக்காட்டுக் கள்ளரெல்லாம்
நாட்டிலுள்ள கள்ளரெல்லாம் நன்றாய்க் கூட்டமிட்டு
அழகருட கோவிலுக்கு ஆரொருவர் வந்தாலும்
தாலிபறி சீலைபறி தான்பிடுங்கிப் போறதுவும்
ஆம்பிளையைக் கண்டால் ஆனதலைக் கொயிறதும்

மதுரையுட வீதி வடக்குநல்ல வாசல்மட்டும்
தனியொருவர் வந்தால் தலைக்கொய்து போறதுவும்
கண்ட விடமெல்லாம் கள்ளரு பத்திரியம்

உழவு நடவுமில்லை உபத்திரத்து னாலேயிப்போ
கொல்லரிடம் பொன்முடிப்புக் கொடுக்கப் பயமாச்சு

இப்படிக் கள்ளர் இசவுபண்ணி வாரதுவும்
யென்றுசொல்லி நாயக்கர் எழுதிவிட்டா ரென்றுசொல்லி
விசையரங்க சொக்கலிங்க வேந்தன்துரை தானுரைக்க
எல்லோருங் கேட்டு ஆகட்டு மென்றுசொல்லி
ராசர் முகம்பார்த்து நன்றா யெடுத்துரைப்பார்

தன்னரசு நாட்டுத் தனிக்காட்டுக் கள்ளரையும்
வெட்டிக் கெலிக்க வேந்தரா லாகாது
ஒருத்தரால் முடியாது உள்ளபடி சொல்லுகிறேன்
ஆயிரம்பொன் சேர்வை ஆணிமுத்து வீரையனை
சேனைகள் கூட்டித் தெற்கே அனுப்பிவைத்தால்

கள்ளர்பற்று நாட்டைக் கருவறுப்பான் தென்மதுரை
சீக்கிரமாய்த் தான்வருவான் தெள்ளிமைக் காரனவன்
என்றுசொல்லி எல்லோரும் இதமாகத் தானுரைத்தார்

மதுரைவீரன் கள்ளர்களை அடக்க மதுரைச்செல்லல்
அந்தநல்ல சேதி அடவுடனே தான் கேட்டு
விசையரங்க சொக்கலிங்க வேந்தன்துரை தான்கேட்டு

வீரையனைத் தானழைத்து வெகுமதியுந் தான்கொடுத்துப்
பதினெட்டு மேளம் பாங்குடனே தான்முழங்க விடைகொடுத்தார்.
போய்வாரு மென்றுசொல்லி போற்றி
அடைக்காயும் வெற்றிலையும் அடவாகத் தான்கொடுத்து
அத்தனை வெகுமதியும் அடவாகத் தான்வாங்கி

அனுக்கிரகம் பெற்று ஆணிமுத்து வீரையனும்
பாங்கான வீரையனும் பல்லக்கு மேலேறி
ஏறினார் பல்லக்கு எண்ணமற்ற சேனையுடன்
பொம்மியர் மனைக்குப் பொங்கமுடன் வாராராம்
கன்னியரும் பார்த்து கண்பிரிய முண்டாகி

பூரித்துப் பொம்மி பொங்கமுடன் வீற்றிருந்தாள்

ஆணிமுத்து வீரையனும் அரண்மனைக்கு வந்திறங்கிக்
கோதி மயிரைக் குளிரச் சினுக்கறுத்து
செங்கமலக் கையினால் சீக்கிரமாய் மயிர்முடித்துச்
சீரான நெற்றியிலே சிவசிவா வென்றுசொல்லி

அணிந்தான்காண் வெண்ணீறு ஆணிமுத்து வீரையனும்
கந்தபொடி கஸ்தூரி கீறினான் தன்மார்பில்
[47] கட்டுவர்க்கம் தானணிந்து கனத்த பணிபூண்டு
சாப்பிட் டிளைப்பாறிச் சாமிமுத்து வீரையனும்
பாக்கிலைகள் தின்று பறந்து விளையாடி

வாருமடி பெண்ணேஓர் வார்த்தைசொல்லக் கேளுமடி
மதுரையிலே கள்ளர்வந்து வெகுலூட்டி செய்கின்றார்
என்று சொல்லி நாயக்கர் யிதமுடனே யெனையழைத்துப்
பல்லக்கு வெகுமதியும் பரிவுடனே தான்கொடுத்துப்
போய்வாரு மென்றுசொல்லிப் போற்றி விடைகொடுத்து

ஆகையினாலே ஆரணங்கே நீர்தானும்
பயணம் புறப்பட வேணுமடி பைங்கிளியே
என்றுசொல்லி வீரையனும் எழுந்திருந்தான் அந்நேரம்
பொம்மியருந் தானும் பிரியமுடன் வெளிவந்து
அனையோர்க்கும் பயணஞ்சொல்லி ஆணிமுத்து வீரையனும்

ஏறினார் குதிரை எடுத்தார் நெடுங்குடையைப்
[48]பரிக்கு நகுலனைப்போல் பாய்ந்தாராம் தென்மதுரை
ஐயா யிரஞ்சேனை அடவாகக் கூட்டமிட்டு
மதுரைத் திசைநோக்கி மங்கம்மா சாலைவழி
நடந்தான்காண் தென்மதுரை நாலு திசையதிர

ஆனைமேல் பேரிகை அதிர்ந்து முழங்கிவரக்
குதிரைமேல் டங்கா கூடத் தொடர்ந்துவரத்
தம்பட்டங் கொம்பு தவிலோசை தான்முழங்கப்
புல்லங் குழலூத பேரிகை கொட்டிவர
நாத சுரமேளம் நாட்டியங்க ளாடிவரப்

பட்டுக் குடைகள் பக்கமே சூழ்ந்துவர

பஞ்சவர்ண டால்விருது பாவாடை வீசிவர
புண்ணியனார் வீரையர்க்கு பூச்சக்கரக் குடைநிழற்ற
வெண்சா மரைவீச வேதியர்கள் பாடிவர
இருபுறமுங் கவரி இதமுடனே வீசிவரக் 1260

கட்டியங்கள் கூறக் கவிவாணர் பாடிவரப்
பட்டுடனே ராசாக்கள் பரிவுடனே கூறிவர
நடந்தான்காண் தென்மதுரை நாட்டமுடன்
பூமி யதிரப் பூலோகம் தத்தளிக்கச் வீரையனும்
சேனை வருகிறது செந்தூள் பறக்குதய்யா 1265

துள்ளுக்குட்டி வீரையனும் மணப்பாறை வீதியிலே
கூடாரந் தானடித்துப் பொம்மியரும் வீரையனும்
மணப்பாறை துறைகண் பானைசட்டி எரிதுரும்பு
பாங்குடனே தானமத்தி (பக்குவமாய்த் தான்சமைத்து)
ஆனதொரு சேனைக்கு ஆகுமென்ற தளவாடம் 1270

பால் தயிருநெய் பாங்குடனே (தான்சேர்த்து)
வீரையர்க்கும் பொம்மியர்க்கும் விருந்து சமைத்தார்கள்
பயபத்தி யாகப் பாங்குடனே காத்திருந்தார்
கங்குல் விடிந்து கதிரோ [49](னும் வந்துதித்தான்)
பயணமென்று சொல்(லிப் பாரசின்ன மூதலுற்றார்) 1275

ஆனைமேல் பேரிகை (அதிர்ந்து முழங்கிவர)
குதிரைமேல் நகார் கூட முழங்கிவர
ஓட்டகம்மேல் பேரிகை ( ....... ............ )
[50] (.......... ............... .................)
கூடாரம் தான் பிடுங்கிக் கொள்ளைகொண்ட வீரையனும் 1280

தென்திசையை நோக்கிச் சீக்கிரமாய் வருகையிலே
வீரையன் சேனைதளம் வெகுண்டு வருகுதென்று
தோரா துலக்கையனும் தும்பிக்கைப் பூச்சியனும்
இவரிரண்டு துரைமாரும் ஏற்றதொரு ராணுவமும் 1285

மாம்பூண்டிச் சாலையிலே வந்து எதிராக
திகட்டுநல்ல பாகும் சாலுவையு முன்வைத்து

வீரையனும் முன்பாக விதமுடனே முன்வைத்து
இருவருங் [51] கைகுவித்து எதிராக நின்றார்கள்
வாருங்கள் என்றுசொல்லி வரிசையுடன் தானழைத்துச்

சேனைபடை நீங்கள் சீக்கிரமாய்ப் போயெறங்கச்
சமையலுக்கு நல்ல சௌக்கியமெங் கேயென்றார்
இவரிரண்டு துரைமாரும் இதமாகத் தான்கேட்டு
அய்யாவே சுவாமி அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன்
துவரங் குறிச்சிக்குத் துருசாகப் போய்ச்சேர்ந்தால்

தண்ணீர்ச் சௌக்கியமும் சாலை நல்ல தோப்புகளும்
பேட்டைநல்ல சாவடியும் பெரிய கடைத்தெருவும்
ஊருக்கு மேற்கே உசந்தக் [52] கிராய் மேடு
பாளையமுந் தானிறங்க, பந்தியிட இடமுண்டு
என்றுசொல்லி நாயக்கன் ஏற்றமுடன் தானுரைத்தான்

-----------

[47]. கட்டுவர்க்கம் - பலவீத உடை

[48]. பறிக்கு நல்குலனேப்போல் ஏன்றுள்ளது

[49]. இவ்வரியிலிருந்து ஐந்துவரிகளில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் சுவடியில் இல்லை (முறிந்துள்ளது)

[50]. சுவடியில் வரியில்லை

[51]. கைமுகஞ்சு என்றுள்ளது. [52]. கிராய் - புறகாடு; கருஞ்சேற்று நிலம்

------------

நல்லதென்று சொல்லி நடந்தான்காண் வீரையனும்
பாளையப் பட்டார் பாதை கொண்டு முன்னடக்கத்
தீர்க்கமுள்ள வீரையனும் சேனைப் படைத்தளமும்
துவரங் குறிச்சிக்குத் துருசாகப் போய்ச்சேர்ந்தார்
ஊருக்கு மேற்கே உசந்தக் கிராய்மேட்டில்

அனுமந்த கூடாரம் அடவாகத் தானாட்டி
வானமுட்டக் கூடாரம் வகையுடனே தானாட்டிச்
கோட்டைச் சலாதியிட்டுக் கொள்ளைகொண்ட ராசாவும்
விரிந்தநல் கூடரத்தில் வீற்றிருந்தார் தென்மதுரை

சேனைப் படையுடனே தீரன் கொலுவிருந்தார்

கார்வண்ணன் தென்மதுரை கட்டழகன் கொலுவிருந்தான்
பூச்சிய நாயக்கன் பொறுமையுடன் ஓடிவந்து
ஒசத்தியுள்ள பாகுகளும் உண்மையாய்க் கொண்டுவந்து
ஒடுங்கியே முன்வைத்து ராசாவும் கைதொழுதார்
கட்டாணி முத்துக் காரழகன் தான்பார்த்து

வாருங்காள் என்றுசொல்லி வரிசையுடன் தானழைத்து
அப்போது பூச்சியனும் ஆனபடை சேனைக்கெலாம்
சொல்லுமென்ற சாமான் சீக்கிரமாய் தான்கொடுத்து
விருந்து சமைத்தார்கள் வீரையர்க்கும் பொம்மியர்க்கும்
பாங்கான வீரையர்க்குப் படிச்செலவு தான்கொடுத்து

காரழகன் கொலுவில்முன் கருத்தாகத் தானிருந்து
ஆசிராய் காத்திருந்தான் ஆனதொரு பூச்சியனும்
சாப்பிட் டிளைப்பாறித் தங்கமுத்து வீரையனும்
பாக்கிலைகள் தின்று பாங்காக வீற்றிருந்தார்
அந்தநாள் சென்று அலைகதிரோன் வந்துதித்தான்

காலமே எழுந்திருந்து காலுமுகஞ் சுத்திபண்ணி
வண்டத் துலுக்கனைப்போல் வடிவுள்ள பாகைகட்டி
அங்கி நிசாறுதொட்டு அடவுடனே கச்சைகட்டி
பதினெட்டு ஆயுதமும் பாங்குடனே தானணிந்து
கூடாரம் தான் பிடுங்கிக் கொள்ளைகொண்ட வீரையனும்

பாளையங் கூச்சிபண்ணி பாங்கான தென்மதுரை
ஏறினார் குதிரை எடுத்தார் பெரியகத்தி
நடவு நடவுமென்று நட்டபேரி தான்முழங்க
துவரங் குறிச்சிவிட்டுத் துருசாகத் தான்நடந்தார்
வீரன் சேனைதளம் வேகமாய் வருகுதய்யா

நத்தத்து லிங்கயனும் நலமுடனே தான்பார்த்து
ஆசீராய் காத்திருந்தான் ஆனதொரு லிங்கயனும்
அந்தநாள் சென்று அலைகதிரோன் வந்துதித்தான்
[53]மத்தாநாள் காலமே மன்ன னெழுந்திருந்து

மதுரையை நோக்கி வரிசையுடன் நடக்கலுற்றார்

ஆனைபடை சேனைகளும் [54]அதிர்த்தியாய் வாரார்கள்
வைகைக் கரையோரம் வந்தடித்தார் கூடாரம்
அடித்தார்கள் கூடாரம் ஆன திசையதிரச்
சிங்கமுகக் கூடாரம் சீராகத் தானடித்தார்

மாணிக்கக் கூடாரம் மானமுட்டத் தானடித்தார்
கோட்டை [55]சலாதியிட்டுக் கொள்ளைகொண்ட வீரையனும்
விடுதியிலே தானும் வீற்றிருந்தார் தென்மதுரை
கொத்தளத்து மேலிருந்து கோட்டைத் தலையாரி
திட்டனவே யோடிவந்து திருமலைநா யக்கர்முன்னே
சிந்துகண்டு தெண்டனிட்டு வகையுடனே சொல்லலுற்றார்

வடக்கே யிருந்து வருகுதய்யா சேனைதளம்
குதிரைப் படையும் கொள்ளைகொண்ட ராணுவமும்
ஆனைப்படை சேனைதளம் அன்பாகத் தானும்வந்து
வைகைக் கரையோரம் வந்தடித்தார் கூடாரம்
மாதானப் படையோ மறுமன்னர் தன்படையோ

ஆரோ தெரியாது அடியேன்நான் கண்டுவந்தேன்
என்றுசொல்லித் தானுரைத்தான் இதமாக ராசர்முன்னே
திருமலை நாயக்கர் சேதி தனைக்கேட்டுச்
சிங்காதனம் விட்டுச் சீக்கிரமாய்த் தான்குதித்து
உப்பரிகை மேலே உயரவே தானேறிப்

பார்த்தானாம் வடக்குமுகம் பார்த்துமந்த சேனையைத்தான்
கண்டு நெடுநேரம் கலங்கியே ராசர்மன்னன்
யாரென்றா லென்ன ஆகட்டும் என்றுசொல்லி
அரிக்காரப் பிராமணரை அன்பாகத் தானழைத்து
வரண்டு பேரையும் இதமாகத் தானழைத்து

யாரென்று சொல்லி அறிந்துமெள்ள வாருமென்று
அந்நேரம் தானும் [56]அரிக்காரர் தானோடி
வைகை நதிகடந்து வந்துமெள்ள பாளையத்தில்
வேதிய ரிருவரையும் மேட்டிலே தான்மரித்தார்

யாரென்று சொல்லி அப்போது தான்கேட்டார்

நாயக்கர் அனுப்பிவைக்க நாங்கள்வந்தோ மென்றுசொன்னார்
அந்த மொழிகேட்டு ஆனதொரு [57] மேட்டாளர்
எஜமானுக் கிருக்கையிட்டு இப்பவே நான்வாறேன்
வாறே னென்றுசொல்லி மன்னனுக் குரைத்திடவே
மன்னன்துரை வீரையனும் வந்ததொரு சேவுகனே

அட்டியில் லாமல் அழைத்துவா வென்றுரைத்தார்
அப்போது மேட்டாள் அடவாக ஒடிவந்து
உம்மை வரும்படியாய் உத்தாரம் தான்கொடுத்தார்
எசமானன் கூடாரம் எங்கென்று தான்கேட்டார்
மத்தியிலே தானிருக்கும் மாணிக்கக் கூடாரம்

என்றுசொல்லித் தானும் ஏற்றமுடன் தானுரைத்தார்
நல்லதென்று சொல்லி நாட்டமுடன் வேதியர்கள்
மேடுங் கடந்து வேகமுட னந்தநொடி வந்துகண்டு
வீரையன் கொலுவிருக்கும் விடுதிமெல்ல
இவரிரண்டு பேரும் ஏற்றமுடன் கைதொழுதார்

கூடவே கைதொழுதார் குணமுள்ள தென்மதுரை
எங்கேவந் தீர்களென்று ஏற்றமுடன் தான்கேட்டார்
திருமலை நாயக்கன் தீர்க்கமுடன் தான்போய்
ஆரென்று சொல்லி அறிந்துவரச் சொன்னார்காண்
என்றுசொல்லித் தானும் இருவரும் தானுரைத்தார்

வேதியரைத் தான்பார்த்து வீரையனு மப்போது
விசையரெங்க சொக்கலிங்கம் வேந்தரும் தானழைத்து
மதுரைக்குப் போய் வன்மையுடன் கள்ளரைத்தான்
மட்டடக்கி வாருமென்று வரிசையுடன் அனுப்பிவைத்தார்
ஆகையி னாலே அடவுடனே வந்தமென்றார்

நா யக்கர் தான்கொடுத்த நலமான [58]உத்தாரம்
எடுத்துமவர் கைக்கொடுத்தார் ஏற்றமுள்ள வீரையனும்
வாங்கியே அரிக்காரர் வகையுடனே தான்நடந்தார்
திருமலை நா யக்கர் முன்னே உத்தாரம்

கொண்டுவந்து கைகொடுத்துக் குணமாகக் கைதொழுதார்

வாசித்துப் பார்த்து மகிழ்ச்சியுடன் நாயக்கரும்
வடக்குநல்ல வாசலிலே வகையுடனே செப்பனிட்டார்
விடுதி யலங்கரித்தார் வீரையர்க்குத் தானுமப்போ
அன்னசத் திரசெட்டி அரண்மனையைத் தானமத்தி
இத்தனையும் தானமத்தி ஏற்றமுள்ள வீரையர்க்கு

வாசல் பிரதானி [59] வரிசையுள்ள சாமயனும்
ஆனைபடை சேனைதளம் அன்பாகக் கூட்டமிட்டு
எழுதிகொண்டு நீயும் இன்பமுடன் தான்போய்
ஆணிமுத்து வீரையனை அன்பாகத் தான்போய்
அழைத்துமே வாருமென்று அன்பாய் விடைகொடுத்தார்

எழுந்திருந்து சாமயனும் ஏறினார் குதிரையின்மேல்
குதிரை நடக்கக் கோடிதளம் பின்தொடரப்
பதினெட்டு மேள வாத்தியங்கள் தான்முழங்க
வெள்ளை விசிறி விதமுடனே தான் நடந்தார்
அடித்தானாம் பேரிகை அண்டரண்டம் தானதிர

வீரைய் னுமப்போ வேகமுடன் தானெழுந்து
ஏறினார் யானை எடுத்தார் நெடுங்குடையைக்
காளைசின்ன மூத கவரி பரிமாற
எக்காள மூத இடிவான மேயதிர
நாகசின்ன மூத நாட்டியங்க ளாடிவர

கட்டியங்கள் கூறக் கவிவாணர் பாடிவரப்
பஞ்சவர்ண டால்விருது பக்கமே சூழ்ந்துவர
வைகைக் கரைவிட்டு வருகிறார் வீரையனும்
சாமயன் சேனைதளம் சதுராக முன்வந்து
வாருமென்று சொல்லி வகையுடனே தானழைத்து

இருவர் படையும் யெண்ணற்ற காலாளும்
அதட்டி நடந்தார்கள் அன்பான சேனைதளம்
பூமி யதிரப் பூலோகம் தத்தளிக்க
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளத்தினையும்

மச்சேறிப் பார்ப்பாரும் மதிலேறிப் பார்ப்பாரும்

குட்டிச் சுவரேறிக் குதிச்சோடி பார்ப்பாரும்
வீதியி லுள்ளசனம் வேடிக்கை பார்ப்பாரும்
மதுரைத்தெரு வீதிவிட்டு வடக்குநல் வாசலிலே
மயங்காமல் வீரையனும் வரிசையுடன் கூடாரம்
அடித்தான்காண் கூடாரம் அண்டமெல்லாந் தானதிரத்

திருமலை நாயக்கா செண்ப (க) மணி மாளிகைக்குப்
பொம்மியரைத் தானும்வைத்து பெர்றுமையுள்ள வீரையனும்
பாங்கான வீரையனும் பல்லக்குத் தானேறி

**மதுரைவீரன் திருமலை நாயக்கரைச் சந்தித்தல்**

திருமலை நாயக்கர் சிறப்பாய்க் கொலுவிருக்கும்
ஆசார வாசல்முன்னே அன்பாகத் தான்போய்ப்

பல்லக்கு விட்டிறங்கிப் பாங்கான வீரையனும்
திருமலை நாயக்கரைத் திறமாகக் கைதொழுதார்
கூடவே கைதொழுதார் குணமுள்ள கர்த்தாவும்
வாருமென்று சொல்லி வரிசை யிடங்கொடுத்தார்
அப்போது வீரையனும் அன்பான வார்த்தைசொன்னார்

பதினைஞ்சு நாளையிலே பாங்கான கள்ளரைத்தான்
வெட்டிக் கருவறுத்து விருதுபெற்று வாரனய்யா
என்றுசொல்லி வீரையனும் ஏற்றமுடன் தானுரைத்தார்.
நாயக்க ரதுகேட்டு நன்றாகத் தான்மகிழ்ந்தார்
வீரையர்க்குத் தானும் வெகுமதியுந் தான்கொடுத்து

வண்டநல்ல வீரையனும் வாங்கினார் வெகுமதியை
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாகத் தான்கொடுத்து
அரண்மனைக்குப் போமென்று அனுப்பிவைத்தார் வீரையனை
வீரையனு மப்போ மெள்ள எழுந்திருந்து
ஆசார வாசல் அரண்மனையைத் தான்நோக்கி

ஏறினாா பல்லக்கு எண்ணமற்ற சேனையுடன்

சீக்கிரமாய்த் தானே சேனையுடன் மெள்ளவந்து
அரண்மனையில் வந்து அன்பாக வீற்றிருந்தார்
பாங்கான மூதையர்க்குப் படிச்செலவு தானமர்த்திச்
சேனைபடை காவலர்க்குச் செல்லுமென்ற திரவியங்கள் 1460

அடவுடனே கொடுத்துவிட்டார் அன்பான வீரையர்க்கு
வாங்கியே செலவுபண்ணி வகையுடனே வீற்றிருந்தார்
அந்த நாள் சென்று அலைகதிரோன் வந்துதித்தார்
காலமே எழுந்திருந்து கால்முகம் சுத்திபண்ணிப்
பட்டண மெல்லாம் பாங்குடனே சுற்றிவந்து 1465

சாப்பிட் டிளைப்பாறிச் சாமிமுத்து வீரையனும்
[60]சாயரட்ச வேளைக்குத் தங்கதுரை வீரையனும்
தீவிட்டிச் [61] சலாத்துடனே சீக்கிரமாய்த் தான்போய்
சொக்கருட சன்னதியில் துருசாகத் தான்போய்
சீர்பாதம் தன்னைக்கண்டு சேவித்து வருகிறதும் 1470

---------

[53]. மறுநாள் [54]. அதிரித்தம் - மிகுதி

[55]. சலாத்தி-திரைச்சீலை

[56]. நூதன், கட்டியங் கூறுவோன். [57]. மேட்டினாம்தலைமை

[58]. உத்திரத்தை என்றுள்ளது. [59]. பிரதானி -அதிகாரன், பொக்கிஷக்காரன்

[60]. சாயரட்சை-சாயங்காலம். [61]. சலாத்தி திரைச்சீலை

-------------

இப்படித் தானும் யிருக்குமந்த வேளையிலே
தன்னரசு நாட்டு தனிக்காட்டுக் கள்ளரெல்லாம்
நாட்டிலுள்ள கள்ளரெல்லாம் நலமுடனே கூட்டமிட்டு
வாள் தடியுஞ் சக்கரமும் வகையுடனே தானெடுத்து
ஈட்டிக்கோல் தானெடுத்து ஏவலருங் கூட்டமிட்டு 1475

மதுரைக் கடைவீதி வந்துமெள்ளத் தாம்புகுந்து
காசுபணம் ரொக்கம் கனமாகக் கொள்ளையிட்டுப்
பட்டுப் பட்டாவிளிகள் பாங்காகக் கொள்ளையிட்டுப்
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளெல்லோரும்
கோவென்ற சத்தம் கூக்குரலுந் தானாகிப் 1480

பட்டணத்துத் தலையாரி பாங்குடனே ஓடிவந்து
திருமலைநா யக்கரிடம் திறமுடனே சொப்பலுற்றார்
திருலைநா யக்கர் சேதி தனைக்கேட்டு
ஆணிமுத்து வீரையனை அன்னேரந் தானழைத்து
அடைக்காயும் வெள்ளிலையும் அன்பாகத் தான்கொடுத்து 1485

வெட்டிக் கெலித்து விருதுபெற்று வாருமென்று
போற்றி விடைகொடுத்துப் போய்வாரு மென்றுரைத்தார்
நல்லதென்று சொல்லி நளினமுள்ள வீரையனும்
ஏறினார் குதிரை எண்ணற்ற சேனையுடன்
சேனைப் படைத்தலைவர் சிறப்புடனே கூட்டமிட்டு 1490

வடக்குநல்ல வாசல்விட்டு வகையுடனே தான்நடந்தார்
நலமுடனே வீரையனும் நடந்தார்கா ணம்மானை
பொல்லாத வீரையனும் பொங்கியே கோபமுடன்
பட்டாவுருவி [62]பரிஞ்சிமேல் கைபோட்டார்
கள்ளர் படையில் கருத்துடனே போய்ப்புகுந்து 1495

பீரங்கிக் கத்தி பெரியகத்தி தானெடுத்து
வீசினார் கள்ளரையும் வீராதி வீரையனும்
முன்வீச்சுக் காயிரம்பேர் பின்வீச்சுக் காயிரம்பேர்
இந்தப் படியாக இறக்கடித்தான் வீரையனும்
தன்னரசு நாட்டுத் தனிக்காட்டுக் கள்ளரெல்லாம் 1500

கொக்கரித்துச் சேனைதளம் கோடிபடை தானடந்து
வாள்தடி சக்கரத்தால் வகையுடனே தானெறிந்தார்
ஈட்டிக் கோலாலே யெறிந்தார்கள் வீரையனைக்
கள்ளர் படைபொருது காரணனும் தென்மதுரை
கண்கள் சிவந்து கடுங்கோபம் தானாகி 1505

[63] ஐவிரலிக் கண்கள்ரெண்டும் செவ்வரளி பூத்ததுபோல்
வாயா லுதிரம் வலதுகண்ணால் செஞ்சாரல்
மட்டுக் கடங்காத மதுரா புரிதுரையும்
வர்குதார் பெரியகத்தி வகையுடனே தானெடுத்துக்
கொக்குத் திரளிலே ராசாளிப் பாய்ந்தாற்போல் 1510

பொல்லாத வீரையனும் பொங்கியே வீசலுற்றார்
கள்ளர் படைகளெல்லாம் கலங்கியே மெய்மறந்து
காலொடிந்து வீழ்வாரும் கையொடிந்து வீழ்வாரும்
மெய்யசந்து வீழ்வாரும் விதிவசமே யென்பாரும்
கள்ளர் படைகளெல்லாம் கருவறுக்க தானுமவர்

எமதூத னாக இங்கேவந்தா னென்பாரும்
குத்துயி ரோடே கும்பிட்டு வீழ்வாரும்
பிள்ளை தனைநினைந்து பெருமூச்சு விடுவாரும்
இன்று முடிந்ததென்று எண்ணி விழுவாரும்
ஆதி சிவனுக்கு அபயமென்று வீழ்வாரும்

ஈட்டிக்கோல் முன்வைத்து எண்ணி யழுவாரும்
அச்சமத்த நாட்டுக்கு அச்சம்வந்த தென்பாரும்
கள்ளர்ரெல்லாம் புலம்பி கைகுவித்து வீழ்வாரும்
தன்னரசு நாட்டுத் தனிக்காட்டுக் கள்ளரெல்லாம்
கொக்கரித்துச் சேனை கொடிபடை யத்தனையும்

வளைதடியும் சக்கரமும் வகையுடனே எறிந்தார்கள்
ஈட்டிக் கோலாலே எறிந்தார்கள் வீரையனை
கள்ளர் படைபொருத காரணனும் தென்மதுரை
கண்கள் சிவந்து கடுங்கோபம் தானாகி
ஐவிரலிக் கண்ணிரெண்டும் செவ்வரளி பூத்ததுபோல்

வாயா லுதிரம் வலதுகண்ணால் செஞ்சாரல்
மட்டற்ற கோபமுடன் மதுரா புரித்துரையும்
வாகுதார் பெரியகத்தி வகையுடனே தானெடுத்துக்
கொக்குத் திரளிலே ஆளிவந்து பாய்ந்தாற்போல்
பொல்லாத வீரையனும் பொங்கியே வீசலுற்றார்

வீரையன் படைபொருத மேலோகத் தேவர்களும்
தேவதைக ளெல்லோரும் சிறப்புடனே பார்த்திருந்தார்
அப்போது வீரையர்க்கு அதிகோபம் முண்டாகிக்
கண்கள் சிவந்து கடுங்கோபந் தானாகி
ஐவிரலிக் கண்ரெண்டும் செவ்வரளி பூத்ததுபோல்

கள்ளர்படை யத்தினையும் கருவறுத்துத் தான்குவித்தான்
துண்டந் துண்டமாகத் துணித்தாராம் முத்தயனும்
கொல்லி மலைபோலே குமித்தானாம் தென்மதுரை
ரணகொலுவு தானிருந்து நளினமுள்ள வீரையனும்
அல்லும் பகலும் அறுபது நாழிகையும்

நாலு திசையதிர நன்றாய்க் கொலுவிருந்தான்
ரத்தினமணி வீரையனும் ரணகொலுவை விட்டிறங்கி
மதுரையைத் தான்நோக்கி வண்டத்துரை வீரையனும்
வெள்ளானை மேலேறி விருதுபெற வாரானாம்
பதினெட்டு மேளம் வாத்தியங்கள் தான்முழங்கப்

பஞ்சவர்ண டால்விருது பக்கமே சூழ்ந்துவர
மதுரைத் திசைநோக்கி வருகிறார் ஆண்டவனும்
வெள்ளானை மேலேறி விருதுபெற்று வாராராம்
பதினெட்டு மேளம் வாத்தியங்கள் தான்முழங்க
வெட்டி விருதுபெற்று வீரையனு வாராராம்

என்றுசொல்லித் தூதுவர்கள் இதமுடனே ஓடிவந்து
கச்சித் திருமலையன் கனத்தக் கொலுவுமுன்னே
திறமான தூதுவர்கள் செப்பலுற்றார் அந்நேரம்
கச்சித் திருமலையன் காதிலே தான்கேட்டுச்
சந்தோசப் பட்டு தாதியரைத் தானழைத்து

ஆயிரம்பேர் தாதியர்க்கு மேலான தாதியரே
தேனாச்சி மீனாட்சி செண்பகப்பூ நாச்சியரே
ஆனந்த வல்லி அங்கயற்கண் மீனாட்சி
பச்சை நிறத்தாளே பவளக் கொடியாளே
கொழுந்தி செவந்தி குங்குமப்பூ மேனியரே

அங்கயற்கண் மீனாட்சி அம்மனுக் குகந்தவளே
மாசுபடா பத்தினியாள் மானத்தருந் ததியாள்
ஆலாத்தி வெள்ளையரே அன்புடனே தானழைத்து
இந்தப் படிக்கு இயல்வான தாதியரே
வாருமடி தாதியரே ஒருவார்த்தைக் கேளுமடி

கள்ளர் பத்துநாடும் கருவறுத்த வீரனுக்கு
வெட்டி விருதுபெற்று வீரையனும் வாரானாம்
ஆலாத்தி தானெடுங்கள் அன்புடனே நீங்களும்தான்
வீரையர்க்கு ஆலாத்தி விதமுடனே தானெடுங்கள்
வாருங்கள் என்றுசொல்லி வரிசையுடன் அனுப்பிவைத்தார் 1575

ஆலாத்தி சோடித்தார் அஞ்சுலட்சம் தாதியர்கள்
முத்தினா லாலாத்தி மூவாயிரங் கோடி
பவளத்தா லாலாத்தி பதினா யிரங்கோடி
ஆலாத்தி சோடித்தார் ஐந்நூறு தாதியர்கள்
ஆணிமுத்து வீரையர்க்கு அன்பாகச் சுற்றினார்கள் 1580

அஞ்சுலட்சம் தாதியர்க்கு மேலான தாதியரே
ஆலாத்தி வெள்ளையரை ஆணிமுத்து வீரையனும்
ஏறிட்டுப் பார்த்தாராம் எண்ணமற்ற காளையரும்
இருங்காணும் பெண்ணே நீ எங்குதப்பப் போய்றா நீ
என்றுசொல்லி மதுரை இதமாய் மனதிலெண்ணி 1585

ஆலாத்திப் பெண்களுடன் ஆணிமுத்து வீரையனும்
துருசாகத் தான்நடந்தான் துரைசாமி அப்போது
வருகின்ற சப்பிரமதை வடுகத்துரை தான்பார்த்து
உப்பரிகை மேலிருந்து உம்மையுடன் பார்த்திருந்தார்
வண்டத் துரையும் வள்ளாளன் தென்மதுரை 1590

ஆனையை, விட்டிறங்கி அதிர நடந்துவந்து
பொம்மியம்மாள் அரண்மனைக்குப் பெருமையுட னேபோய்
கட்டுவர்க்கம் தான்விளைத்து காரணனு தென்மதுரை
சலக்கப் புரையிலே தான்போய் நின்றுகொண்டு
வெந்நீர் கொண்டு வீரையனும் தான்குளித்து 1595

சாப்பிட் டிளைப்பாறித் தான்படுத்துப் பஞ்சணைமேல்
மெத்தையின் மேலிருந்து மெள்ள எழுந்திருந்து
ஆலாத்தி வெள்ளையின்மேல் ஆசைகொண்டு வீரையனும்
தீராத ஆசைகொண்டு சீக்கிரமாய் எழுந்திருந்து
கட்டுவர்க்கம் தானணிந்து கனத்த பணிபூண்டு 1600

பள்ளியறை விட்டுப் பாங்கான முத்தயனும்
சிலிநல்லி கோட்டைவிட்டுச் சீக்கிரமாய்எ ழுந்திருந்து
கோட்டை தனிலேறி குதித்தான்காண் அம்மானை.
உல்லாசக் காரன் ஒயிலழகன் வரும்போது
அங்கையற்கண் அம்மனுக்கு அடிபணியும் வெள்ளையம்மாள்

மீனாட்சி சன்னதிக்கு மீனாம்பா வெள்ளையம்மாள்
தூங்குமஞ் சக்கட்டில் துலங்க அலங்கரித்துப்
பஞ்சணை மெத்தையின்மேல் படுத்திருக்கும் வேளையிலே
நினவு தெரியாமல் நித்திரை செய்கையிலே
வண்டத் துரைச்சாமி வள்ளாளன் தென்மதுரை

உல்லாச மாக ஒயிலழகன் தென்மதுரை
விதிப்பயனே அறியாமல் மெல்லியர்மே லாசைகொண்டு
மதிலேறித் தான்குதித்து மண்டபமுந் தான்கடந்து
வெள்ளையம்மாள் வாசல் முன்பாக வந்துநின்று
கள்ளர்வண்டர் போலே காரணனும் தென்மதுரை

பலுக்கினி வாசல்வழி பாங்குடனே தான்நுழைந்து
பத்தினியாள் பள்ளிகொண்ட பஞ்சணை மெத்தையின்மேல்
இருந்து நினைந்தான்காண் ஏற்றமுள்ள வீரையனும்
மங்கையரைத் தானெழுப்ப [64]வாயசம் தானுமில்லை
கன்னியுட தன்னிலவு கண்டறியப் போகாது

என்றுசொல்லி வீரையனும் இதமுடனே தானினைந்து
தட்டி யெழுப்பினால் தைய லெழுந்திருப்பாள்
கூவென்னா வெள்ளையளும் கோவில் பரிசனங்கள்
வந்து நிரைந்து வழிமறித்துக் கொள்வார்கள்
என்று பலநினைவாய் எண்ணியே தானினைந்து

அட்டாலைச் சொக்கர் அங்கையற்கண் மீனாட்சி
மூவர் துணையென்று மூர்க்கமுள்ள தென்மதுரை
இங்கொன்று பண்ணினால் ஏற்காது ஈசுபரிக்கு
என்றுசொல்லி வீரையனும் எழுந்திருந்தா ரந்நேரம்
தோளிலே போட்டிருந்த துப்பட்டி தனைவிரித்து

மெள்ள நலியாமல் மெல்லியரைத் தூக்கிவைத்து
கட்டி யிறுக்கிக் காரணனுந் தென்மதுரை
தூக்கியே மெள்ள தோள்பாரம் தான்போட்டு
மாளிகையை விட்டு மண்டபமுந் தான்கடந்து
கோவில் வாசல் குதித்துமெள்ளத் தானிறங்கிப்

பொல்லாத வீரையனும் பொறுமையுடன் தான்நடந்தார்
தானிருக்குங் கோட்டை தாண்டிக் குதிக்கையிலே
கண்டாரே சேவுகரும் கள்ளனென்று தான்பிடித்து
ஆரென்று சொல்லி அதட்டியே தான்கேட்கத்
தங்கதுரை வீரையனும் தனஞ்சயனும் தானுமப்போ

தோள்பாரம் தான்வாங்கி சுகமுடனே முன்வைத்து
என்னசொல்லப் போறமென்று ஏங்கி முகம்வாடி
பத்தினியைக் கொண்டுவந்த பாவம் பலித்ததென்று
மனதிலே எண்ணி மயங்கியே தானிருந்தார்
ஒன்றும் தெரியாத ஊமையனே போலிருந்தார்

பேசத் தெரியாத பேயனே போலிருந்தார்
அப்போது சேவுகரும் அடவாக ஏதுரைப்பார்
எந்தவூரடா நீதான் இயல்பாகச் சொல்லுமடா
உள்ளதைச் சொல்லாட்டி உயிர்த்தூண்டி போட்டிடுவேன்
வந்த விடமும் வகைவிவரஞ் சொன்னாக்கால்

வீரையர்க்குச் சொல்லாமல் விட்டிடுவோம் உந்தனைதான்
இல்லாது போனால் எசமானிடஞ் சொல்லிப்
பண்ணாத கீர்த்தி பண்ணிவைப்போம் பாதகனே
என்றுசொல்லித் தானும் இதமுடனே தான்கேட்க
வாயைத் திறவாமல் மறுவார்த்தை பேசாமல்

ஒன்றுந் தெரியாத உத்தமனைப் போலிருந்தான்
சேர்வைக் குறிக்காரர் சேர்ந்ததொரு ராணுவங்கள்
எல்லோருங் கூடி ஆகட்டு மென்றுசொல்லி
ஏற்றதொரு வீரையனை எழுப்பினதே ஆனாக்கால்
வாளுக் கிரையிடுவான் மதுரை மகாமுனியும்

இப்படிப் பலநினைவு இதமுடனே தானினைந்து
திருமலைநா யக்கருக்குச் சேதிசொல்லி வாருமென்று
அனுப்பிவைத்தார் தூதுவரை ஆனதொரு சேவுகரும்
தூதுவரும் போய் துரைராசர் மன்னவனை
ஆசார வாசல்நின்று அன்புடனே கூப்பிட்டார்

திருமலை நாயக்கர் செவியிலே தான்கேட்டு
யாரடா தூதுவனே அதிசயங்க ளுண்டோதான்
என்றுசொல்லி நாயக்கர் இதமுடனே தான்கேட்கத்
தூதுவனு மப்போ துரைராசர் மன்னவர்க்கு
அய்யாவே சுவாமி அதிசயங்க ளொன்றுமில்லை

உள்கோட்டை தானிருந்து [65]உம்மையுடன் கன்னமிட்டு
கோட்டை தனிலேறிக் குதித்துமெள்ள வருகையிலே
கள்ளனையுங் கண்டு கைப்பிடியாய்த் தான்பிடித்தோம்
யாரென்று சொல்லி அதட்டியே தான்கேட்டோம்
வாயைத் திறவாமல் மறுவார்த்தை சொல்லாமல்

-----------

[62]. பரிஞ்சு – வாட்பிடி.   [63]. ஐவிரலி - கொவ்வை

[64]. இச்சக மொழி முதலியவற்றால் பிறரை வீசப்படுத்துதல்

[65]. உண்மை என்பதனை வழக்காற்றுச்சொல் உம்மை எனக்குறிக்கப் பட்டுள்ளது.

-------------

ஊமை யனைப்போல உட்கார்ந் திருக்கிறான்
மதுரை வீரையனுக்கு வகையுடனே தானுரைத்தால்
வாளுக் கிரையிடுவான் வண்டத் துரைவீரையனும்
என்று சொல்லிச் சேவுகரும் இதமுடனே எனையழைத்து
அறிக்கையிட்டு வரச்சொல்லி அனுப்பிவைத்தா ரிப்போது

நல்லதென்று சொல்லி நாயக்க ரதுகேட்டு
இன்னேர மேசென்று ஏற்றதொரு கள்ளனைத்தான்
மாறுகால் மாறுகை வாங்குமென்னு தானுரைத்தார்
உத்தாரம் பண்ணி (யுடனே அனுப்பிவைத்தார்
நல்லதென்று சொல்லி நலியாம லோடிவந்து

தூது வனும்போய்ச் சொல்ல லுற்றாரப்போது
இந்நேரமே சென்று ஏற்றதொரு கள்ளனைத்தான்
கால்கை வாங்கக் கட்டளையு மிட்டார்காண்
என்றுசொல்லித் தானும் இதமுடனே தானுரைத்தார்
அந்தச் ணமேதான் ஆணிமுத்து வீரையனை

எண்ணற்ற சேவுகரும் இதமுடனே கீர்த்திபண்ணி
மாறுகால் மாறுகை வாங்கிவிட்டார் வீரையனை
வண்டத்துரை வீரையனும் (..) தென்மதுரை
ஆதி சிவனுக்கு அபயமென்று - தானினைந்து
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே

கங்குல் விடிந்து கதிரோனும் வந்துதித்தான்
பொழுது விடிந்தபின்பு 'போய்நல்ல ( )
ஆணிமுத்து வீரனென்று எல்லோருந் தானறிந்து
அய்யோ சிவனேயென்று அறியாமல் செய்தோமே
வீரைய னென்று விதமுடனே தெரியாமல்

என்று சொல்லிச்சேவுகரும் இதமுடனே கண்கலங்கிக்
காலிலே விழுந்து கதறி யழுவாரும்
ஆரோதா னென்று அறியாமல் செய்துவிட்டோம்
என்று சொல்லிச் சேவுகரும் இதமுடனே புலம்பலுற்றார்
பொங்கியே சேவுகரும் புலம்பி யழுகலுற்றார்

உலையிலிடு மெழுகதுபோல் உள்ளமெல்லாம் தானுருகி
என்றுசொல்லித் தானும் ஏங்கி யழுகலுற்றாள்
மன்னவரே என்சாமி வந்தவகை சொல்லுமென்றாள்
பொம்மியருங் கேட்கப் புண்ணியனும் தென்மதுரை
வாருமடி பொம்மி வந்தவகை சொல்லுகிறேன்

ஆதிசிவன் பிர்மாவும் அன்பான மாயவரும்
கூடி எழுதினதைக் குறைப்பாரோ வையகத்தில்
எழுத்தைத் துடைக்க எவராலும் முடியாது
பொம்மியரே நானும் பூமியி லிருப்பதில்லை
மீனாட்சி பொற்பாதம் விருப்பமுடன் சேர்வனடி

[66]அரைச்சணம் நானிருக்க அதிகார மில்லையடி
என்றுசொல்லி வீரையனும் இதமுடனே தானுரைத்தார்
ஆரணங்கு பொம்மி அதுசேதி தான்கேட்டு
மன்னவனே யுன்னைவிட்டு மண்ணி லிருப்பதில்லை
வருவேன்காண் குணமுள்ள ராசமன்னா

-------------

[66]. சணம்- நொடிநேரம்

-------------

என்றுசொல்லி பொம்மி இதமுடனே தான்நடந்தாள்
வைகை நதியிலே வாள்மயிலாள் ஸ்நானம்பண்ணிக்
கூந்த லுதறிக் கோடாலி தான்முடிந்து
கூறை யுடுத்திக் கோலப் பணிபூண்டு
வாகுசுட்டி கட்டி மயிரால் பிறைமுடித்துக்

காதிலே ஓலையிட்டுக் கழுத்தில் சரமணிந்து
ஆபரண மெல்லாம் அன்பாகத் தானணிந்து
சிவசிவா வென்று திருநீறு தானணிந்து
அரகரா மீனாட்சி அடியாளும் வாறேனம்மா
சிவசிவா சொக்கலிங்கம் சீர்பாதங் காணவென்று

அடியாளும் வாறேனய்யா ஆனசொர்க்கம் தரவேணும்
சாக வரங்கோரிச் சமுத்திரத்தில் தானிருந்து
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
ஆலாத்தி வெள்ளை ஆண்பெண் மங்கையரும்
வீரையன் முன்வந்து விதமுடனே ஏதுரைப்பாள்

வாருங்காண் ராசமன்னா ஒருவார்த்தை சொல்லக்கேளும்நீ
ஆனதிரு மேனிக்கு அசடுவந்து சேர்ந்ததுகாண்
துன்பம்வந்து நேர்ந்ததென்று துயரப்பட வேண்டாங்காண்
மன்னவனே யுந்தனுக்கு வரந்தருவாள் மீனாட்சி
தெய்வமாய் நின்று தேசத்தை ஆள்வீர்காண்

மீனாட்சி யம்மன் வேண்டிய வரந்தருவாள்

மதுரை வீரனென்று மண்டலத்தா ரெல்லோரும்
கொண்டாடிப் பூசையிட்டுக் குணமுடனே கைதொழுவார்
ஆண்டவனே சுவாமி அடியார்க்குப் புத்திசொல்லும்
கைதொட்டு நீஎடுக்க என்கற்புக் குலைந்ததுகாண் 1745

ஆசையுடன் நீரெடுக்க அடியாளு மானேங்காண்
என்னுயிர் மன்னவனே யிங்கிருக்கம், போறதில்லை
கூட வருவேன்காண் குணமுள்ள ராசமன்னா
மண்ணி லுயிரை வைத்திருக்கப் போறதில்லை
என்றுசொல்லி வெள்ளையரும் இதமுடனே வீற்றிருந்தாள் 1750

பட்டணத்தி லுள்ள பரிசனங்க பரிசனங்க ளெல்லோரும்
இதுசேதி கேட்டு எல்லோரு மப்போது
மகாதேவன் தன்பலத்தை வாங்கினார் ஈசுபரரும்
உனக்கு வருவினையோ உத்தமனே சொல்லுமென்று
மண்ணும் மரமும் வாய்விட் டழுகுதய்யா 1755

ஆணிமுத்து வீரையர்க்கு அபக்கேடு வந்ததென்று
திருமலை நாயக்கர் சேதி தனைக்கேட்டு
அன்பான பிள்ளைக்கு அசடுவந்து நேர்ந்ததென்று
ஆசார வாசல்விட்டு அலறியே தான்குதித்து
ஆடை குலைய ஆபரணந் தான்குலுங்க 1760

பல்லக்கு ஏறாமல் பரியின்மேற் கொள்ளாமல்
ஓட்டமாய் ஓடிவந்து உத்தமனைத் தான்பார்த்து
அப்பா மகனேயென்று அலறியே போய்விழுந்தார்.
கட்டி யணைத்து என் கண்மணியே நீதானும்
திருச்சினாப் பள்ளிவிட்டுத் தென்மதுரை வருகையிலே 1765

பொன்னான மேனியைப் போக்கடிக்க வந்தாயோ
அப்பா மகனே என் அன்புள்ள வீரையனே
கட்டி மகனேஎன் கண் ணாளா வீரையனே
உன்னைப்போல் பிள்ளை உலகத்தில் காண்பேனோ
கள்ளர்பத்து நாடும் கருவறுத்து வந்தீரே 1770

வந்ததே போதுமென்று மகிழ்ச்சியா நானிருந்தேன்

உந்தனுக்குத் தானும் உகந்தபெண் வேண்டுமென்று
எந்தனுட பெண்மேலே இச்சையாய் வந்தாலும்
கூட்டிவந்து நானும் கோலமுடன் மாலையிட்டுக்
கண்ணழகு பார்ப்பேனே கட்டழகா வீரையனே

வெள்ளையளே வேணுமென்று விரும்பியே சொன்னாலும்
கூட்டிவந்து நான்தருவேன் கொற்றவனே வீரையனே
வெள்ளையளைத் தானெடுத்து வெளிப்பட்டு வருகையிலே
காவலர்கள் கண்டு கைப்பிடியாய்த் தான்பிடித்து
ஆரென்று சொல்லி அதட்டியே கேட்டாரே

நான்தாண்டா வீரனென்று நலமுடனே சொன்னாக்கால்
இந்த அபகீர்த்தி ஏன்வரும் வீரையனே
என்று சொல்லித் திருமலையன் ஏங்கியே தான்புலம்பி
மீனாட்சி சன்னதிக்கு விருப்பமுடன் தான்போய்
அம்மனுட பாதத்தில் அடிவணங்கித் தெண்டனிட்டுத்

தாயே பராசக்தி தமியனான் செய்தபிழை
கொண்டு பொறுத்துக் குழந்தையைக் காருமம்மா
சிறியோர்கள் செய்தபிழை பெரியோர் பொறுக்கவேணும்
ஆயிபர மேசுபரியே ஆனவரம் தரவேணும்
நான் கேட்ட வரந்தானும் கிருபையுடன் தரவேணும்

அன்பான பிள்ளைக்கு [67]அமடுவந்து நேர்ந்ததம்மா
கள்ளர்பத்து நாடும் கருவறுத்த வீரையர்க்குத்
தெள்ளுமைக் காரனுக்குத் தீங்குவந்து நேர்ந்ததம்மா
வந்தவினை நீக்கி வரந்தர வேணுமம்மா
அறுத்தகை கால்வளர அன்பாய் வரந்தருவாய்

------

[67]. அமடு-சிக்குதல்

---------

வரந்தர வேணுமம்மா மாதாவே என்தாயே
வணங்கியிரு கைகூப்பி மலரடியைத் தான் வணங்கி
மனமுங் குளிர்ந்து மனோமணியு
கேட்கும் பொழுது கிருபையுள்ள பத்தினியாள் மேதுசொல்வாள்

கைகால் வளரக் கட்டளையு மிட்டாளே

அறுத்தகை கால்வரை அம்மணியும் விடைகொடுத்தாள்
விடைவாங்கிக் கொண்டு வேகமாய் வந்தாராம்
மண்டபம் விட்டு வாராரே வாராரே திருமலையன்
மதுரை யிருக்கும் மண்டபத்தில் வந்துநின்று
பார்க்கு மிடத்தில் பாங்கான வீரையர்க்குக்

கால்கைகள் தான்வளர்ந்து கட்டழகன் வீற்றிருந்தான்
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
வேடிக்கை பார்த்து வீற்றிருந்தார் தேவரெல்லாம்
அப்போது கன்னியர்கள் அடவாக ஓடிவந்து
வீரையன் பாதம் விதமுடனே தெண்டனிட்டுத்

தெண்டனிட்ட மங்கையரும் தேவியரும் தான்பார்த்து
ஆதிசிவன் மாயவரே அன்பர் மனதிலெண்ணி
அழகிய சொக்கரையும் அன்பாய் மனதிலெண்ணி
மனதிலே தான்நினைத்து வகையா யிருவருந்தான்
மீனாட்சி கிருபையினால் வீரையன் எழுந்திருந்து

கால்கை வளர்ந்து கடுக எழுந்திருந்து
திருமலை நாயக்கர் சீக்கிரமாய் ஓடிவந்து
வாருங்காண் ராசாவே வார்த்தைசொல்லக் கேளும்நீ
மறுப்படா வம்மிசத்தில் வந்து பிறந்தேன்நான்
மறுப்படா மேனியிலே மறுப்படவும் ஆச்சுதுகாண்

மண்ணி லிருப்பதில்லை மாய்வதோ நிச்சயங்காண்
பெண்ணாலே நம்முயிரு பொன்னுலகம் சேருதய்யா
பிருமதே வன்யெழுத்தை விலக்க முடியாது
அன்று எழுதினதை அழித்தெழுதப் போகாது
என்றுசொல்லி வீரையனும் இப்படிக்குத் தானுரைக்கக்

கருத்தில் திருமலையர் காதாலே தான்கேட்டுக்
கண்கலங்கி ராசாவும் கதறி யழுதாராம்
அழுதுமந்த ராசாவும் அவர்முகத்தைத் தான்பார்த்து
என்னசொல்லப் போறேன் ஏற்றமுள்ள சேவுகனே

மேனியைக் காட்டி விளக்கநீர் வந்தீரோ

எண்ணமற்ற காளையைப்போல் எனக்குதவி ஆகுமோ
திருச்சினாப் பள்ளிவிட்டு தென்மதுரை வருகையிலே
பொன்னான மேனியைப் போக்கடிக்க வந்தாயோ
என்று புலம்பி ஏங்கி முகம்வாடி
முத்துப்போல் கண்ணீரை முகத்தோடு சோரவிட்டார்

மாரளவு கண்ணீரைத் தாரைவிட்டுத் தான(ழுக)
பொல்லாத முத்தயனும் பொறுமையுடன் தான்பார்த்து
வாருங்காண் ராசமன்னா வார்த்தைசொல்லக் கேளும்நீ
வாழ்வு பெருஞ்செல்வம் மயக்கமிது ராசாவே
நீர்மேல் குமிழி நிச்சமத்த தன்வாழ்வு

என்று இருந்தாலும் இறப்பதே நிச்சயங்காண்
ஆகையி னாலே அழுகவே வேண்டாங்காண்
சலித்துநீர் தானழுக தருமமல்ல ராசாவே
என்றுசொல்லி வீரையனும் இதமுடனே தானுரைத்தார்
வாரி யெடுத்து மார்போட தானணைத்துக்

கண்ணீர் தனைத்துடைத்துக் கலங்க நீ வேண்டாங்காண்
இருவருங் கூடி ஏற்கவே தான்நடந்து
ஆசார வாசல் அடவுடனே தான்கடந்து
மாந்தோப்புக் குள்ளே வைகைக்கு மேல்புறமாம்
நாற்சமுக்க மாக நன்றாய்க் குழியைவெட்டி

சந்தனக் கட்டைகொண்டு தயவாகத் தானடுக்கி
தீவளர்க்கச் சொன்னார் தீர்க்கமுள்ள வீரையனும்
அண்டங் கிடுகிடுடென ஆகாசம் பொறிபறக்கத்
தீக்குழியைச் சுற்றித் திறமாகப் பந்தலிட்டுச்
சாத்திரங்க ளெல்லாம் தயவாக உண்டுபண்ணி

ஆலாத்தி சுத்தும் ஆனபெண்ணாள் வெள்ளையரும்
ஆசை யுடன்கூடி அடவுடனே வாழ்ந்திருக்கப்
பொன்னினந் திருமேனி பொறுமையுள்ள பொம்மியரும்
இருவரையும் தானழைத்து ஏற்றமுள்ள வீரையனும்

சனத்துக்கோ ராயிரம்பொன் தான்கொடுத்து வீரையனும் 1860

வாருமடி பெண்ணேஒரு வார்த்தை சொல்லக் கேளுமடி
கன்னி யிருவரையும் கைலாசஞ் சேருமென்றார்
என்றுசொல்லி வீரையனும் இயல்புடனே தானுரைத்தார்
அப்போது கன்னியர்கள் அதுசேதி தான்கேட்டுக்
காதினால் தான்கேட்டுக் கன்னியருந் தானுமப்போ 1865

வைகையிலே ஸ்நானம்பண்ணி மயிராத்திப் பின்போட்டு
இழையாயிரம் பொன்பெற்ற இந்திரவர்ணப் பட்டுடுத்திச்
சருவா பரணமெல்லாம் தானெடுத்து மேல் பூட்டி
பூவையர்கள் இருவருந்தான் பூச்செண்டு கைபிடித்து
எலும்பிச்சங் கனிபிடித்து இயல்பா யிருவருந்தான் 1870

அரகரா வென்றுசொல்லி அணல் குழியைச் சுற்றிவந்து
அழகிய சொக்கரையும் அங்கயற்கண் அம்மனையும்
தியானித்துக் கொண்டு தீக்குழியைச் சுற்றிவந்து
பறராச மன்னரெல்லாம் பக்கமே சூழ்ந்துவரப்
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளெல்லோரும் 1875

வந்து நல்ல கூடி வகையாகத் தான்கூடி
ஆதிசிவன் மாயவரும் அன்பானத் தேவர்களும்
கைலாச மேயிருந்துக் காரணமாய்ப் பார்த்திருந்தார்
இருவருங் கைகோர்த்து இதமுடனே தான்குதித்தார்
ஆகாசம் பூமி அம்பாய்ப் பறந்தாற் போல் 1880

வீரையனு மப்போது விதமுடனே ஓடிவந்து
தீக்குழியை மூடி சிறப்பாய் கடன்தீர்த்து
நன்மைகளும் தின்மைகளும் நன்றாகத் தான்பண்ணி
வைகை நதியில் வகையாக ஸ்நானம்பண்ணி
பொற்றா மரைக்குளத்தில் போயிறங்கி ஸ்நானம்பண்ணி 1885

கோடாலி முடியவிழ்த்து குளத்திலே ஸ்நானம்பண்ணி
அட்டாலைச் சொக்கரையும் அங்கயற்கண் அம்மனையும்
தியானிச்சு அப்போது தீர்க்கமுள்ள வீரையனும்
சிவசிவா வென்றுசொல்லித் திருநீறு தானணிந்து

பாத சரமணிந்து பஞ்சாட்சர மணிந்து

காலில் சதங்கையிட்டுக் கைப்பிரம்பு தானெடுத்துப்
பார்த்தனு மப்போ பறையனைப்போல் வேசங்கொண்டு
மாடொறுக்கும் பெரியதடி [68]மதகுளிரும் தோளில்வைத்து
கன்னறுக்குஞ் [69] சூரி கச்சைப்புரை தன்னில்வைத்து
மாடறுக்குஞ் சூரி வலதுபுறம் தான்சொருகி

-----------

[68]. குளிர் - தட்டை ஏனும் ஒலி செய்யும் சாதனம்

[69]. சூரி - மடக்குக்கத்தி

------------

வாயா லுதிரம் வலது கண்ணில் செஞ்சாரல்
கண்ணா லுதிரம் கடைக்கண்ணால் நீர்போலப்
பொந்திப் பசியாலே பொல்லாத வீரையனும்
கண்ணில் பொறிபறக்கக் காளைமுத்து வீரையனும்
உண்டுபின் தான்படுத்து உறங்குகின்ற வேளையிலே

நஞ்சுதின்று நஞ்சறுக்கும் நடுச்சாம வேளையிலே
அரண்மனையை நோக்கி அதட்டி வரும்போது
பட்டணத்தி லுள்ள பாரமுனிக ளெல்லாம்
பாதகன்முன் னேவந்து பாதம் பணியுதப்போ
சந்தியி லுள்ள தனிக்கருப்பு உள்ளதெல்லாம்

வண்டத்துரை வீரையனும் வார வழிதனிலே
எதிரே வரப்பயந்து இறப்பில் நுழைவதுவும்
எல்லா அதிசயமும் இன்பமுடன் தான்பார்த்து
மன்னன் அரண்மனையில் மதிலேறித் தான்குதித்துக்
கச்சித் திருமலையன் கனகரத்தின மாளிகையில்

சப்பிர மஞ்சக்கூடத்தில் தங்கத்திருப்ப் கட்டிலின்மேல்
உல்லாச மாசு ஒழுகுதலைக் காணிவைத்து
குத்து விளக்கெரியக் கோலப் பணிபூண்டு.
சந்தனம் கஸ்தூரி சவ்வாது புனுகணிந்து
மல்லிகைப்பூ முல்லை மரிக்கொழுந்து வாசமுடன்

பள்ளியறை மண்டபத்தில் பதுமைகளும் சித்திரமும்
இதனில் உன்னதமாய் ஏற்றமுள்ள ராசாவும்
பைங்கிளியும் தானும் பள்ளிகொண்டு தானிருக்கும்
வாசல் மணிமுகப்பில் வாசல்தொறும் [70]தலையாரி
முப்பது பேரும் முழிப்புடனே காத்திருக்க

------------

[70]. தலையாரி - காவற்காரன்

------------

இப்படிக் காத்திருக்கும். ஏற்றமுள்ள அரண்மனையில்
வந்தான் வீரனுந்தான் மதயானைப் போலேதான்
பொல்லாத தென்மதுரை பறையனைப்போல் வேசங்கொண்டு
கண்ணாலே தான்பார்த்துக் கைகொட்டித் தான்சிரித்து
ஆண்மையும் புசபலமும் அறிந்துமெல்லப் பார்ப்பமென்று

அஞ்சா மதயானை அடங்காத காளையிவன்
புலையனைப்போல் சொப்பனத்தில் பொறுமையுள்ள தென்மதுரை
அரட்டியும் சொப்பனமும் அலங்கோல மாகவும்தான்
வாயா லுதிரம் வலதுகண்ணால் செஞ்சாரல்
காளைமுத்து வீரையர்க்குக் கடுங்கோபந் தானாதி

கன்னறுக்குஞ் சூரி கடுசாகத் தானெடுத்துப்
பஞ்சகல் யாணி பதினாயிரம் குதிரைகளை
அரைநொடியில் தானும் அறுத்துமிகக் குமித்துப்
பீரங்கி வண்டி பிரபலமாய்த் தானிழுக்கும்
வண்டி எருது வாய்த்ததோ ரானையெல்லாம்

அதட்டிக் குலவையிட்டு ஆண்டவனுந் தென்மதுரை
மண்டியிட்டுத் தான்தட்டி மதுரை மகாமுனியும்
பார்த்த ரிசபமெல்லாம் பதறி விழுந்ததுவே
தாண்டிக் குதித்துத் தாடாளன் தென்மதுரை
பாதகத்துக் கஞ்சாத பழிகார வீரையனும்

தாண்டிக் குதித்து தாடாளன் தென்மதுரை

ஆனதொரு காளையெல்லாம் அடிவயிற்றில் சூரிகொண்டு
கால்வயிறு பசியாறி கல்கோட்டை தான்கடந்து
கட்டுத்துறை காவல்கொண்டு காரணனும் தென்மதுரை
உக்கிரானம் காக்கும் ஒருநூறு தலையாரி

படுத்திருக்கும் சாவடியில் பாங்குடனே தான்புகுந்து
தலையாரி யாவரையும் தான்பிடித்து ஒருகையிலே
சுத்தி யெறிந்தான்காண் சுத்தாலைக் கப்புறத்தே
அந்த இடம்விட்டு அப்புறமே தான்போய்
ஆனைகட்டும் லாயம் அஞ்சாமல் போய்ப்புகுந்து

மண்டியிட்டுப் பாய்ந்தான் மதயானை அப்போது
பார்த்து நல்ல வீரன் பாங்குடனே தான்சிரித்து
ஆனையை விட்டு அப்புறமே தான்போய்க்
கன்னிச் சிறுபெண்கள் கண்ணுறங்கு மண்டபத்தில்
உல்லாசக்காரன் ஒயிலழகன் தென்மதுரை

கன்னியர்கள் கிட்டே காளைமுத்து வீரையனும்
உல்லாசக் காரன் ஓயிலழகன் தென்மதுரை
கொஞ்சியே தென்மதுரை கோதையரை முத்தமிட்டு
அந்நேரமே தான் ஆனதொரு பெண்களெல்லாம்
அலறி எழுந்தார்கள் ஆனதொரு கன்னியர்கள்

கண்ட விடமெல்லாம் கனகூப்பா டானதுவே
அபய மென்றசத்தம் தானாச்சு அப்போது
காரணனும் தென்மதுரை கம்பத் தடியில்வந்தான்
அந்தநாள் சென்று அலைகதிரோன் வந்துதித்தான்
கஞ்சித் திருமலையன் காலமே யெழுந்திருந்து

காலுமுகஞ் சுத்திபண்ணிக் கனத்த பணிபூண்டு
கட்டியங்கள் கூற கவரி பரிமாற
நாக சுரமேளம் நாட்டியங்க ளாடிவர
வீரன் குறையொழிய வேறொன்று தானுமில்லை
அவன்கோ பத்தை யடக்கிக் குணமாகக்

கம்பத்தடியில் கனமாகப் பூசையிட்டுப்

பட்டண மெங்கும் பார முரசறைந்து
கந்திக்குச் சந்தி தனிக்கரும்பால் பந்தலிட்டுத்
துத்தியுடன் சாராயம் துரிதமுடன் தான்வைத்து
இந்தப் படிபண்ணி யெல்லோரும் கைமுகங்கால்

வீரனுட குறையாறி விதமுடனே நிற்குமப்பால்
அப்படிக்குப் பண்ணுமடா ஆலோசனை வேண்டாம்
யென்றுசொல்லித் தேவி இதமுடனே வாக்குரைத்தாள்
அப்போது திருமலையன் அன்புடனே தானெழுந்து
முக்கால் வலம்வந்து மூவிருக்கால் தெண்டனிட்டுத்

தெண்டம்பண்ணி வெளியில்வந்து திருமலையன் அப்போது
ஐநூறு பொன்னெடுத் தபிசேகம் பண்ணிவைத்துக்
கம்பத் தடியில் காளையுட திருவடியில்
[71]சுத்திகரம் பண்ணிச் சுகமுடனே செப்பனிட்டு
நாலுகால் மண்டபத்தில் நவரத்தினக் கால்நிறுத்தி

மண்டபமும் உண்டுபண்ணி வகையா யலங்கரித்து
அலங்கார நேத்தி அஞ்சுலட்சம் பொன்பெறும்
ஐநூறு கலஅரிசி கலஅரிசி ஆடுபன்றி கோழியுடன்
வேணுமென்ற பதார்த்தமெல்லாம் விதமாகப் பூசையிட்டுத்
தாக விடாய்நீங்கித் தங்கதுரை வீரையனும்

வீதிக்கு வீதி விதமுடனே பூசைமுகம்
சந்திக்குச் சந்தி தனிக்கரும்பு நறுக்கிவைத்துத்
தேங்காய் பழமும் திரளாகத் தானும்வைத்து
இப்படி வைக்கச்சொல்லி இதமாய் முறையறைந்தார்
அந்தப் படியாக அனைவோரும் கைமுகிஞ்சு

கர்த்தன் திருமலையன் கம்பத் தடியில்வந்து
நின்று நெடுநேரம் நேசமுடன் கைதொழுதார்
எனக்குத் துணையாக இயல்வாக வந்திருந்து
வந்த வினையை வகையாகத் திருமலைய்யா
இப்பவந்த வல்வினையை இப்பவே தீருமய்யா

முப்பேரு மிட்டு முப்பூசை போடுகிறேன்

வினைதீர வேணுமய்யா வேந்தன்முத்து வீரையனே
என்றுசொல்லித் திருமலையன் இதமுடனே கைதொழுதார்
கைமுகையு முன்னே காளைமுத்து வீரையனும்
அதட்டியே [72]சன்னதம் அவன்மேலே குலவையிட்டுத்

திருவாய் மலர்ந்து செப்பலுற்றா ரந்நேரம்
என்னை நினையாமல் இருந்தாயே நீர்தானும்
மந்திர மகாமுனியும் மனமகிழ்ந்து தானுரைத்தார்
தாரணியார் செய்தகுற்றம் தான்பொறுக்க வேணுமய்யா
குற்ற மெல்லாந் தான்பொறுத்துக் குடிகாக்க வேணுமய்யா

மதுரா புரித்துரையும் வாய்திறந்து செப்பலுற்றார்
மதுரை யறுகாதம் வாழ்மதுரை முக்காதம்
மதுரை யறுகாதம் வகையாகப் பேருமிட்டுத்
துள்ளுகுட்டி ஆயிரமாம் துரைமகனே [73] தந்தியென்றால்
[74]ஆசார வாசலிலே அன்புட னே [75]தந்தியென்றால்

என்குறையுந் தீந்தால் இயல்புடனே எழுந்திருக்கும்
ஆனை எருது அன்பான சீவனெல்லாம்
இப்ப எழுந்திருக்கும் என்மேலே குற்றமில்லை
இல்லாதே போனால் என்குறையும் தீராது
நல்லதென்று திருமலையன் நலமாக வந்தான்போய்

ஆயிரம் குட்டி அன்புடனே தான்பிடித்து
கொண்டுவந்து விட்டார் குணமுள்ள திருமலையன்
காவு கொடுத்தார்கள் காளைமுத்து வீரையர்க்கு
கானகத்தி லிடிமுழங்கக் [76]காந்தாள மானதுவே
காவல் முகத்தில் காட்டாத காளையரும்

சத்தமிட்டு அதட்டினார் தங்கமுத்து வீரையனும்
அனைவோருந் திடுக்கிடவே அரண்டுமிக நிற்கையிலே
அஞ்சாயே என்று அங்கொருவன் தான்மேலே
மந்திர மகாமுனியும் மதுரைமுத்து வீரையனும்
அதட்டியே சன்னதமும் அவன்மேலே தானும்வந்து

திருவாய் மலர்ந்து தேறுதலை சொல்லலுற்றார்.

மயங்க நீ வேண்டாம் மன்னவனே இப்போது
துயரத்தை விட்டுத் துரைராசர் மன்னவனே
என்று விபூதியள்ளி ஏகாந்த மாய்க்கொடுத்தார்
என்பேரு சொல்லி இதமுடனே போடுமென்று 2035

------------

[71] சுத்தரங்கம் என்றுளது. சுத்திகரம் - தூய்மைசெய்கை

[72]. சன்னதம் - ஆவேசம், தெய்வங்கூறல்

[73]. தந்தி என்றால் தந்தால் எனப் பொருள் கொள்க

[74]. ஆசாரவாயில் - தலைவாசல். வெளிவாயில்

[75]. தந்தி ஏன்றால் தந்தால் எனப் பொருள் கொள்க. [76]. காந்தாளம் - கோபம்

------------

கொண்டுபோய் போடும் குறையெல்லாம் தீருமென்றார்
விபூதி தான்கொடுத்தீர் வேதமுத்து வீரையனே
அப்போது திருமலையன் அன்பாகக் கைதொழுது
ஆனை படையுடனே அத்தனையும் தானெழுந்தால்
முப்பேரு மிட்டு முப்பூசை போடுகிறேன் 2040

அந்தப்படி தீருமென்று ஆண்டவனுந் தானுரைத்தார்
கொடுத்த விபூதியை குதிரைலாயம் தான்புகுந்து
தீர்த்தமும் புஷ்பமும் திருநீறும் தான்போட்டார்
அந்தச் சணமே அலறி யெழுந்திருந்து
சந்தோசப் பட்டுத் தானிருந்தார் நாயக்கரும் 2045

கோவில் பரிவார குருக்கள்மா ரத்தினையும்
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளத்தினையும்
அடிமைக் குடியாக ஆண்டவனும் கொண்டாராம்
என்றுமே சொல்லி ஈசுபரியும் வரங்கொடுத்தாள்
வரம் பெற்றுக்கொண்டு வந்தான்காண் அம்மானை 2050

கம்பத் தடியில் காரணமாய் வீற்றிருந்தான்
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
அப்போது திருமலையன் அடவாக ஏதுரைப்பார்
மதுரை யறுகாதம் வாழ்மதுரை முக்காதம்
அனையோரும் தாமறிய அடியுமென்றார் தவுலோசை 2055

வெள்ளிக் கிழமை வீரையர்க்குத் தானுமப்போ
முப்பூசை யென்று முறையறையு மென்றுசொல்லி
ஆடுபன்றி கோழியுடன் அன்புடனே வாருமென்று
ஆரொருவர் தானும் அசதியா யெண்ணாமல்
மெய்யென்று சொல்லி விருப்பமுட னெல்லொரும்

வந்து சேருமென்று வகையுடனே முரசறையும்
வீதிக்கு வீதி விதமாய் முரசறையும்
என்றுமே திருமலையன் எடுத்துரைத்தா ரப்போது
அந்த விதமாக அடியுமென்றார் பெருந்தமுக்கு
தமுக்கோசை கேட்டவர்கள் தானெழுந்து அப்போது

உலுப்பைகள் சேகரித்தார் உத்தமர்க ளப்போது
என்னென்ன தளவாடம் ஏற்கையுடன் தான்சேர்த்தார்
கம்பத் தடியில்வந்தார் காளைமுத்து வீரையனும்
மீனாட்சி பக்கம் விதமுடனே ஓடிவந்து
முக்கால் வலம்வந்து மூவிருகால் தெண்டனிட்டு

என்தாயே மீனாட்சி எனக்குநீ சொன்னபடி
அரைவயிறு பசியாறி அண்ணருட சன்னதிக்கு
என்றுசொல்லி வீரையனும் ஈசுபரியும் தான்மகிழ்ந்து
வாடா மதுரை வரிசையுள்ள தென்மதுரை
அரை வயிறுக்கு அண்ணருட சன்னதிக்கு

அழகர் பக்கம்போய் அன்பாய் வரம்வாங்கி
மந்திரிகள் சேனை மகிழ்ச்சியுடன் கூட்டமிட்டு
ஆசார வாசல்விட்டு அரண்மனையுந் தான்கடந்து
சொக்கருட சன்னதிக்குத் துருசாகத் தான்நடந்து
அங்கயற்கண் மீனாட்சி அம்மனுட சன்னதியில்

முக்கால் வலம்வந்து மூவிருகால் தெண்டனிட்டு
எப்போது மில்லாத இதுபுதுமை தானுமென்றார்
காணாத சொப்பனங்கள் காரணங்க ளானதென்ன
ஆனதென்ன ஈசுபரியே அதிசயங்க ளிப்போது
வகைவிபரம் உரைக்கவேணு மாதாவே என்தாயே

திரிபுர மெரித்த தேவிபர மேஷ்பரியே
பார்வேந்த னப்போது பாதச் சரணம்பண்ணி
வாழ்மதுரைச் சொக்கர் மனையாளும் தேவியப்போ
அப்பா மகனே அதிசயங்கள் சொல்லுகிறேன்
கேளடா இப்போது [77]கிருவிதமா யென்மகனே 2090

விதமாக வந்தவகை வேறொன்று தானுமில்லை
காரணமாய் வந்தான் கம்பத் தடிவீரன்
பட்டதொரு வீரையனைப் பராபரிக்க யில்லையென்று
பொந்தி பசிமெத்த பொல்லாத வீரனுக்கு
உத்தாரம் வாங்கி ஓடிவந்தா னிப்போது 2095

------

[77]. ...?

--------------

மஞ்சநல்ல பாவாடை வகையுடனே தோள்போட்டு
என்தாயே மீனாட்சி ஈசுபரியே என்றுசொல்லி
மீனாட்சி கோவில் விருப்பமுடன் தான்நோக்கி
காளைமுத்து வீரையனும் கடுசாய் வரும்போது
கல்லு மலைகளெல்லாம் கடுகுபொடி யாகுதய்யா 2100

பாதக் குறடுபட்டுப் பஞ்சாப் பறக்குதப்போ
சாமியுட திருமேனி தங்க ஒளிவிடுது
கெந்தபொடி கஸ்தூரி கிருவிதமாய் மணக்குதுகாண்
புனுகுசட்டம் தான்மணக்கும் பொங்கமுடன் வீரையன்மேல்
ஆண்டவன் வருகிறது வருகிறது அதட்டிதனைக் கேட்டு 2105

மதுரையறுகாதம் வாழ்மதுரை முக்காதம்
சேனைத் தளத்துடனே சீக்கிரமாய் வாராராம்
பட்டணத்திலுள்ள டரராசர் மன்னவரும்
வேடிக்கை தான்பார்த்து விதமுடனே ஓடிவந்து 2110

பதினெட்டு மேளம் வாத்தியங்கள் தான்முழங்க
மயில்விசிறி கொண்டு மன்னவர்கள் வீசிவர
பாதந் தனில்விழுந்து பாரமனுக் கேட்பாரும்

கேட்ட மனுக்கொடுத்து கிருபையுள்ள தென்மதுரை
எட்டி நடக்க எமலோகம் தத்தளிக்க

தேவலோ கந்தன்னில் தேவதைகள் பார்த்துநிற்க
வைகுந்த லோகத்தில் மாயவரும் பார்த்துநிற்க
அய்யரும் அம்மனும் அன்புடனே பார்த்துநிற்கச்
சொக்கருட கோவிலுக்குத் துரைவீரன் வருவதற்குப்
பவளக்கால் நாட்டிப் பசும்பொன் வளைபரப்பி

அபரஞ்சி கொண்டு அடவுடனே தான்மேய்ந்து
மேல்கட்டித் தூக்கும் விபரிதமாய் அலங்கரித்து
வாழைக் கம்பத்தால் வகையாய் அலங்கரித்து
நடபா வாடை நலமுடனே தான்விரித்துப்
பச்சைப் புனுகு பாதையெல்லாந் தான்தெளித்து

மருவும் கொழுந்தும் வாசமுள்ள செண்பகமும்
இருபுறமுந் தொங்கவிட்டு இதமுடனே யலங்கரித்துப்
பந்தல் வளைந்து பாவாடை மேல்நடந்து
ஆதி சிவாயென்று அன்புடனே தான் நடந்தான்
முக்கால் வலம்வந்து மூவிருக்கால் தெண்டனிட்டுப்

பொய்யாத சுவாமி பொறுமையுள்ள வீரையனும்
திருமலை நாயக்கரை திரும்பி முகம்பார்த்து
வாருமென்று சொல்லி வரிசையுடன் தானழைத்து
மீனாட்சி பொற்பாதம் விருப்பமுடன் சேர்வதற்கு
உத்தாரஞ் சொல்லுமென்று ஒருவார்த்தை தான்கேட்கத்

திருமலை நாயக்கர் திரும்பி முகம்பார்த்து
நெஞ்சு தவறி நினைவு தப்பிப் போகாமல்
கண்ணாலே நீர்சொரிய கலங்கியே ராசமன்னன்
ஆனமட்டும் சொன்னேன் [78] அமடுகொள்ளா வீரையர்க்கு
என்ன சொன்னபோதும் இனிநிற்கப் போறாயோ

-------------

[78]. அமடு - பொல்லாங்கு, மடிப்பு

---------------

மனதுக்கு ஏற்றபடி மன்னவனே யென்றுசொல்ல
அந்த நல்ல சேதி அடவுடனே தான்கேட்டுத்
துள்ளுகுட்டி வீரையனும் துரைசாமி அப்போது
போய்வாறே னென்று பொறுமையுள்ள வீரையனும்
பார்வதியாள் கோவில் பதினெட்டாம் படியேறி

என்தாயே மீனாட்சி எனக்கென்ன புத்திசொல்லும்
மதுரா புரித்துரையும் மாதாவைத் தான்கேட்க
ஆண்டியுட னாடு ஆண்டிச்சி தானிருந்து
கட்டாத காளிக்குக் காரணமாய் வந்தமன்னா
முந்தினமாலை முதல்மாலை யென்னு தன்றாள்

கம்பத் தடியில் காத்திருந்து பூசைகொள்ளும்
என்றுசொல்லி மீனாட்சி ஏற்க வரங்கொடுத்தாள்
நல்லதென்று சொல்லி நாட்டமுட னோடிவந்து
கம்பத் தடியில்வந்து காளைமுத்து வீரையனும்
கன்னறுக்குஞ் சூரி கையிலே தானெடுத்துப்

பார்வதியாள் தேவி பக்கமே போயிருந்து
ஒருகாலை மண்டியிட்டு உட்கார்ந்து வீரையனும்
கைச்சூரி கொண்டு கழுத்தறுத்தான் வீரையனும்
வீரனுட தன்சிரசு மீனாட்சி தன்காலில்
பாதமே கெதியென்று பக்கமே வீழ்ந்ததுவே

வண்டத்துரை வீரையர்க்கு வரங்கொடுத்தாள் மீனாட்சி
எல்லோருங் கூடி அலங்கரித்துக் கொக்கரித்து
வீரையனும் போய்ச்சேர்ந்தான் விடுதியில் தானுமப்போ
அவரவர் விடுதிக்கு அவரவர் போய்ச்சேர்ந்தார்
அந்தநாள் சென்று மத்தானா ளப்பொழுதில்

மதுரையுட பட்டணத்தில் வரும்பூசை யென்றுசொல்லிச்
சந்தோச மாகத் தனித்திருந்தான் வீரையனும்
வீராதி வீரன் மேகவர்ணன் ஏதுசெய்வான்
இந்தநல்ல பட்டணத்தில் என்னை நினைப் பாருமில்லை
நீதியு மில்லை நிச்சயமுந் தானுமில்லை

உள்ளபடி யாகுதென்று உத்தமனும் வீற்றிருந்தான்
அன்றுமுதல் இன்னாள்வரைக்கும் ஆகார மில்லாமல்
இல்லையென்று பார்த்து இருந்தானே தென்மதுரை
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளெல்லோரும்
வீரையனை நினையாமல் வீற்றிருந்தார் பட்டணத்தில்

பார்த்துமள்ள வீரையனும் பதறியே கோபங்கொண்டு
இப்படித் தானிருந்தால் ஏற்காது கலியுகத்தில்
என்று சொல்லி வீரையனும் எழுந்திருந்து அப்போது
மீனாட்சி சந்நிதிக்கு விதமுடனே ஓடிவந்து
முக்கால் வலம்வந்து மூவிருகால் தெண்டனிட்டு

என்தாயே மீனாட்சி எனக்குச்சொன்ன புத்தி என்ன
பட்டணத்தி லுள்ளபேர் பராபரிப்பா ராருமில்லை
அவர்களுடன் நீயும் ஆதிபர மேசுவரியே
பார்வதியே என்தாயே பார்த்து மிருந்தாயே
இப்படித் தானிருந்தால் என்வயிறு பசியாதேர்

தாயேநீ மீனாட்சி தாகம் பசிமெத்தவடி
எரியுதடி என்வயிறு என்தேகமெல்லாம் பத்துதடி
கோபமே வந்ததென்றால் குடிகேடன் நான்தாண்டி
பட்டணத்தி லுள்ள பரிசனங்க ளெல்லோரும்
கைகாட்டிச் சொன்னாக்கால் கால்கடிய வீரையனும்

உத்தாரம் பண்ணிவைத்தால் உத்தமியேன் தானும்
கொன்றுதின்று பசியாறி உன்கோவிலுக்கு வரும்போது
காவடியுந் தோள்போட்டுக் கம்பத்தடி வாறனம்மா
என்றுதான் சொல்லி ஈசுபரியைத் தான்கேட்க
யாருக்கு மடங்காத அஞ்சா மதயானை

வண்டக் குழந்தை வலுக்கார தென்மதுரை
கம்பத் தடிவீரா காரியமாய்ச் சொல்லுகிறேன்
துண்டநல்ல வீரா துடுக்குமெத்தப் பண்ணாதே
திருமலை நாயக்கர் திறமான அரண்மனையில்
உள்ளே நுழைந்து உபாயமாய் போய்வாடா

அருட்டியும் சொற்பனமும் ஆறாட்ட மயக்கமுமாய்ப்
பண்ணிவைத்துப் பூசை பாங்குடனே வாங்குமென்றாள்
உத்தாரம் பண்ணி உமையவள் மீனாட்சி
போடாநீ யென்று போற்றி விடைகொடுத்தாள்
எந்தாயே மீனாட்சி இதுபோது மென்றுசொல்லி

அங்கயற்கண் மீனாட்சி ஆலயத்தை மெல்ல
முக்கால் வலம் வந்து மூவிருகால் தெண்டனிட்டு
ஆலயத்தை விட்டுமெல்ல அதட்டியே தான்நடந்தான்
கம்பத் தடியில்வந்து காரணனும் தென்மதுரை
திருமலை நாயக்கர் செம்பொன்மணி மண்டபத்தில்

பார்த்து அந்தவீரையனும் பல்கடித்தா ரந்நேரம்
அடித்துடையைத் தட்டி அதட்டினான் காளைமுத்து
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
உத்தமன் வீரையர்க்கு உலுப்பைகள் வருகுதய்யா
[79]உலுப்பை வ வருகிற உண்மைகளை என்னசொல்வேன்

------

[79]. உலுப்பை பெரியோர் முதலியவர்களுக்களிக்கும் உண்பண்டம்

சாமான்னப; கோயில் முதலியவற்றிற்கு அனுப்பும் காணிக்கை

-------------

காவல் வருகிற காரணத்தை என்னசொல்வேன்
பொங்கல் வருகிற புதுமைகளை என்னசொல்வேன்
பட்டணத்திலுள்ள பரிசனங்க ளெல்லோரும்
வாழைக் கரும்பு வகையாகத் தான்நாட்டி
தூணுக்குத் தூண் தூண்டா விளக்கேற்றி

வீரையன் தானிருக்கும் விடுதியில் வந்துநின்று
மந்திர மகாமுனியும் மதுரைமுத்து வீரையர்க்கு
தாக விடாய்தீரத் தான்சேர்த்தார் [80] பானக்கம்
ஆயிரம் செவ்விளநீர் அன்பாகக் கண்திறந்து
இஞ்சி எலும்பிச்சை இயல்பாகத் தான்கலந்து

---------

[80]. பானக்கம் - சருக்கரை, ஏலம் முதலியன கலந்த குடிநீர்வகை

------------

ஆயிரம் அச்சுவெல்லம் அடவாய்ப் பொடியாக்கிப்
பானக்கம் செய்து பரிவாகமுன் னேவைத்து
தாகந் தணிந்து தண்ணிவெறிக் காரனுக்குக்
காவல் குட்டிதானும் கணக்கு வழக்குமில்லை
இப்படிக்குத் தான்சேர்த்து இருக்குமந்த வேளையிலே

திருமலை நாயக்கர் தீர்க்கமுடன் ஓடிவந்து
கம்பத் தடியில் காரணனு வந்துநின்று
மதுரையும் தானிருக்கும் மாணிக்க மண்டபத்தை
பொன்முலாம் பூசி போத அலங்கரித்து
பந்த லலங்கரித்தார் பார்வேந்தன் அப்போது

மண்டபத்தைச் சுற்றி மாணிக்கப் பந்தலிட்டார்
காலுக்குக் கால் காலை விளக்கெரியும்
பட்டுமேல் கட்டிப் பாங்காய் அலங்கரித்துப்
பூசைக்கு ஏற்றதொரு பொன்னுலுப்பைத் தான்சேர்த்துக்
கொத்தோட தேங்காய் குலையோட செவ்விளநீர்

நாணாக் கழிபோலே நானூறு செங்கரும்பு
மூங்கிக் கழிபோலே முன்னூறு செங்கரும்பு
குட்டியிலே ஆயிரமாம் குலைச்சாவ லாயிரமாம்
ஆடுபன்றி கோழி அடங்கலும் தான்சேர்த்துக்
கஞ்சா அபினி கலந்தொரு சாராயம்

ஆயிரம் [81]துத்திசாராயம் அன்புடனே தான்சேர்த்து
[82] மம்ம ருருண்டை [83] மதனகா மியப்பூவும்
தீவுச் சரக்கும் தேசத்துச் சாராயம்
கம்பத் தடியில் காத்திருந்து பூசைகொள்ளும்
மதுரைவீர அம்மானை மகிழ்ச்சியுடன் படித்தோரும்

----

[81]. துத்தி - உண்டற்குரியன [82]. மம்மர் - மயக்கம்

[83]. மதனகா மியப்பூ - ஒரு சரக்கு

----------------

சொல்லும் சொல்லுமென்று சுகமுடனே கேட்டோரும்
இன்னமும் சொல்லுமென்று இன்பமுடன் கேட்டோரும்
பரிசங் கொடுத்துப் பணம்பாக்குத் தந்தோரும்
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சற்றும் முசியாமல் வாழ்ந்திருப்பார் 2255

சந்திரரும் சூரியரும் தான்வருவார் வாழியதே !
இந்திரருந் தேவர்களும் இறைவனுந் தான்வாழி!
ஆகாயம் பூமி அந்திரமுந் தான்வாழி!
கேட்டவர்கள் எல்லோரும் கிளைகோத்திரம் வாழியவே!
படித்தோர்க ளெல்லோரும் பாக்கியங்கள் பெற்றிருப்பார்!! 2260

**மதுரைவீரையன் அம்மானை எழுதிமுடிந்தது முற்றும்**
**திருச்சிற்றம்பலம்**

---------

**தேவிசகாயம்**

[சர்வதாரி வருடம் மாசி மீ 2 s திங்கட்கிழமை காளியப்ப கவுண்டரூரிலே யிருக்கும் கொத்துக்கார கருப்ப கவுண்டன் மகன் ஸ்ரீபுண்ணிய குமாரன்எட்டியர் கவுண்டன் மதுரைவீரன் அம்மானை எழுதி முடிந்தது முற்றும் சம்பூரணம்.

வாலை ஞான சரசுபதி துணை
எட்டிக்கார கிருபா கடாச்சம்]

------------